நவ. 21 - 27, 2004 Nov. 21 - 27, 2004

24 பக்கங்கள்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI சுடர் ஒளி

வார மலர்

16.00





## சங்கராச்சாரியார் கைது!

2500 வருடங்கள் பழமையான சங்கரமடம் மர்மங்கள் துலங்குமா?

## அகவை 50 இல் பிரபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமவலுவுள்ள இரு படை அணிகள் குறித்து சர்வதேசத்துக்கு செய்திவிடுத்த புலிகள் 2

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான 15 பேர் கொண்ட குழுவினர், சட்ட அறிஞர்களோடு கலந்துரையாடுவதற்காக சமீபத்தில் ஜெனீவா சென்றிருந்தனர். ஜெனீவா விஜயத்தின் பின்பு ஜேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்தனர். அவர்களது விஜயம் இலங்கை அரசு வெளிநாடுகளில் மேற்கொண்டு வரும் புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை முறியடிக்க பெரிதும் உதவியது.

அந்த விஜயம் பற்றிய கண்ணோட்டமே கட்டுரை வடிவில் பிரசுரமாகி இருக்கிறது. கட்டுரையின் முதற்பகுதி கடந்த வாரம் பிரசுரமாகி இருந்தது. இது இரண்டாம் பகுதி.

ஈழப் போராட்டத்தில் 'கெரில்லா' பாணியிலான தாக்குதல்களை ஆரம்பித்து மரபு வழிப்படையாக சரித்திரங்கள் படைத்து, ஒரு நாட்டில்இராணுவ சமவலுவுள்ள இரு படையணிகள் செயற்படுகின்றன என்ற செய்தியை சர்வதேசத்துக்கு விடுத்தவர்கள் விடுதலைப்புலிகள்.

இராணுவத்துறையில் மட்டுமல்ல அரசியலிலும் எம்மால் முடியும் என்பதை தமது ராஜதந்திர செயற்பாடுகள் மூலம் சர்வதேசத்துக்கு நிருபித்துக் கொண்டிருப்பவர்கள் விடுதலைப் புலிகள்.

ஆனால், அவர்கள்மீது சுமத்தப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு காலத்துக்குக் காலம் பதில் அளித்து வந்தனர். ஆனால், அவற்றை ஏற்றுக்கொள்ள சர்வதேச சமூகம் தயாராகவில்லை.

சிறுவர்களைப் படைகளுக்குச் சேர்க்கிறார்கள். மாற்றுக்கட்சிகள், குழுக்களின் தலைவர்களை சுட்டுத் தள்ளுகிறார்கள் என்றெல்லாம் அவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்த வண்ணமே இருந்தன.

இந்த சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்களால் சந்தோஷப்பட்டு, குதூகலித்துக் கொண்டிருந்தனர் ஸ்ரீலங்கா அரசும், தென்னிலங்கைப் பேரினவாதச் சக்திகளும்.

சமாதானப் பேச்சுக்களை முன்நகர்த்துவதற்காக மேற்கொண்ட ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின் போது, தம்மீதான குற்றச்சாட்டுக்களுக்கு, ஆதாரத்துடன் துல்லியமாக பதில் அளித்து, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர் விடுதலைப் புலிகள்.

விடுதலைப் புலிகளின் உயர்மட்ட அரசியல் குழுவினர் ஜெனிவாவில் தமது சட்ட வல்லுநர்களுடன் கூடி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பாக முதல் இருநாட்கள் ஆராய்ந்தனர்.

அந்தச் சந்திப்புக்களில் நோர்வே அனுசரணையாளர்களான நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன், விசேட ஆலோசகர் எரிக்சொல்ஹெய்ம் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். தனித்தனியாகச் சந்திப்பில் பங்குபற்றிய அவர்கள் பேச்சை நகர்த்துவதற்கான செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்திருந்தனர்.

அரசியல் நகர்வுகள் குறித்து இருதினங்கள் ஆராய்ந்த உயர்மட்டக் குழுவினர், அடுத்த இருதினங்களையும் மனித உரிமைகள் செயற்பாட்டுக்காக ஒதுக்கினர்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொள்வதற்காக, கிளிநொச்சியில் செயற்படும் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் பணிப்பாளர்களும் ஜெனிவா சென்றிருந்தனர்.

செயலகத்தின் தலைவரான வண. கருணரத்தினம் அடிகளார் தலைமையில் சென்ற குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ஜீ.ஜீ. கஜேந்திரகுமார், அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, டாக்டர் எஸ்.சிவபாலன், சட்டத்தரணி எஸ். சிவபாலன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அக்குழுவினரும் உயர்மட்ட அரசியல் குழுவினரும் இணைந்து மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஆசிய - பசுபிக் பிரிவின் பேராளர் நாயகமான றொட்டோ மேஸ்ரர் (Roto Meister) தலைமையில் ஐந்து பேராளர்கள் கொண்ட குழுவுடனான சந்திப்பு முதலில் இடம்பெற்றது.

போர் நடக்கும் பகுதிகளில் வடக்கு - கிழக்கில் தமது அமைப்பு மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் குறித்தும் மனிதாபிமான பணிகள் குறித்தும் அவர்கள் விளக்கிக் கூறினர்.

பொதுமக்களின் பாதுகாப்பு விடயத்தில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பணி எந்தவகையில் அமைய வேண்டும் என்பது குறித்து தமிழ்ச்செல்வன் கருத்து வெளியிட்டார்.

வடக்கு - கிழக்கில் தமது அமைப்பின் பணிகள் தொடர்ந்து இருக்கும் என்று அக்குழுவின் பேராளர் உறுதியளித்தார்.

இதன்பின் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளின் பிரதிநிதிகளுடனான முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

மனித உரிமைகள் வோச் அமைப்பின் (Human Rights Watch), ஜெனிவா பணிப்பாளர் லவுப்னா பிரெய்ஹ் (Loubna Freih), சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு (International Commission of Jurists) செயலாளர் நாயகம் நிக்கலாஸ் ஹோவன் (Nicholas Howen) சர்வதேச மன்னிப்புச் சபையைச் சேர்ந்த பீற்றர் ஸ்பிலின்ரர் (Peter Splinter), ஐ.நா.வின் குவைக்கர் அலுவலக (Quaker United Nation) மனித உரிமைகள் மற்றும் அகதிகள் பிரிவுப் பிரதிநிதி றாக்சர் பிரெட் (Rachel Brett) ஆகியோருடன் நீண்ட கலந்துரையாடலை வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகக் குழுவும் உயர்மட்ட அரசியல் குழுவும் நடத்தின.

இன வன்முறைகளின் போது ஏற்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் இலங்கையில் நடக்கும் மனித உரிமைமீறல்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

## அரசின் மனித உரிமை மீறல்களும் பட்டியலிட்டு சமர்ப்பிப்பு

வடக்கு - கிழக்கில் மனித உரிமைகளை மேம்படுத்துவது, மனித உரிமை செயலகத்தை விரிவுபடுத்துவது தொடர்பாக



சுவிட்சர்லாந்து சென்ற விடுதலைப்புலிகளின் அரசியல் குழுவினரும் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினரும் சர்வதேச மனித உரிமைகள் குழுக்களை சந்தித்து பேசிய போது.

கலந்துரையாடப்பட்டது.

இலங்கையில் செயற்படும் மனித உரிமைஆணைக்குழுதமிழ்மக்களின்மனித உரிமை மீறல்கள் தொடர்பான செயற்பாட்டுக்குப் போதியதாக இல்லாத காரணத்தால் வடக்கு - கிழக்குக்கு தனியான மனித உரிமைச் செயலகம் ஒன்றை அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டது என்று அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்காப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களை பட்டியலிட்டு அவர்களிடம் சமர்ப்பித்தார் தமிழ்ச்செல்வன்.

அந்தப் பட்டியலில் -

* நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தங்கியிருந்த 200 இற்கும் மேற்பட்ட அகதிகள் கொல்லப்பட்டனர்.
* நாகர்கோயிலில் டசின் கணக்கில் மாணவர்கள் கொல்லப்பட்டனர்.
* வவுனிக்குளம் தேவாலயத்தில் தங்கியிருந்த அகதிகள் கொல்லப்பட்டனர்.
* ஸ்ரீலங்கா இராணுவத் தளபதியாக ஜானக பெரேரா யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய சமயம் பல நூறுபேர் காணாமற் போனார்கள். தற்சமயம் அவர் ஆஸ்திரேலியத் தூதராக இருக்கிறார்.
* புதுக்குடியிருப்பு சந்தைமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கிராமவாசிகள் உயிரிழந்தனர்.
* வந்தாறுமூலை பல்கலைக்கழக வளாகம், கொக்கட்டிச்சோலை, கிரான் உட்படப் பல இடங்களில் நடந்த நூற்றுக்கணக்கான படுகொலைகள்.

இந்தச் சம்பவங்களில் கொல்லப்பட்டவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை என்று தமிழ்ச்செல்வன் எடுத்துக்கூறினார்.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்திற்கு யாப்பு ஒன்றைத் தயாரிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று மனித உரிமைகள் நிபுணர் குழுவுடன் இடம்பெற்றது.

மனித உரிமைகள் நிபுணர் இயன் மார்ட்டின் (Ean Marten), சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் மனித உரிமைகள் கொள்கைகளிற்கான பிரிவின் பதில் அதிகாரி பாஸ்கல் பிக்குரிவைல் (Pascale Baeriswyl), பிரிக்வேக் பல்கலைக் கழகத்தின் அரசமைப்பு நிபுணர் தோமஸ் பிளெயனர் (Thomas pleiner) ஆகியோர் உயர்மட்ட அரசியல் குழுவினருடனும், மனித உரிமைகள் செயலகக் குழுவினருடனும் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புக் குறித்து தமிழ்ச்செல்வன் கருத்துக்கூறுகையில் தெரிவித்ததாவது:

"வடக்கு - கிழக்கில் மனித உரிமைகள் செயற்பாடு, மேம்படுத்துவதற்கான முன்னெடுப்புக்கள், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் ஆகியன குறித்து இந்தச் சந்திப்பில் ஆராய்ந்தோம்.

"சர்வதேச சட்ட நியமங்களுக்கு அமைவாக வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் தொடர்பாக யாப்பு ஒன்றைத் தயாரிப்பதில், சர்வதேச நிபுணர்களின் ஒத்துழைப்புடன் கவனம் செலுத்தினோம்.

"மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் ஒழுங்கமைப்பு ஒன்றைத் தயாரித்துள்ளோம். அது சர்வதேசத்தில் நடைமுறையில் இருக்கும் மனித உரிமைகள் சட்டங்களுக்கு அமைவாகவே இணங்கப்பட்டுள்ளது.

"இந்தச் சந்திப்பில் சுவிஸ், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை நிபுணர்கள் கலந்து கொண்டு தமிழீழ தாயகத்துக்கான மனித உரிமைகள் யாப்பு ஒன்றை உருவாக்கமுடிந்ததையிட்டு மகிழ்ச்சி அடைந்தோம்" - என்றார் அவர்.

மனித உரிமைகள் மாநாடு குறித்து உயர்மட்ட அரசியல் குழுவில் அங்கம் வகித்த தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசனின் கருத்தைக் கேட்டோம். அவர் கூறிய கருத்துக்கள் வருமாறு:

"எமது கட்டுப்பாட்டுப் பகுதியிலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலும் மனித உரிமைகள் எவ்வாறு பேணப்படுகின்றன என்பது குறித்து ஆதாரங்களுடன் துல்லியமாக மனித உரிமைகள் அமைப்புகளின் அதிகாரிகளுக்கும், நிபுணர்களுக்கும் அக்கு வேறு ஆணி வேறாக விளக்கிக் கூறினோம்.

"இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் படையின் மற்றும் மாற்றுக்குழுக்கள் மேற்கொள்ளும் மனித உரிமை மீறல் செயல்களால் மக்கள் எதிர்நோக்கும் தொல்லைகள், இம்சைகள் குறித்து விளக்கினோம்.

"அவர்களுக்கு இந்த விடயங்கள் நன்றாக விளங்குகின்றன. எம் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு சரியான பதில் அளிக்க இந்தப் பயணம் உதவியது. சரியான ஆதாரங்களை அவர்களுக்குச் சமர்ப்பித்தோம்.

"எமது பகுதிகளில் மனித உரிமைகள் எந்தவகையில் பேணப்படுகின்றன என்று நேரில் வந்து பார்க்குமாறு அழைப்பு விடுத்தேன். எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கும் மனித உரிமைகள் அமைப்புகளுடன் எவ்வாறு நல்லுறவைப் பேணுகின்றோம் என்பதை நேரில் பாருங்கள் என்று சென்ற இடங்களில் எல்லாம் அழைப்பு விடுத்தோம்.

"எமது பிரதேசத்துக்கு வரும் போது, இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் செல்லும் படியும், அப்போதுதான் அங்குள்ள மோசமான நிலையைப் புரிய முடியும் என்றும் அவர்களிடம் தெரிவித்தோம்.

"நாங்கள் சும்மா கதைத்துக் கொண்டிருக்கவில்லை. எமது பகுதியை சீராக முன்னெடுக்கின்றோம். யாழ்ப்பாணத்தில் உள்ள சிறுவர்களைக் கூடாத வழிக்கு இட்டுச் செல்லக்கூடிய எந்தவகையான தூண்டுதல்கள் இடம்பெறுகின்றன என்பதை நேரில் பார்க்குமாறு கோரினோம்.

"இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்கில் சிறுவர் உரிமைகள் மீறப்படுகின்றன என்று கூறிக்கொண்டிருப்பதால் பயனில்லை. சம்பந்தப்பட்ட மனித உரிமைகள் அமைப்புக்கள் நேரில் வந்து, சிறுவர் உரிமை மீறப்படுகின்றதா? இல்லையா? எங்கே மீறப்படுகின்றது? என்பன குறித்து ஆய்வுகள் செய்ய வேண்டும் என்று சுட்டிக்காடினோம்.

"இதன்மூலம் ஒரு பக்கம் சார்பாக, சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் வெளியிட்டுவரும் கருத்துக்கள், குற்றச்சாட்டுக்களுக்கு முடிவு ஏற்படும்.

"வடக்கு - கிழக்கில் இடம்பெறும் படுகொலைகள் தொடர்பாகப் பலர் பிரஸ்தாபித்தனர். அவர்களுக்கு தகுந்த விளக்கம் கொடுத்தோம்.

"எமது அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட கருணாவை பின்னணியாக வைத்துக் கொண்டு இராணுவப் புலனாய்வுப் பிரிவு இக்கொலைகளைப் புரிந்து வருகின்றது. அரசின் கொள்கைகளை முன்னெடுப்பதுதான் புலனாய்வுப் பிரிவின் பணி. இக் கொலைகளின் பின்னணியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு செயற்படுவதால், அரசின் பின்னணியும் உள்ளது என்பது தானே அர்த்தம்.

"கொலைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில், இராணுவ முகாம்களுக்கு அருகில்தான் நடக்கின்றன. இக் கொலைகளில் இராணுவம் சம்பந்தப்பட்டுள்ளது. கருணாவுடன் பிரிந்து சென்றவர்கள் ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தாவுடனும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடனும் இணைந்து செயற்படுகின்றனர். பிரிந்து சென்றவர்களில் ஒருபகுதியினர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கருணா, இணைந்து செயற்படுவதைவிரும்பவில்லை. இதனால், அவர்களுக்கு இடையில் கருத்து முரண்பாடுகள் உருவாகின்றன. இதன் காரணமாக அவர்கள் தங்களுக்குள்ளேயே சுடுபடுகிறார்கள்.

"கருணாவுடன் பிரிந்து சென்று எம்முடன் மீள இணைந்தவர்கள் எமக்குப் பல தகவல்களைத் தந்துள்ளனர். இராணுவப் புலனாய்வுப் பிரிவில் யார் யார் கருணாவுடன் இணைந்து செயற்படுகின்றனர், அரசு கருணாவுக்கு என்ன வகையான உதவிகளை வழங்குகின்றது என்பன போன்ற தகவல்களை எமக்குத் தந்துள்ளனர். அந்த விவகாரங்களின் அடிப்படைகளை சர்வதேசத்துக்கு விளக்கினோம்.

"சமாதானச் சூழலில் பேச்சுக்களை முன்னெடுக்கும் போது யுத்த நிறுத்த உடன்படிக்கையை நாங்கள் சரியாக அனுசரிக்கும் போது அரசு பொறுப்பற்றதனமாகச் செயற்படுத்துகின்றது என்ற செய்தியை சர்வதேச நாடுகளுக்கும், மனித உரிமைகள் அமைப்புகளுக்கும் அரச சார்பற்ற அமைப்புக்களுக்கும் விடுத்தோம்" - என்றார் அவர்.

விடுதலைப்புலிகள் படைகளுக்குச் சிறார்களைச் சேர்ப்பதாக வெளிவரும் குற்றச்சாட்டுக்கு புலிகள் சர்வதேச சமூகத்துக்கு அளித்த பதில் என்ன? அடுத்த வாரம் பார்ப்போம்.

குகா

(வளரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா

தலைநிமிர்ந்தது தமிழினம், தலைநிமிர்ந்தது
 தமிழினம்
உரிமைகாக்க அவதரித்த
எங்கள் தலைவன் பாதை சென்றதால்
தலைநிமிர்ந்தது தமிழினம்
ஒடுக்கப்பட்ட இனம் உயிர்பெற்றது
வழிகாட்டியவன் மேதகு தலைவன் பிரபாகரன்.
எம் தலைவன் அவதரித்த இந்நாளில்
வாழத் துடிக்கும் உள்ளங்கள் பல கோடி
தடைகள் பல தாண்டி 51 ஆவது
அகவையில் பாதம் பதிக்கும் தலைவனுக்கு
கைதிகள் எமது வாழ்த்துச் சேதி
எமது நினைவுகளை காலத்தால்
 தள்ளிப்பார்த்தால்
எமது உரிமைக்காக எம்தலைவன் எதிர் கொண்டு-
வெற்றிகண்ட சவால்கள் ஏராளம்
எம்மினத்தின் உரிமைக்காக மூச்சுவிட்டபோதே
முளையில் கிள்ள நினைத்தவர்கள்
 எத்தனை பேர்!!
இனத்தை அழிக்க முன் எங்கள்
 மொழியை அழிக்க நினைத்தார்கள்,
விகிதாசார கல்வி முறையால்
கல்விக்கான உரிமையை மறுத்தார்கள்
பொங்கிய விழிகள் ஈரவிழிகளாகவே
 மங்கின
இரு விழிகள் மாத்திரம் இரத்தச்
 சிவப்பேறின
அதுதான் எங்கள் தலைவனின் விழிகள்.
மறுக்கப்பட்ட உரிமைகளை
வாயால் கேட்ட தந்தை செல்வா
 போன்றோரின்
வாய்கள் அடைக்கப்பட்டன
தட்டிக்கேட்க முனைந்த தலைவன் தலை
 நிமிர்ந்தான்
தமிழர்களின் அகிம்சை வழிக்கு அரிசி
 போட்டவர்களுக்கு
ஆயுதத்தில் கணக்கிறுத்தான்.
கலவரத்துக்குள் ஆதாயம் தேடியது அரசு
தமிழர்களின் உயிர்கள் சிறைகூடத்திலும் –
காவுகொள்ளப்பட்டது,
உலகநாடுகளின் விழிகளில் அப்போதெல்லாம்
 உயிர்ப்பில்லை.
அமைதிகாக்கும் போர்வையில் –
வந்திறங்கியது அயல்நாட்டுப்படை
எம்முரிமைப் போரின் வளர்ச்சிக்கு துணை
 நின்றவர்களே
எங்கள் வளர்ச்சி கண்டு பீதி கொண்டு
ஆணி வேரில் கை வைக்கத் துணிந்தார்கள்.
முடிந்துவிட்டது தமிழினத்தின் உரிமைப்போர் என
விழித்திருந்து பார்த்த உலகவிழிகளில்
தூசு விழுந்தவுறுத்தல்,
தோற்றுப் போனதுதான் மிச்சம்
சிகரட்டுக்கும் தூதுவரின் உதட்டுக்கும்
உணர்விருந்தால் சொல்லும்
வீரத் தமிழனின் வீர வரலாற்றுக் காவியங்களை,
தமிழீழத்தின் ஒவ்வொரு பனைமரத்தின் வடலியும்
அந்தோ.......... தேசத்தவர்கள் செய்த –
அட்டூழியங்களை இன்றும் சொல்லும்
தியாகி திலீபனும், அன்னைபூபதியும்
நாவறண்டு சுருண்டு மடிந்தது இவர்களால் தான்
பாவம் தூரதேசத்தவர்கள்
கைச்சாத்துக்குள் காணாமல் போனார்கள்.
வந்தவர்கள் சென்றதும் நிலவியது சமாதானம்
தமிழர்களெம் நிம்மதிப் பெருமூச்சு
நிலைத்திருக்கவில்லை நீண்ட காலம்
மீண்டும் போர்ப் பேய்க்கு பசியெடுத்தது
இரண்டாம் கட்ட ஈழப்போருக்கு முகம்
 கொடுத்து
வெற்றிக் கொடி நாட்டினான் எம் தலைவன்.
அழிவுகள் ஏராளம்
கண்மூடித்தனமாக தமிழனின் உயிர்கள்
 பறிக்கப்பட்டன
இன்று மனிதவுரிமைகள் பேசுவோர் –
அன்று மௌனிகளாக
மீண்டுமோர் அமைதிக்காற்று
தமிழீழ மெங்கும் வீசியது
முன்னைய போரில் எதிர்ப்படை
எங்கள் நிலத்தில் புதைத்த
பொறிவெடிகளில் சிக்கி உயிர் நீர்ப்போரின்
பிண வாடைக்காற்றும் அதில்கலந்தது
வெண்புறாவுடன் சமாதானம் பேசி வந்தவர்களும்
தமிழர்களின் உயிர் குடிக்கும் துப்பாக்கியை
இடையில் வைத்திருந்ததை நாமறிவோம்!
காலம் கரைந்தது ஒப்பந்தங்கள் கிழிந்தது
மூன்றாம் கட்ட ஈழப்போர் வெடித்தன
தமிழர்கள் மீது ஏவி விடப்பட்ட
 மிகப்பயங்கரமான
கொடூரங்கள் நடந்தேறியது இந்தப் போரிலே தான்.
யாழ் கைப்பற்றிய மாமனாரின் கை உயர்ந்தது
புலிப்படை அழிந்ததாய் சேதிகள் பறந்தன
மௌனமாய் அழுதது எம்மினம்
உலக நாட்டுக் கண்கள் மீண்டும் விரிந்தன
தற்காலிக பின்னடைவுக்குள் ஒரு மகத்தான
 வெற்றியை
மறைத்து வைத்தருப்பது தான்
தமிழர்களெம் தலைவனின் மகத்துவம்

வீறுபூண்டெழுந்து போரிட்டது புலிப்படை
வெற்றிமேல் வெற்றி வார்த்தையால்
வர்ணிக்க முடியாத வெற்றி
ஒருவருட முப்படைகளின் நகர்வை
ஒருவாரத்தில் முறியடித்து
பெரிதாய் விழித்திருந்த உலக விழிகளுக்கு
மண்தூவிய மாபெரும் வெற்றி
புலிப்படையுடன் போரிட்டு வெற்றிகொள்ள
 திராணியற்றவர்கள்
அப்பாவித்தமிழர்களுக்கு செய்த கொடுமைகள்–
கொஞ்சநஞ்சமல்ல ஏராளம் ஏராளம்,
புலிப்படையில் சிறுவர்களாம்!
சிறுவர் உரிமை பேசுகின்றார்கள்
ஏசிக்காற்றில் இருந்து கொண்டு
ஈழத்து சிறார்கள் அட்டூழியர்களால்
 சிதைக்கப்பட்டதை
அவர்கள் அறியார் போலும்




செய்திகளும் தணிக்கையானதால்
உண்மைகள் மௌனமாகின
மருந்து கூட இல்லாது மடிந்த சிறார்களின்–
எண்ணிக்கை என்னவென்பது தெரியுமா?
பன்னிரெண்டே வயதுச் சிறுவனின்
 தோலையுரித்து
இனத்துவேசத்தையும் கொடூர வன்மையையும்
நிகழ்த்திய கோரம் ஈழத்தில்தானே!
எங்கே அப்போது சென்றார்கள்
இன்று சிறுவர் உரிமை பேசுவோர்?
ஐந்து வயதுத் தம்பியைக் காக்க
பன்னிரெண்டு வயது அண்ணன் துப்பாக்கி
 ஏந்துவது தவறா?
அகதிமுகாமுக்குள் சென்று வகைதொகையின்றி
 கைது செய்து
உயிருடன் புதைகுழிக்குள் புதைத்ததும்
தந்தையின் முன் மகளையும், அண்ணனின் முன்
 தங்கையையும்,
கணவனின் முன் மனைவியையும்–
பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி
கொன்ற கொடுமைகள் ஈழத்தில் தானே
 அரங்கேறின!
ஈழத்தமிழன் ஒவ்வொருவனும் அனுபவித்தவை–
வேதனைகளல்ல நரக வேதனைகள்
செம்மணி எங்களுடைய கண்மணிகளின்
 உயிரை
இரகசியமாய் குடித்துச்சிவந்தது
உணர்வுத் தமிழன் கௌரவ இளஞ்செழியனின்
 முயற்சியால்
உலகின் காதுகளுக்கு இக்கொடுமை எட்டியது,
பள்ளி மாணவி கிருஷாந்தி குமாரசாமி
உலகுக்கான ஒரு உதாரணம் மட்டுமே
இதைப்போன்று எத்தனை எத்தனை
 ஈழத்துச்செல்வங்களின்
கற்புக்கள் பறிக்கப்பட்டு உயிர்குடிக்கப்பட்டது
ரஜனி வேலாயுதப்பிள்ளை, கோணேஸ்வரி,
 சாரதாம்பாள்
இவர்கள் அனுபவித்த கொடுமைகள் உலகின்
 காதுகளுக்கு எட்டியது
இக்கொடுமைகளின் வடுவைத் தாங்கவொண்ணாது
 இன்றும் மௌன அழுகையுடன்
எத்தனை கன்னியர்கள் தெரியுமா?
அகதிகளாய் பாடசாலைகளிலும்,
ஆலயங்களிலும் தஞ்சமடைந்து
உறங்கியவர்களின் உயிரையும் பொம்பர்
 குடித்தது
அகதிமுகாம்களான பாடசாலைகளிலும்,
 ஆலயங்களிலும் –
பிறந்த குழந்தைகள் முதன்முதலில் உச்சரித்தது
"அம்மா" என்ற சொல்லையல்ல
"பொம்பர்" என்ற சொல்லையே!
அந்த பிஞ்சுகளின் இதயத்தையும்
இந்த இரக்கமற்றவர்களின் வெம்போர் விட்டு
 வைக்கவில்லை.
தஞ்சமடைந்தவர்கள் தங்கியிருந்த போது
அழிக்கப்பட்ட ஆலயங்களையும்,
 பாடசாலைகளையும்
பெயர் சொல்லிக் கூறலாம்
அந்தக் கொடூர நினைவுகளை
மீட்டிப்பார்க்க முனையும் போதே

இதயத்தால் இரத்தம் சொட்டுகின்றது
முடியவில்லை இருந்தும் ஓரிரு உதாரணங்கள்
மன்னார் மருத மடு ஆலயம், நவாலி சென்
 பீற்றஸ் தேவாலயம்,
நாகர் கோயில் பாடசாலை, பாசையூர் புனித
 அந்தோனியார் தேவாலயம்.
உயிரைக் காத்துக் கொள்ள கடல் கடந்து –
புறப்பட துணிந்தவர்களின் உயிர்கள்
இந்து சமுத்திர மாதாவின் மடியிலேயே
 உருவப்பட்டது
குமுதினிப்படகின் நிலை இன்றும் எங்கள்
 நெஞ்சங்களில் நிழலாடுகின்றது
எத்தனை எத்தனையாயிரம் கொடுமைகளை
அனுபவித்த எம்மினம் உன்னத தலைவனின்
உறுதி முடிவுகளில் கைகோர்த்து நின்று
இன்று வெற்றி வீரர்களாய்!
வெண்புறாவுடன் சமாதானம் பேசி வந்தவர்களே
ஈற்றில் சமாதானப் புறாவை தீக்குளிக்கச்
 செய்தனர்
அவர்களுக்கும் சமாதான அழைப்பு விடுத்தது –
சமாதான விரும்பியான எங்கள் தலைவனே!
பேச்சுக்கள் பேசிக்கொண்டிருக்கும் போது
திரை மறைவில் சூழ்ச்சிகள் நடந்தன
நம்பியவன் நஞ்சானான் எச்சிலையை
 மோப்பமிட்டு
இனத்துரோகியானான்
எங்கள் தலைவனின் ஊடுருவிப்பார்க்கும்
தீர்க்கதரிசன விழிகளுக்குள்
அருகிலிருந்த இந்த துரோகியின் சுயரூபம்
அகப்படாதது ஆச்சரியமே!
பிளவுபட்டது புலிப்படை என்ற பேச்சு
 உலகரங்கிலும்
அகன்று விரிந்திருந்தது சர்வதேச
 சூழ்ச்சிக்காரர்களின் விழிகள்
எங்கள் மக்களுக்கும் சிறியதோர் அச்சம் மேலிட்டது
எங்கள் தலைவன் அப்போதும் எப்போதும் போல்
 அமைதியாகவே
இரத்தம் சிந்தா வெற்றியை உலகம் கண்டது
எங்கள் தலைவனின் படை நகர்த்தலில் தானே
தனி மனிதன் என்பதற்கு அர்த்தம் கற்பித்தான்
 எங்கள் தலைவன்
கோசமிட்டவன் கோட்டமடங்கியது
இன்று அவன் பேச்சைக் காணவில்லை
மூச்சும் இருக்கின்றதா என்பதும் சந்தேகமே
சூழ்ச்சிக்காரர்களின் முகத்திரை கிழிந்தது
அநீதிகள் அழியும் துரோகங்கள் ஒழியும்
வேலுப்பிள்ளை பிரபாகரன் வெற்றி வீரனாய்
 திகழ்வான்
எம் தலைவன் தோன்றிராவிட்டால்
எம்மினத்தின் நிலை என்னவாகியிருக்கும்
நினைத்துப் பார்க்கவே உள்நெஞ்சு
 நடுங்குகின்றது
மல்டிபரல்கள் கையில் இருக்கும் போதே

எங்கள் இனத்திற்கான சம உரிமை
 மறுக்கப்படுகின்றது
இன்றுவரை. நிலை இவ்வாறிருக்க,
ஆயுதமேந்திப் போராடாது விட்டிருந்தால்
எம்மினத்தின் அடிச்சுவட்டை அழித்திருப்பார்கள்–
இந்த ஐம்பத்திரெண்டு ஆண்டுகளுக்குள்.
இராவணேஸ்வரன் ஆண்ட பூமி இது
வரலாறுகளின் உண்மையை திரிவுபடுத்தாமல்
 புரட்டிப்பாருங்கள்
உண்மைகள் இறக்கவில்லை நிஜங்களைப்
 புதைத்துவிட்டு
உண்மைகள் இறந்துவிட்டதாய் பகல்கனா
 காண்கிறார்கள்
தன் இனத்தின் இருப்பைப் பாதுகாக்க
உரிமைப்போர் நடத்தியவர்கள்
உலகநாட்டுப் பயங்கரவாதப்பட்டியலில்.
இரக்கம் நிறைந்தவர்களிடம் இரந்து
 கேட்கின்றோம்
வாருங்கள் வாருங்கள் எம்மீழத்திற்கு வந்து
ஐந்து தசாப்த காலமாக நடந்த கோர நிகழ்வுகளை
உங்கள் கண் கொண்டு பாருங்கள்
நியாயம் கூறுங்கள் தடைகளை நீக்குங்கள்
ஒரு இனத்தை கொடூரமாக அழிக்க நினைக்கும்
எதிரியிடம் மண்டியிடவா சொல்லுகின்றீர்கள்?
மறத்தமிழன் மண்டியிட்ட வரலாறு
 மண்ணுலகிலில்லை
இனியும் இருக்கப் போவதில்லை
 மண்டியிடுபவன் மறத்தமிழினத்தில்
 வந்துதித்தவனுமில்லை.
சுடுகாட்டுக்குள் மூச்சுவிட்டு விழித்தெழுந்த
எம்மினத்தின் கொடி
வெள்ளையரின் தேசத்திலும் பட்டொளி வீசு
கின்றது
ஆரம்பத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட போது
பொங்கிய விழிகள்
இன்று பொங்கு தமிழாய் உலகநாடுகளிலும்–
உரிமை உணர்ச்சி பிழம்பாய் வெடிக்கின்றது.
உரிமையுணர்வுத் தமிழர்களே!
எதிரி அடிக்கின்றான் என்பதற்காக அடங்கிவிட
நினையாதீர்கள்
அடியோடு அழித்துவிடுவான் எங்களினத்தை
மறந்துவிடாதீர்கள்.
"ஆட்டு மந்தைகளுக்கும் நல்ல தலைவன்
வேண்டும்" என்றார் இயேசு பிரான்
எங்களினத்தை கட்டிக்காக்க, மொழியைக்
கட்டிக்காக்க
கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை
 பேணிக்காக்க –
அவதரித்தான் எங்கள் வீரத்தலைவன் பிரபாகரன்
பதினாறு வயதினிலே ஆயுதமேந்தி
தன்னினத்தின் விடிவிற்காகப் போராடிய
ஈழத்து மறவகுலத்து மைந்தனின்று
ஐம்பதாவது வயது நிறைவில்
நிறைந்த அரசியல் ஞானியாய், போர்த்தந்திர
 நிபுணனாய்
உலக நாடுகள் வியக்கும் மனிதனாய்
போரியல் தந்திரங்களுக்கு புதுவடிவம்
 கொடுத்தவனாய்
தமிழினத்தின் காவலனாய், ஈழத்தேசத்தின்
 தேசப்பிதாவாய்
உலகம் போற்றும் உத்தமனாய்
உணர்ச்சியுள்ள தமிழர்களின் நெஞ்சங்களில்
 அவதாரத்தலைவனாய் –
மிளிர்கின்றான் எங்கள் தலைவன் மேதகு
 வே.பிரபாகரன்
எம் தலைவன் அவதரித்த இப் பொன்நாளில்
எங்கள் நேசத்தலைவனுக்கு இளையவர்கள் எமது–
இதயக் கமழ வாழ்த்துக்கள் பலகோடி.

வாழ்த்துக்களுடன்,
தமிழ் அரசியற்கைதிகள்,
களுத்துறை சிறைச்சாலை.

## பூபாள இராகங்கள்

புரியாத கனவுகளுக்கும்
 கற்பனைகளுக்குமாய்
ஆழ்மனம் அகலப் பறந்தோடி விரிகிறது
அரவம் ஒன்று படம் விரிப்பது போல்
 அழகாக
இதயத்தில் சுரக்கும் மௌன கீதங்களை
உதடுகள் உச்சரிக்க மறுத்து நிற்கின்றன.
மௌனத்தில் ஒலிக்குறிப்புகளின் புரிதலில்
எதிரிலே ஏக்கப் பார்வை எழிலாய் வீசும்.

அந்த மௌன மொழியாடல்களுக்குள்ளே
இனம் புரியாத இளமை உணர்வுகள்
 உறைந்து
புலன்களை ஆட்டிப்படைத்திடும்
 இசையில்
பூபாளம் மறந்த குயில்களாய் பிரபஞ்ச
 வெளியில்
எதிர்க்குரலுக்காய் ஏக்கம் கொள்ளும் மனது!

எனினும் போர்க்கால ஏக்கக்குடிமகனாய்
சில நினைவுகள் மட்டும் மனத்திரையில்
 ஒளிரும்.
அலையும் மனதின் இயக்கத்திலே
 இரவுத்தூக்கம்
கவிதை புனைதலில் கரைந்து போகும்.

ஆனாலும் எந்தக் கவிதை வரிகளிலும்
 எவளையும்
சிறைப்பிடிக்க முடியாத தவிப்பில் மனது
 தாளமிடும்.
ஒவ்வொருத்தியும் என் சோலை
 அறைகளுக்குள்
புகுந்த வேகத்திலேயே இதய அறைகளை
 விட்டு
வெளியேறுவதைத் தடுத்து
 நிறுத்தமுடியவில்லை.

புதுக்குருதிப் புனலாய்
 ஒட்சியேற்றப்பட்டு
சுவாசப் பைகளிலிருந்து மீண்டும்
 பாய்வது போல்
புதுப்புது மலர்கள் மனதில் தினம் தினம்
 பூக்கும்.
பின்னர் மாலையில் அவை வாடிப்போகும்.

நேற்றுவரை தொடர்கதையாய் இருந்த நிலை
ஒருத்தி அன்பளித்த வார்த்தைகளின்
 குளிரில்
இன்று சடுதியில் அமர்முடுகல் கண்டு
 கொள்ள
இனியவள் நினைவுகளின் பெருவெளிச்
 சுவட்டில்
ஏனையவை பிரபஞ்சமெங்கும்
 பொசுங்கிப் போகிறது!

இடைவெளிகளற்ற இவள் சந்திப்புக்காய்
மனம் கொடிக்குத் தவமிருக்கிறது
 ஒற்றைக்காலில்!
இப்போதெல்லாம் எல்லாக் கவி வரிகளிலும்
இசைவுடன் சிறையிருப்பது இவள்
 மட்டும் தான்!

ச.முருகானந்தன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ எந்தன் காதலி

எனக்குள்ளுமகாதல் வரும் என என்றுமே நான் கனவில் கூட நினைத்ததில்லை. இருபது வயது இளைஞனின் கூற்றா இது என நீங்கள் நினைக்கலாம். ஆனால், அது முற்றிலும் உண்மை.

காதலின் தெய்வீகங்கள் தோலுரிந்து சுயரூபம் காட்டிய மானுடக் காதல்கள் சிலவற்றைச் சந்தித்த அனுபவம் தந்த வெறுப்புத்தான் காரணம். உயிருக்குயிராக இரண்டு வருடம் காதலித்த எனது அக்காவின் காதல் கலியாண மேடையில் சீதனத்தகராறில் சிதைந்து போனதைக் கண்ட அனுபவ வடுக்கள் ஒரு புறம். எனது நண்பனின் அண்ணாவை ஆறுமாதம் காதலித்தவள் அவனது சாதியில் சிறு வேறுபாட்டைக் கண்டு, பின்னர் காதலிக்கவேயில்லை என்று பச்சைப் பொய் கூறி அவனை தற்கொலை முயற்சிக்கு வித்திட்ட கொடுமையைத் தரிசித்த இன்னொரு அனுபவம். காதலித்து கட்டிய அம்மாவும் அப்பாவும் இன்று கீரியும் பாம்புமாக மோதலுடன் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்வதை சிறு வயதிலிருந்தே பார்த்த கசப்பான அனுபவம். இவை எல்லாம் கூட்டாகச் சேர்ந்து எனக்கு காதலில் நம்பிக்கையீனத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியிருந்ததில் வியப்பில்லை.

இப்போது வியப்பான விவகாரம் என்னவென்றால் எனக்குள்ளும் காதல் அரும்ப ஆரம்பித்ததுதான். கண்கள் பொல்லாதவைதான். அதிலும் இளம் பெண்களின் மான்விழிக் கண்கள் மிகப் பொல்லாதவை என்பதை இப்போது தான் உணர்ந்து கொண்டேன். முதல் முறை நெருக்கமான அந்த பஸ் பயணத்தில் மூச்சுப் படுமளவு அருகாமையில் என்னை ஒரு கணம் ஏறிட்டுப் பார்த்து, பின் பார்வையை விலக்கிக் கொண்ட அந்த இரு விழிகளும் கடந்த சில நாட்களாக என் தூக்கத்தில் பாதியை விழுங்கிக் கொண்டிருந்தன.

அவள் அழகியா? பேரழகியா? பொன்நிற உடலா? நல்லவளா? பெண்மைக்கேயுரிய இலட்சணங்கள் நிறைந்தவளா? இவை எதுவுமே என் சிந்தையைத் தொடவில்லை. அந்த அழகிய இரு மீன்விழிகள் தான் மீண்டும் மீண்டும் என் இதயத்தை வருடி இன்பத் தவிப்புக்குள்ளாக்கியது. அவள் எனக்காகவே பிறந்திருப்பதாக என் உள்மனம் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவளது அடுத்த சந்திப்புக்காய் மனம் ஏக்கம் கொண்டு தேடி அலைந்தது.

அடுத்த சந்திப்புக்கான காத்திருப்புக்கள் காலத்தை விழுங்கி ஏப்பம் விட, ஏகாந்தமாய் எந்தன் மனம் எங்கோ தொலைவில் இருப்பதைத் தேடித் தேடி தேய்ந்து கொண்டிருந்தது. எங்கும் அவளைத் தேடும் படலம் தொடர்ந்தும், வெற்றியின்றி எட்டாக் கனியின் மனநிலையில் மனம் வெதும்பியிருந்தபோது தான் மறுசந்திப்புக்கான சந்தர்ப்பம் எதிர்பாராமல் கூடிவந்தது.

அதிகம் ஆலயம் செல்லாத என்னை ஆண்டவன் தான் தன்னிடம் அழைத்திருக்கவேண்டும். அம்பிகை தரிசனத்தில் சற்று மூழ்கி கண் விழித்த போது எதிரே அவளின் தரிசனம் நிதர்சனமானது. நெஞ்சை விட்டகலாத அந்த விழிகள் என்னை நோக்காது அம்பிகையின் அருள் வேண்டி நிற்கையில் என் கண்கள் அவளை நோக்கி அம்பிகையை மறந்து போனது. அவளிடமிருந்து ஒரு அறிமுகப் புன்னகையை எதிர்பார்த்த எனக்கு ஏமாற்றமே பதிலானது. அவள் ஏதோ ஆழ்ந்த யோசனையுடன் ஆண்டவனுடன் சங்கமமாகி, அர்ச்சனைச் சீட்டை பூசகரிடம் நீட்டினாள். பெயர் மோகன், நட்சத்திரம் சுவாதி என அவள் சொன்னதும் என் கற்பனைக் கோட்டைகள் எல்லாம் பொல பொல என்று சரிய ஆரம்பித்தன.

வழிபாட்டை முடித்துக் கொண்டு அவள் வந்தபோது நான் ஆவலுடன் எதிர்பார்த்த இருசோடிக் கண்களின் சங்கமிப்பில் ஒரு கணம் ஆடித்தான் போனேன். பார்வையைப் பட்டென்று முறித்துக் கொண்ட அவளது கண்களில் ஏதோ ஒன்று தொலைந்து போயிருப்பதாக உணர்ந்தேன். எதிரே இன்னொருத்தி அவளைக் கண்டதும் அறிமுகப் புன்னகையுடன் 'அகல்யா' என்று அழைத்தாள். என்னவளின் பெயர் அகல்யா என்பதை அறிந்து கொண்ட அந்தக் கணத்தில் மனதில் அந்த முகம் தெரியாத மோகனை சபித்தபடி அவர்களின் உரையாடலில் உத்தரவின்றிக் காதைக் கொடுத்தேன்.

''மோகனைப் பற்றிய சேதி ஏதும் கிடைத்ததா அகல்?'' புதியவள் கேட்டாள். இவளது கண்களின் ஓரம் பூத்த ஈரத்தை மறைக்க முடியாமல், மறைக்கவும் தோன்றாமல் ''இல்லை கீதோ....'' என்று உதட்டைப் பிதுக்கினாள்.

சிறிது நேரம் தன் சினேகிதி கீதாவுடன் கதைத்துவிட்டு அவள் போய்விட்டாள். மனதில் உருக் கொண்ட ஏமாற்றத்துடன் 'என் முதல் காதலுக்கு ஆரம்பத்திலேயே முடிவு வந்துவிட்டதே' என்று எண்ணியபடி, அவளைப் பற்றியும், அவளின் மோகனைப் பற்றியும் அவனுக்கு என்ன நடந்தது என்பது பற்றியும் அறிய வேண்டும் என்ற ஒருவித மன உந்துதலுடன் கீதாவுடன் பேச்சுக் கொடுக்கலாமா என்று யோசித்து. அதையும் செயற்படுத்தும் வல்லமையின்றி நான் தடுமாறிக் கொண்டிருந்த போது தான் 'தீபன்' என்று அழைத்தபடி நண்பன் சுகிர்தன் என்னருகே வந்து கொண்டிருந்தான். ''என்ன, சந்நியாசிக்கும் காதல் வேண்டுதோ.... நீ சாயிட் அடிச்சுக் கொண்டிருக்கிறது என்னுடைய ஆளடா...'' என்று சிரித்தபடி கூறினான்.

''வாடா கீதாவை உனக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறேன்... என்னுடைய எதிர்காலம் இவள் தான்...'' என்று கண் சிமிட்டியபடி கீதாவிடம் என்னை அறிமுகப்படுத்தினான். ''இவன் தீபன்.. என்னுடைய சினேகிதன்..'' நான் அறிமுகப் புன்னகையை உதிர்த்துவிட்டு விடை பெற்றேன். முகம் சிரித்துக் கொண்டிருந்தபோதும் என் மனம் அழுது கொண்டிருந்தது. இவ்வளவு அழகான பெண்ணுக்கு ஒரு காதலன் இல்லாதிருப்பான் என்று நான் எப்படி எதிர்பார்க்க முடியும்? Better Never Than Late என்ற பழமொழிதான் நினைவுக்கு வந்தது.

வீட்டிற்குச் சென்ற பின்பும் மனது அழுதுகொண்டிருந்தது. எதிலும் பற்றுடனும், சுறுசுறுப்பாகவும் இருக்க முடியவில்லை. அன்றிரவும் அவள் நினைவுகள் என்னை ஆக்கிரமித்திருந்தன. அந்தக் கண்களின் சோகத்திற்கு ஒத்தடம் கொடுக்க வேண்டும் போல ஒரு உந்தல். இடையிடையே அந்த முகம் தெரியாத மோகன்... 'ஓ... அவனுக்கு என்ன நடந்திருக்கும்? அப்படியே தொலைந்து போகட்டும்' என மனம் குரோதமாக எண்ணியது.

காதல் என்பது எவ்வளவு சுமையான சமாச்சாரம் என்பது புரிந்தது. சுவையும், சுமையும் என்று மனிதனைப் போட்டு உலைப்பது தானா காதல்? ஒருதலை ராகமே இப்படியென்றால், மனமொத்த காதல்....?

அடுத்த சில நாட்கள் கிட்டத்தட்ட ஒரு நடைப்பிணமாகவே திரிந்தேன். எதிலும் மனது ஒன்றவில்லை. ஒரு பெண்ணின் நினைப்புக்கு இவ்வளவு சக்தியா?

ஒரு வாரம் ஓடியிருக்கும். அன்று தபால் நிலையத்தில் நின்ற போது 'தீபன்' என்று இனிமையான ஒரு அழைப்பு. திரும்பிப் பார்த்தேன். ''கீதா!'' ''சுகிர்தனைக் காணுவீர்களா? நான் நாளைக்கு கொழும்பிற்குப் போவதாகச் சொல்லுங்கள்...'' சரி என்று தலை அசைத்த போது தான் மனதில் திடீரென்று ஒரு மின்னல், 'இவளிடம் அகல்யாவைப் பற்றி கேட்கலாமா?'

செயலில் இறங்கினேன்.

''உங்க பிரண்டு அகல்யா...—'' தொடர்ந்து என்ன கேட்பது என்று தயக்கம்.... ''மோகனுக்கு என்ன நடந்தது?'' ஒரு வாறு கேட்டு முடித்தேன். கீதா ஒரு கணம் என்னை நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்களிலும் ஒருவித கலக்கம்.

''போன மாதம் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது சோதனைச் சாவடியிலை வைச்சுப் பிடிச்சுட்டாங்கள். இன்று வரை எங்கேயென்றும் தெரியவில்லை. ஒரு முகாமிலும் இல்லை என்று சொல்லுறார்கள்.... ''கீதா சொல்லச் சொல்ல மோகனின் மீது அனுதாபம் ஏற்படுவதற்குப் பதிலாக மனதில் குரூரமான மகிழ்ச்சி ஏற்பட்டது. அந்த மகிழ்ச்சியை வெளிக்காட்டாமல், ''அவங்கள் பிடிச்சால் முடிச்சாலும் முடிச்சிருப்பாங்கள்...'' என்று அனுதாபத்தைக் குரலை வரவளைத்துக் கொண்டு கூறினேன்.

''உண்மைதான்... எங்களுடைய மண்ணில் தினம் தினம் எத்தனையோ புதைகுழிகள் தோன்றியவண்ணமே இருக்கும்.. அகல்யாவுக்கும் அது தான் பெரும் கவலை.. பாவம் மோகன். அவளுக்கு ஒரே ஒரு தம்பி...'' கீதாவின் வார்த்தைகள் தேனில் குழைத்த பாகாய் இனித்தன.



சிறுகதை

அதேவேளை நான் எவ்வளவு முட்டாள்த்தனமாகக் கற்பனை செய்து மனிதாபிமானமற்றவனாகச் சிந்தித்து விட்டேனே என்று வேதனைப்பட்டேன். இப்போது அகல்யாவின் தம்பிக்காக என் மனது அழுதது. 'கடவுளே மோகனுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்பட்டு விடக் கூடாது...'

இப்போது மீண்டும் அகல்யாவின் நினைப்பில் மனதில் குதூகலம். எனினும் எனது எண்ணத்தை வெளிப்படுத்த இது ஏற்ற தருணம் இல்லை என்பதால், அடுத்தடுத்த சந்திப்புகளில் அகல்யா பற்றிய விபரங்களை மெல்ல மெல்ல கீதாவிடமிருந்து தெரிந்து கொண்டேன்.

''என்ன வலு அக்கறையாக விசாரிக்கறீங்கள்?'' கீதா சிரித்தாள். ''அப்படி ஒன்றுமில்லை'' என்று அசடுவழியச் சிரித்த என்னை நோக்கி, ''உங்களுடைய ஒன்றுமில்லையிலேயே ஏதோ இருப்பது தெரிகிறது!'' என்றாள்

நாட்கள் நகர்ந்த போது எனது மனக்கிடக்கையை கீதாவிடம் மறைக்க முடியவில்லை. இறுதியில் ஒப்புக் கொண்டதுடன் அவளது உதவியையும் நாடினேன். காலம் கவலைகளை மறக்கச் செய்திருக்கலாம் என்பதால் அகல்யாவைச் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்படி கீதாவிடம் வேண்டினேன். ''அவசரப்பட்டு போட்டு உடைத்து விடாதீர்கள். முதலில் நட்போடு பழகுங்கள். பின்னர் சூழ்நிலை சாதகமாக வரும் போது உங்கள் விருப்பைத் தெரிவிக்கலாம்.. அகல்யா நல்ல பிள்ளை..'' என்று கீதா எனக்கு ஆலோசனை கூறினாள்.

அகல்யாவின் அறிமுகம், நட்பு,, அவளது குடும்ப உறுப்பினர்களின் அறிமுகம் என அடுத்த சில நாட்கள் என் மகிழ்ச்சிக்குக் குறைவில்லை. அகல்யாவின் தம்பியைப் பற்றிய தகவல் ஏதும் கிடைக்காததால் அவளது வீட்டில் இன்னமும் துயரம் இழையோடியிருந்தது. என் மனவிருப்பை செயல்களில் காட்டினாலும் அகல்யாவிடம் அது பற்றி பேசும் நாளுக்காகக் காத்திருந்தேன். அதற்கேற்ற சூழ்நிலையும் விரைவிலேயே ஏற்பட்டது.

ஒரு நாள் என் அலுவலக வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பும் போது அகல்யாவின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். அகல்யா இருக்கவில்லை. அம்மா தான் வரவேற்று உபசரித்தார். தேநீரை அருந்திக் கொண்டிருந்த போது என்னைப் பற்றி, எமது குடும்பம் பற்றி எல்லாம் விசாரித்தார். விரைவிலேயே அகல்யாவுக்கு ஒரு இடம் பார்த்து அவளை இல்வாழ்வில் இணைத்து விடும் எண்ணம் பற்றிப் பேசியவர், நேரடியாகவே விடயத்திற்கு வந்தார். ''தீபன் உங்களுடைய எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' அந்தக் கேள்வியின் அர்த்தம் புரிந்த போது புல்லரித்தது.

நாங்கள் உரையாடிக் கொண்டிருந்த போதே அகல்யாவும் வந்து விட்டாள். பின்னர் அவளோடு தனியே உரையாடும் வாய்ப்பும் கிடைத்தது. நான் ஒருவாறு என் மனக்கிடக்கையை அவளிடம் தெரிவித்தேன். அவள் ஒரு கணம் திகைத்து. போய் என்னை நோக்கினாள். பின்னர் எதுவுமே சொல்லாமல் எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

கொஞ்சம் எதிர்பார்ப்புடனும், கொஞ்சம் ஏமாற்றத்துடனும் மனதில் ஏற்பட்ட நம்பிக்கையுடன் விடைபெற்றேன். மனதில் ஒருவித இனம் தெரியாத குதூகலம் நிறைந்திருந்தது. அவள் மறுக்கவில்லை என்பது தெம்பூட்டியது.

இரண்டு நாள் இடைவெளியில் மீண்டும் சந்தித்தேன். இம்முறை அவள் தைரியமாக என்னை எதிர்கொண்டு அமர்ந்திருந்து கதைத்தாள். ''இப்போது சில நாட்களாக நான் உயிருக்குயிராக காதலிக்க ஆரம்பித்துள்ளேன். அதனால் உங்கள் அன்பான வேண்டுதலை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.''

நான் அதிர்ந்து அவளை நோக்கினேன்

''யாரை...?''

அவள் சிரித்தாள் ''என் தாயகத்தை....''

அவள் பதிலில் நான் குழப்பமடைந்தேன்.

''தீபன்... கொஞ்சம் சிந்தியுங்களேன். எங்கள் எரியுண்ட தேசம் பற்றி சிந்தியுங்களேன். எமது தேசத்தை ஆக்கிரமித்து எமது

-ச. முருகானந்தன்-

மக்களையும் உடமைகளையும் எதிரி அழித்துக் கொண்டிருக்கிறான். இதற்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று நீங்கள் எண்ணிப் பார்த்ததே இல்லையா?''

நான் ஏமாற்றத்துடன் விடை பெற்றேன். இரு நாட்கள் கழித்து அவள் போராளியாக இணைந்த செய்தி கிடைத்தது. மனது உறைந்து போனது. அடுத்த சில நாட்களாக அவளுக்காக அழுதழுது கண்ணீர் வறறிப் போனது. ஆனாலும் விரைவிலே எனக்கும் ஒரு காதலி கிடைத்தாள்.

ஆம்! என் தாயகம் தான் என் காதலி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சங்கராச்சாரியார் கைது!



## 2500 வருடங்கள் பழமையான சங்கரமடம் மர்மங்கள் துலங்குமா?

தமிழ் நாட்டில் சாமியார்களுக்குக் குறைவில்லை. அவர்கள் தொடர்பான சர்ச்சைகளுக்கும் குறைவேயில்லை. பிரேமானந்தா முதல் தற்போது கிளம்பியிருக்கும் சதுர்வேதி சாமியார்வரையும் தமிழ் நாட்டைக் கலக்கிய சாமியார்கள் பலர். 13 வயதேயான குட்டிச் சாமியார் பரணிதரன் கூட விட்டு வைக்கவில்லை. இருந்தாலும் சங்கராச்சாரியார் விவகாரம் உலகிலுள்ள இந்துக்கள் அனைவரையுமே ஒரு உலுப்பி விட்டுள்ளது.

இந்தியாவின் மிகப் பெரிய இந்து பீடம் ஒன்றின் தலைவர் கொலைக் குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் இரவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார். ''பக்தனுக்குச் சோதனை வந்தால் இறைவனிடம் முறையிடலாம். அந்த இறைவனுக்கே சோதனை வந்தால் யாரிடம் முறையிடுவது?'' என்று விக்கித்துப்போய் நிற்கிறது காஞ்சி சங்கர மடம்.

கேரளாவின் காலடியில் பிறந்து, ஆன்மீகத்தில் திளைத்து, அத்வைத தத்துவத்தைப் பரப்பியவர் ஆதிசங்கரர். இந்து மதத்தைத் தளைக்க வைக்க இந்தியாவின் நான்கு பகுதிகளிலும் அவர் மடங்களை நிறுவினார். கிழக்கே பூரியிலும் மேற்கே துவாரகையிலும் வடக்கே பத்ரியிலும் தெற்கே காஞ்சியிலும் மடங்கள் நிறுவப்பட்டன. இவற்றில் காஞ்சி மடத்தின் முதலாவது மடாதிபதியாகத் தானே பதவியேற்றார் சங்கரர். இதனால் ஏனைய மடங்களைவிட, காஞ்சிக்கு புகழும் செல்வாக்கும் மிகுதி.

2,500 ஆண்டுகளுக்கு மேலான பழமை வாய்ந்த இந்தக் காஞ்சி சங்கர மடம்தான் இன்று சர்ச்சைகளின் மையம். உலக ஆசாபாசங்களில் இருந்து ஆன்மாக்களை விடுவித்து இறைவனிடம் லயிக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்த, இந்துக்களால் கடவுளுக்கு நிகராக மதிக்கப்பட்ட சங்கராச்சாரியார் மீதே கொலைக் குற்றச்சாட்டு. தீபாவளித் திருநாளில், இரவில், கிரிமினல் குற்றவாளிகளைக் கைது செய்வது போன்று பொலிஸ் அவரைக் கைது செய்துள்ளது.

காஞ்சி சங்கர மடத்தில் முன்னர் பணியாற்றிப் பின்னர் காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் நிர்வாகியாக இருந்தவரான சங்கரராமன் என்பவரை சங்கராச்சாரியார் திட்டமிட்டு சம்ஹாரம் செய்தார் என்பதுதான் அவர் மீதான குற்றச்சாட்டு. அதற்கான ஆதாரங்கள் தம்மிடம் உண்டு என்கிறது பொலிஸ்.

கேரளாவின் மெகபூப் நகரில் கைது செய்யப்பட்டதும் சங்கராச்சாரியார் எந்த எதிர்ப்பும் இன்றிப் பொலிஸாருடன் புறப்பட்டார். ''எங்கே இருந்தாலும் எனக்கு ஒன்றுதான்'' என்பதுதான் கைதானபோது அவர் சொன்ன ஒரே வார்த்தை. வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட அவர் அங்கேயே தனது பூஜைகளையும் செய்து வருகிறார். சட்டப்படி வழக்கைச் சந்திப்பதற்கு அவர் தயாராகி விட்டார். தன் மீதான குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கப்படும் வரை அவர் போராடுவார் என்றே தெரிகிறது.

காஞ்சி மடத்தின் தொடர்பு அறுந்த நிலையில் சங்கராச்சாரியார் இருப்பது இது ஒன்றும் முதற்றடவையல்ல. 1987ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி காஞ்சியின் மாகாபெரியவர் என்று வர்ணிக்கப்படும் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளுடன் அப்போது இளையவராக இருந்த ஜெயேந்திரருக்கு கருத்து முரண்பாடு ஏற்பட, கோபித்துக் கொண்டு மடத்தை விட்டுத் திடீரென மாயமாகி விட்டார். மடாதிபதிகள் தங்களுடன் எப்போதும் வைத்திருக்கும் கமண்டலம் மற்றும் தண்டம் (நீண்ட தடி) ஆகியனவற்றையும் மடத்திலேயே விட்டுவிட்டுப் போனார்.

தமிழகம் முழுவதும் அதிர்ச்சி அலை தாக்கியது. ஜெயேந்திரர் என்னவானார்? எங்கிருக்கிறார் என்ற தகவல்கள் தெரியவில்லை. நான்கு நாள்களின் பின்னர் காவிரி நதி உற்பத்தியாகும் பகுதியான கைலாஷ் என்ற இடத்தில் ஆச்சிரமம் ஒன்றில் அவர் இருக்கிறார் என்பதைக் கண்டு பிடித்தார்கள். பின்னர் அவரைச் சமாதானப்படுத்தி அழைத்து வந்து மடத்தின் பொறுப்புக்களை மீண்டும் கொடுத்தார்கள்.

1994 ஆம் ஆண்டில் மகாபெரியவர் தனது 100ஆவது வயதில் இறைபதம் அடைந்ததும் அதிகாரத்துக்கு வந்தார் ஜெயேந்திரர்.

அப்போது மட்டும் என்றில்லை இப்போதும் சங்கராச்சாரியாருக்கும் இளையவரான விஜயேந்திரருக்கும் இடையே முரண்பாடுகள் இருக்கின்றன என்கிறார்கள். ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டபோது விஜயேந்திரரும் உடன் இருந்தார். ஆனால், கைது பற்றி அவர் சில நாள்கள் வரை மௌனம் காத்தார். கண்டனமோ கருத்துக்களோ தெரிவிக்கவில்லை. பத்திரிகையாளர்களைச் சந்திக்கவும் மறுத்துவிட்டார். இது ஊடக உலகில் பல்வேறு சந்தேகங்களுக்கும் வித்திட்டது.

மூத்தவருக்கும் இளையவருக்கும் இடையிலான பிரச்சினைகளே ஜெயேந்திரர்



வேலூர்ச் சிறை வரை சென்றதற்குக் காரணம் என்றும் சுடச்சுடச் செய்திகள் வருகின்றன. இவற்றை உறுதி செய்வது கடினம். எனினும் நீண்ட காலமாகவே இருவருக்கும் இடையில் முரண்பாடுகள் இருக்கின்றன என்பதும் மடத்துக்குள் இருவருக்கும் ஆதரவான கோஷ்டிகள் பிளவுபட்டுள்ளன என்பதும் தெரிந்த செய்திகள்தான்.

காஞ்சி வரதராஜப் பெருமாள் கோயில் நிர்வாகி சங்கரராமன் கொலையில் கூட இளையவரின் தம்பியான ரகுவுக்குத் தொடர்பு இருக்கின்றது என்கிறது பொலிஸ். அவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். அதற்கு முன்பே அவரைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அவரிடமிருந்தே ஜெயேந்திரரைக் கைது செய்வதற்கு வேண்டிய பல தகவல்களை பொலிஸ் பெற்று விட்டது என்கின்றன பொலிஸுக்கு நெருங்கிய வட்டாரங்கள். இப்போது அவர் சாட்சியாகவும் (அப்ரூவர்) மாறிவிட்டார்.

சங்கரராமன் காஞ்சி சங்கர மடத்தில் பணியாற்றிய சமயம், உள்ளே நடக்கும் முறைகேடுகள் பற்றி அக்குவேறு ஆணிவேறாக அறிந்து கொண்டதுடன் அவை பற்றி வெளியேயும் தெரிவித்தார். புனைபெயரில் 'நோட்டீஸ்'கள் அடித்து வெளியிட்டார். கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதி அவர் ஜெயேந்திரருக்கு அனுப்பிய கடிதத்தில் ''நீங்கள் திருந்தவில்லை என்றால் உங்கள் தவறுகள் குறித்து பத்திரிகைகளுக்குப் பகிரங்கமாகப் பேட்டி கொடுப்பேன்'' என்று மிரட்டியிருந்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க...)



கைது செய்யப்பட்டு காஞ்சிக்குக் கொண்டு வரப்பட்ட சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் பொலிஸ் வாகனத்தில் இருந்து இறங்கி நீதிமன்றம் நோக்கிச் செல்கிறார்.

உங்களுக்கு ஓர் இதயம் இருந்தால்...

அதனைக் கவனிப்பதற்கு எம்மை அனுமதியுங்கள். சத்திரசிகிச்சை இல்லை!!! ஒருசில ஆயுள்வேத மாத்திரைகள் மட்டுமே. உங்கள் இதய அடைப்புகளை அகற்றி விடுகின்றன. அதற்கு சொற்ப பணமே செலவாகும். மிகவும் சொற்பம் பக்கவிளைவுகள் இல்லை-வேறு எந்த சிக்கலும் இல்லை. இந்த மாத்திரைகளால் குணமடைவதை கடந்த 6 வருடங்களாக ஒரு தோல்வி கூட கண்டதில்லை. (இவ்விடத்தில் குணமாகியவர்களின் நூறு விலாசங்கள் உங்களுக்கு நாம் அளிக்கமுடியும்) மேலும் விபரங்களுக்கு தயவு செய்து எமக்கு எழுதுங்கள். இதைச் செய்ய 5 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்குங்கள். இந்த 5 நிமிடங்களும் உங்கள் வாழ்வில் மிக அதிகம் நினைவு கொள்ளத்தக்க நேரமாக அமையும். இது ஏதாவது மாரடைப்பு மற்றும் நெஞ்சுவலி வரலாம் என்ற கவலை மற்றும் அச்சத்திலிருந்து உங்களை விடுபடச்செய்து நீங்கள் ஆரோக்கியமான சகஜமான வாழ்க்கையை வாழ்வதற்கு உதவும்.

விபரங்களும் இலவச ஆலோசனைகளும்

FAIR PHARMA (PVT) LTD

லெவல் 5/ கிழக்கு டவர், 1இ, உலக வர்த்தக மையம் கொழும்பு-01.
தொ.பே.: 0094 11 5517897, 5551879, 5558442. பாக்ஸ்: 0094 11 5517756
ஈ-மெயில்: fppvtl@lankabellnet.com வெப்சைட்: www.fppvtl.com

மருத்துவ ஆலோசனைகள்: டாக்டர் வசந்த பத்மகுமார. தொ.பே: 077 3063550
தொழில் மற்றும் ஏற்றுமதித் தகவல்: திரு. நிரோஷ்ஜயமஹா தொ.பே: 077 3063540

கிடைக்குமிடங்கள்

★ டாக்டர் ஏ.எல்.டி.பி. லியனகே, ரோகன ஞானகாரய
இல. 3, எஸ்.கே. எட்மண்ட் மாவத்தை,
காலி, தொ.பே: 091 2246533

★ டாக்டர் பிரசன்னா கல்தேரா,
சுவாபிய ஆயுர் வேத மருத்துவமனை
இல. 562, கொழும்பு வீதி, கம்பகா,
தொ.பே: 033 4674024

★ டாக்டர். லலித் அளவத்கொட
இயற்கை நிவாரண ஆயுர்வேத கிளினிக்
இல. 831-1, கோட்டே வீதி, அத்துல் கோட்,
தொ.பே: 011 2886319

★ டாக்டர் லிசிர எம். விஜேசூரிய,
இல. 17, நிகாபே மாவத்தை. நெதிமால, தெகிவளை.
தொ.பே: 011 5511800, 5550882.

★ டாக்டர். எஸ்.எம். வீரசிங்கபண்டார
மருத்துவச்சாலை, ஹொரவுபொதான. தொ.பே: 037 2249134

★ டாக்டர். எல்.எஸ்.டி.பி. லியனகே.
மருத்துவச் சாலை (பிரைவட்) லிமிடட்.
இல. 144, கொழும்பு வீதி, கண்டி. தொ.பே: 081 2222904

★ டாக்டர். சி.டி. மதுரநாயகம்
இல. 187, செட்டியார் தெரு, கொழும்பு-11, தொ.பே: 011 2421398

★ டாக்டர். ஆனந்த சமரநாயக்க,
மருத்துவ நிலையம், புதிய புத்தளம் வீதி,
போதனாசம, அநுராதபுரம். தொ.பே: 025 2225180
ஆயுர்வேத கிளினிக் இல. 831-1, கோட்டே வீதி,
அத்துல் கோட், தொ.பே: 011 2886319.

★ டாக்டர். டி.எம்.எஸ்.கே. திசநாயக்க,
கம்பகா மருத்துவச் சாலை 731, கொழும்பு வீதி, குருணாகலை.

★ டாக்டர். ஜி. குணராஜ்,
லோட்டஸ் மருத்துவச் சாலை அநுராதபுரச்சந்தி
கிண்ணியா, திருகோணமலை. தொ.பே: 077 7602535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# சருமத்தில் ஏற்படும் சுருக்கம் தானாக மறையாது கவனம்

கேள்வி:- வயது 35. பெண். திருமணமாகி குழந்தைகள் இருக்கின்றன-எனக்கு வாயைத்திறக்கும் போது - கொட்டாவி விடும்பொழுது- தாடைகள் கன்னத்தில் பொருந்தும் இடத்திலிருந்து- நோவும் -சத்தமும் ஏற்படுகிறது. எனது வைத்தியரிடம் காட்டி மருந்து செய்த போது வலி மறைந்துவிட்டது. ஆனால், சத்தம் கேட்டுக் கொண்டே இருக்கிறது. இதனால் எதிர் காலத்தில் ஏதாவது நோய் ஏற்படுமா?



பதில்:-தாடை எலும்புகள் கன்னத்து எலும்புகளோடு சேரும் இடத்தை TEMPORO - MANDIBULAR மூட்டு என்று அழைப்பார்கள். இந்த மூட்டு SADDLE JOINT எனப்படும் வழுக்கி (SLIDING) இயங்கும்மூட்டு. இந்த மூட்டின் வலிமை, நிலைத்து நிற்கும் தன்மை யாவும் இந்த மூட்டுகளை சுற்றியிருக்கின்ற தசைகளிலேயே தங்கியிருக்கின்றது. கனமான பொருட்களை வாயினுள் வைத்து கடைவாய்ப் பற்களால் அழுத்திக் கடிக்கும் போது இந்த தாடை மூட்டு பாதிக்கப்பட்டு கீழிறங்கி மேல் எழும்பும் SLIDING (வழுக்கல்) இயக்கம் பாதிக்கப்படுகிறது. தாடை மூட்டில் – கீழே வழுக்கி – இறங்கிய தாடை – மேலே திரும்பவும் போய் பழைய இடத்தை அடையும் போது ஏற்படும் CLICK எனப்படும் பொருத்தும் சத்தமே உங்களுக்கு கேட்கும் சத்தமாகும். காலக்கிரமத்தில் இந்த சத்தமும், வலியும் தானாகவே குறைந்துவிடும். குணமாவதை விரைவுபடுத்த ANALGESIC & ANTI INFLAMATORY அதாவது வலி நீக்கி மற்றும் வீக்கம் குறைக்கும் மாத்திரைகளை உபயோகிக்கலாம். BRUFEN, PONSTAN, INDOMETHACIN மாத்திரைகள் மேலே குறிப்பிட்ட வகையைச் சேர்ந்தவை. மேலும் தாடை மூட்டுக்கு வீக்கத்தை குறைக்க வெப்ப ஒத்தடம் அல்லது வெப்பம் தரும் இயல் சிகிச்சை உபகரணங்கள் கொண்டு சிகிச்சையளிக்க முடியும். எதிர் காலத்தில் இந்த நோய் பாதிப்புகளை ஏற்படுத்தாதுகடைவாய்ப் பற்களை இழந்தவர்களுக்கு இப்படி அடிக்கடி நேரிட வாய்ப்பு உண்டு.

கேள்வி:- பெண் வயது 22. எனது கை – கால்களில் வயதானவர்களின் சருமம் போல் சுருக்கம் விழுந்து காணப் படுகிறது. ஒரு சரும நோய் வைத்தியரிடம் காட்டி அவர் தந்த 'கிறீம்' மருந்தை உபயோகித்தபோது – கொஞ்சம் நன்றாக இருந்தது. ஆனால், மறுபடியும் சுருக்கம் விழுகின்றது. இதற்கு என்ன செய்யலாம்?

பதில்:- அநேகமாக வரண்ட சுருக்கம் விழும் சருமத்துக்கு காரணம் —உடலில் கொழுப்பு மற்றும் புரதச் சத்துக்களின் குறைபாடே. முக்கியமாக சருமத்திற்கு தேவையான விட்டமின் A மற்றும் D போன்றவை உடலில் கொழுப்புச் சத்து இருக்கும் போதுதான் திறமாக செயற்புரிகின்றன. எனவே, உங்கள் போஷாக்குத் தன்மை பற்றி கவனம் எடுங்கள். உணவில் நிறைய பச்சைக்காய்கறிகளை சேர்த்துக் கொள்ளுங்கள். ஓரளவு நெய், பட்டர், மாஜரின் சேர்த்துக் கொள்வது நல்லது. சிறிய மீன் வகையான நெத்தலி மற்றும் சுறா மீன்களில் சருமத்துக்கு தேவையான விட்டமின்களும், எண்ணெய்களும் உள்ளன.

இது தவிர உங்கள் சருமத்திற்கு குழந்தைகள் உபயோகிக்கும் சவர்க்காரங்களை உபயோகிக்கவும். மற்றைய சவர்க்காரங்கள் காரமானவை. சருமத்தின் எண்ணெய்ப் படையை முற்றாகத் துடைத்து எடுத்துவிடுவதால் சருமம் காய்ந்துவிடும். உணவில் நல்லெண்ணை தாராளமாகச் சேருங்கள். நல்லெண்ணை அல்லது ஒலிவ் எண்ணெய் பூசுங்கள்.

இத்துடன் தைரொய்ட் சுரப்பு குறைபாடும் இவ்வாறான சரும நோயைத்தரும். THYROID PROFILE என்ற பரிசோதனை செய்து உங்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பெறுங்கள்.

சருமத்திற்குரிய விட்டமின்கள் A, $B_1$, $B_2$, $B_6$, D என்பவையும் கனிப்பொருட்கள் துத்தநாகம், மங்கனீஸ், இரும்பு என்பவையும் முக்கியம். இவையாவும்ஒருங்கே உள்ள 'மல்டிவிட்டமின்' மாத்திரைகளை தினம் ஒரு வேளை உபயோகிக்கலாம்.

கேள்வி:- பெண் வயது 28. திருமணாகி 3 மாதங்களாகிவிட்டன. உடல் உறவின் போது பிறப்புறுப்பில் தாங்கொள்ளாத வலியாக உள்ளது. இதனால் உடல் உறவு என்றாலே பயமாகவும், வெறுப்பாகவும் உள்ளது. எனது திருமணவாழ்க்கை நலம்பெற ஆலோசனை தரவும்.

பதில்:- உடலுறவின்போது பிறப்புறுப்பில் வலி ஏற்படுவதை DYSPAREUNIA என்று கூறுவர். இதற்கு பலகாரணங்கள் உண்டு.



முக்கியமான காரணம், மனைவி உடலுறவு கொள்ளத் தயாராக இல்லாதபோது கணவன் தனது திருப்திக்காக மனைவியை நிர்ப்பந்தித்தால்– அந்த உடலுறவு வலியுள்ளதாக இருக்கும். பெண்ணை உடலுறவுக்கு ஒத்துழைக்க– தயார் படுத்துவதற்கு FORE PLAY என்று சொல்வார்கள். இந்த தயார்படுத்தலின் போது பெண் உறுப்பில் திரவங்கள் கசிந்து உடலுறவை இலகுபடுத்த உறுப்பை தயாராக்கும். இதுதான் உங்கள் பிரச்சினை என்றால்– கணவனோடு மனம் விட்டு பேசி– வெட்கப்படாமல் உங்கள் பிரச்சினையைச் சொல்லுங்கள். நல்ல கணவன் தனது திருப்திக்காக தன் மனைவியை கஷ்டப்படுத்தமாட்டான். புரிந்து கொண்டு கணவர் உங்களோடு ஒத்துழைக்கும்போது பிரச்சினையே தீர்ந்துவிடும். உங்கள் குடும்பவைத்தியரிடம் – கணவனை உங்கள் பிரச்சினைப் பற்றி கலந்தாலோசிக்கச் சொல்லுங்கள்.

இது இருபத்தோராம் நூற்றாண்டு. பால் உணர்வு பற்றிய விடயங்களை தம்பதியர் பரஸ்பரம் பகிரங்கமாக கலந்தாலோசிக்கும் காலமிது. எனவே, வெட்கப்பட்டு வாழ்க்கையை துன்பமாக்கி விடாதீர்கள்.

சில வேளைகளில் பிழையான மனோநிலை காரணமாக இந்த DYSPARE UNIA ஏற்படலாம். சிறுவயதில் பால் உணர்வுகள் மற்றும் தாம்பத்திய வாழ்வு பற்றிய தவறான கருத்துகளை பெற்றோர், ஆசிரியர், நண்பர்கள் மூலமாகவோ அல்லது தப்பான நூல்களைப் படித்து பிழையாக புரிந்து கொண்டதன் மூலமாகவோ, செக்ஸ் தாம்பத்திய உறவு என்பவை பற்றி வீணான பயம், தேவையில்லாத வெறுப்பு அடிமனதில் ஏற்பட்டிருக்கலாம். சிலவேளைகளில்– அறிவு வளரா வயதில் உங்களைவிட பெரியோர், நண்பர்கள் உங்களோடு தவறாக பழக முற்பட்டதால், தவறாக நடந்தால் செக்ஸ் என்றாலே வெறுப்பும் கோபமும் அடிமனதில் ஏற்பட்டிருக்கலாம்.

இவை உங்கள் உடலுறவின்போது அடிமனதைவிட்டுவெளியே வந்து– அருவருப்பு, வெறுப்பு உணர்வுகளை தருவதால் உடலுறவு நேரம் உங்கள் பிறப்புறுப்பு தயாராக இல்லாமல் இருக்கின்றது. இவை கூட வலியோடு கூடிய உடலுறவுக்கு காரணமாகும்.

ஒரு சிலருக்கு பிறப்புறுபில் சிலகோளாறுகள் இருக்கலாம்.

புற்றுநோய் சம்பந்தப்படாத சிறுவளர்ச்சிகள், கட்டிகள், தொற்றுக்கள், சிறுநீர் தொற்றுகள் என்பவை கூட வலியோடு கூடிய உடலுறவுக்கு காரணமாகும். இவற்றிற்கு ஒரு பெண்நோய் நிபுணர்– GYNAECOLOGIST இன் ஆலோசனை பெறப்படல் வேண்டும்.

# நேரம் ஒதுக்குங்கள்



வாழ்க்கையை முழுவதும் அனுபவிக்க நேரம் ஒதுக்குங்கள்
இது வெற்றியின் இரகசியம்.
சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது செயல் திறனின் பிறப்பிடம்.
விளையாடுவதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது இளமையின் இரகசியம்.
வாசிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது மெய்யறிவின் மூலதத்துவம்.
நட்பாக இருக்க நேரம் ஒதுக்குங்கள்
இது மகிழ்ச்சியின் பிறப்பிடம்.
கனவு காண்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது ஆன்மாவை நட்சத்திரங்களுடன் பின்னிப் பிணைக்கின்றது.
சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது வாழ்க்கைத் துன்பங்களை நீக்க உதவும், ஆன்மாவின் இன்னிசை.
இறைவனுக்காக நேரம் ஒதுக்குங்கள்
இது ஒன்றே வாழ்வின் நிலையான முதலீடு.
தியானம் செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது மன வலிமையின் எழுச்சி.
பிரார்த்தனை செய்ய நேரம் ஒதுக்குங்கள்
இது இறைவனுடன் உங்கள் உள்ளத்தின் சங்கமம்.
அன்பு செலுத்த நேரம் ஒதுக்குங்கள்
இது வாழ்க்கையின் உயரிய இன்பம்.
வேலை செய்வதற்கு நேரம் ஒதுக்குங்கள்
இது வெற்றிக்கான வெகுமதி.

*தமிழாக்கம்: மார்க்கண்டு கண்ணன் (சொய்சாபுரம்)*
*ஆக்கம்: லோங் பெலோ. (Longfellow)*

# இது எரி மலை 'பிரேக்'

எரிமலை வெடித்தால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். அதிலிருந்து வெளியேறும் நெருப்புக்குழம்புகள் உயிரைப் பறிக்கும். சாம்பலோ பலமைல்கள் தூரம் பரவி அந்தப் பகுதியின் சீதோஷ்ண நிலையை தற்காலிகமாக மாற்றிவிடும்.



அண்மையில் ஐஸ்லாந்து நாட்டில் உள்ள கிரிம்ஸ்வோன் எரிமலை வெடிப்பால் நெதர்லாந்து, நோர்வே நாடுகளின் விமானப் போக்குவரத்தே சில நாட்கள் அடியோடு முடங்கிப்போனது.

இந்த எரிமலைவெடிப்பால் ஏற்பட்ட சாம்பல் புகை ஐரோப்பாக் கண்டத்தில் குறிப்பாக நோர்வே, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளின் குறுக்காக அட்லாண்டிக் கடலின் 300 கிலோ மீட்டர் பகுதியைச் சூழ்ந்து கொண்டு விட்டது. இதனால் நெதர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகளின் வழியாக அமெரிக்கா செல்லும் விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டன. எப்போது மீண்டும் விமானப் பயணம் தொடரும் என்பது தெரியாமல் இந்தியப் பயணிகள் விமானநிலைய தரையிலேயே உறக்கம்போடும் காட்சியைத் தான் படத்தில் பார்க்கிறீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனர்வாழ்வுக்காகத் தவமிருக்கும் திருகோணமலை அலஸ்தோட்ட மக்கள்

திருகோணமலை அலஸ்தோட்ட மக்கள் புனர்வாழ்வு பெற்று மீட்சி பெறுவதற்கு தவமிருக்கின்றனர். பிற இடங்களில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் மட்டுமன்றி, சொந்தக் கிராமத்தவர்களும் அகதி வாழ்க்கை வாழும் அவலம் திருகோணமலை மாவட்டத்திலும் நிலைத்துவிட்டது.

அலஸ்தோட்டத்தில் இருக்கும் அகதிகள் முகாமில் பெரும்பாலும் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மக்களே கடந்த 14 வருடங்களாக அகதியாக வாழ்கின்றனர். இவற்றைவிட அலஸ்தோட்டத்தில் வசிக்கின்றவர்களும் வறுமைக்கோட்டுக்கு கீழே இருந்துகொண்டே காலம் கடத்துகின்றனர். அலஸ்தோட்ட அகதிகள் இன்னும் மீளக் குடியமர்த்தப்படவில்லை. அவர்களுக்கு புனர்வாழ்வும் அளிக்கப்படவில்லை. அரச தரப்பினாலோ, அரச சார்பற்ற நிறுவனங்களாலோ மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் கைகூடியதாகத் தெரியவில்லை. அதேவேளை, எந்தப்பயனும் திருப்தி அளித்ததாகத் தெரியவில்லை.

அலஸ்தோட்ட அகதிமுகாம் குடியிருப்பாளர்களைவிட மேலும் பல பிரச்சினைகளுக்கு அக்கிராமத்தவர்கள் முகம்கொடுத்த வண்ணமுள்ளனர். இக்கிராமத்தில் இந்திய வம்சாவளித் தமிழர் குடும்பங்கள் சுமார் இருபதும், ஏனைய தமிழ்க் குடும்பங்கள் சுமார் நூற்றியிருபதும் வசிக்கின்றன.

மீன்பிடி, சிறுவிவசாயம், சிறிய வியாபாரம், கூலித்தொழில் என்பன ஜீவனோபாயத்துக்காக மேற்கொள்ளும் தொழில்களாகும்.

1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தோர், மீளக்குடியமர்ந்தோர் எனப் பலரும் மீட்சி பெற முடியாமல் திண்டாடுகின்றனர்.

இந்நிலையில் இவர்களுக்கு அண்மையில் பெய்த அடைமழையும் பேரிடியைக் கொடுத்துள்ளது. மழையினால் உண்டான வெள்ளம், வீடு, வளவு எங்கும் நிறைந்து காணப்படுகின்றது. வீட்டைவிட்டு வெளியேற முடியாத நிலையும், நடமாட முடியாத நிலையும் அங்கு காணப்படுகிறது. ஏற்கனவே கிடைக்கப்பெறுகின்ற வருமானமும் அற்றுப்போன நிலையில் பட்டினியால் வாடுகின்றனர்.

வீதியெங்கும் மழைநீர் ஆக்கிரமித்துள்ளது. வெள்ள நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்தும் எந்த பதிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சம்மந்தப்பட்ட தரப்பினர் எவரும் வந்து பார்வை இடவில்லை என்றும் கூறப்படுகிறது.

இவை இப்படியிருக்க, இவர்கள் காசு கொடுத்து வாங்கிய காணியை சிலர் ஆக்கிரமிப்புச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாகவும் புகார் கூறப்படுகின்றது. இவர்கள் வளவுகளுக்குச் செல்லும் பாதைகளை மறைத்து தமது நிலம் எனச் சிலர் சொந்தம் கொண்டாடுவதால் செல்லும் வழியின்றி திக்குமுக்காடுகின்றனர். 40 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரை இவர்கள் காணிகளுக்காக காசு கொடுத்துள்ளனர். சிலரின் அபகரிக்கும் செயல்கள் இந்த ஏழைகளை வேதனைக்குள்ளாக்கியுள்ளது.

இங்கு குட்டைகளில் நிறைந்திருக்கும் நீர்த்தொட்டி நுளம்புகளின் பெருக்கத்துக்கு வழிவகுக்கின்றது. இப்பகுதிக்கு உல்லாசம் தேடி நட்சத்திர விடுதிகளை நாடும் சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினர் எப்போது உதவுவர் என இம்மக்கள் ஏங்கி நிற்கின்றனர். புனர்வாழ்வு கிடைக்குமா?

–எஸ்.எஸ்.ஆர் –


**விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்**

இந்திய மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற நிகர்நிலைப் பல்கலைக்கழகம்
சேலம் - 636 308, தமிழ்நாடு, இந்தியா.

தாய்லாந்து அரசு அங்கீகாரம் பெற்ற பாங்கொக், தாய்லாந்து Rangsit பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் இளநிலை மருத்துவ பட்டப்படிப்பு

**International Off-Shore Medical Programme - MBBS**

(முதலாவது கற்கைநெறி அனுமதி அறிவிப்பு - (2004 - 2005)

**இக்கற்கைநெறி**

- முதல் இரண்டு ஆண்டு மருத்துவக்கற்கை நெறி, மற்றும் பயிற்சி வகுப்புக்கள் தாய்லாந்து Rangsit பல்கலைக் கழகத்துடன் இணைந்து நடத்தும்.
- அடுத்து 2-1/2 ஆண்டு மருத்துவக் கற்கை நெறியும் பயிற்சியும், ஓராண்டு உள்ளகப் பயிற்சிநெறியும் இந்தியா, தமிழ்நாடு விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவன மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறும்.
- மேற்படி கற்கைநெறிகள் யாவும் இந்திய மருத்துவக் கழகத்தின (Medical Council of India) ஒழுங்கமைப்பிற்கு ஏற்ப நடத்தப்படுகின்றது.
- விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம், (நிகர்நிலைப் பல்கலைக்கழகம் - Deemed University) M.B.B.S பட்டத்தினை வழங்கும்.

**தகைமைகள்**

- இலங்கை அல்லது வெளிநாட்டு மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் (அல்லது அதற்கு சமமானது) உயிரியல், இரசாயனவியல், பௌதீகம் ஆகிய பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு

பதிவாளர் - விநாயகா மிஷன்ஸ் ஆராய்ச்சி நிறுவனம்

சேலத்தில்
NH-47, Sankari Main Road,
Ariyanoor, Salem 636 308.
☎ 91 427 2477316, 317,833
Fax: 91 427 2477903
E-mail: vmrf@vinayakamissions.com

சென்னையில்
160 (208), Poonamalee High Road,
Kilpauk, Chennai : 600 010
☎ 91 44 2825 5060, 2811, 3776
Fax : 91 44 28241708
Email: admissions@vinayakamissions.com

மீண்டும் அரியவாய்ப்பு
யாழ் நகரில Spot Admission
Only on 21 / 22 - 2004
411, Kankesanthurai Road,
JAFFNA.

www.vinayakamission.com & www.isu.ac.th

இலங்கை ஒருங்கிணைப்பாளர்

**nn educonsult**

181/1 W.A சில்வா மாவத்தை, கொழும்பு 06.
☎ 011 555 88 33, Fax : 011 555 88 44, Email: nnconsult@sltnet.lk

Piccaso



# Congratulations !!!
## To The NIIT'ians Who Gained Entry To Northumbria University Sep 2004

northumbria UNIVERSITY
great learning great experience great future

**Study for 2 years at NIIT and complete the final year at Northumbria**

**NIIT**



K Vijayasarathi, Kandy Centre | M. I. Ismail, Kandy Centre | P. Samaranayake, Kandy Centre | R. Mohamed, Kandy Centre



T. Dahanayake, Kandy Centre | A. S. A. Shifan, Nugegoda Centre | A. K. Hemaratne, Nugegoda Centre | K. S. Weerasinghe, Nugegoda Centre



Manju Menaka, Nugegoda Centre | Mohamed Roshan, Nugegoda Centre | S. L. Disasekara, Nugegoda Centre | M. F. Jiffry, Union Place

northumbria UNIVERSITY
great learning great experience great future
Compelete at




NIIT enabled by cyberSKILLS
enabling the young professional for a better future

For Information on University Entry
**Business Management School, University of Northumbria Principal Representative In Sri Lanka**

591, Galle Road, Colombo 06.
Telephone 2 504 757 / 2 360 978
Fax : 2 504 758
Email : northumbria@sltnet.lk

NIIT
GLOBAL LEADER IN EDUCATION AND TRAINING

NIIT Branches

| | | | |
|---|---|---|---|
| Union Place | 011 4 720790 | Gampaha | 033 4 673222 |
| Nugegoda | 011 4 408770 | Bambalapitiya | 011 4 519111 |
| Kurunegala | 037 4 691000 | Trincomalee | 026 2 227767 |
| Kandy | 081 4 470900 | Jaffna | 021 2 227250 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

நவம்பர் 21 – 27, 2004



85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14. டெலிபோன்: 011–4734401—6
பாக்ஸ் : 011 – 4734404
E-mail: editorial@sudaroli.com


## சர்வதேச பிரசாரம் அவசியம்

அரசாங்கம் தற்பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வருகிறது.

சர்வதேச ரீதியில் புலிகளுக்கு இருந்து வரும் மதிப்பை மழுங்கடிப்பதும், அவர்களைத் தனிமைப்படுத்துவதுமே அரசின் முக்கிய நோக்கம்.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் ஏற்பட்டுவரும் முட்டுக்கட்டைக்கு புலிகள் தான் காரணம் என்பது ஒரு குற்றச்சாட்டு.

புலிகள் பயங்கரவாதிகள்; கொழும்பிலும், வடக்கு – கிழக்கிலும் நடைபெறும் கொலைகளுக்கு அவர்கள் தான் பொறுப்பு. புலிகள் சிறுவர்களை பலவந்தமாக தமது படையில் சேர்க்கிறார்கள். சர்வதேச சட்டங்களுக்கு இது முரணானது, ஆகியவை ஏனைய குற்றச்சாட்டுக்கள்.

ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உட்பட்ட ஏனைய அமைச்சர்களும் வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் அந்த நாடுகளின் தலைவர்களுக்கு இதனைத் தான் ஓதி வருகிறார்கள்.

சமீபத்தில், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் சுவிஸுக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்ற புலிகளின் அரசியல் குழுவினர் அரசின் பொய்ப்பிரசாரங்களை முறியடிப்பதில் பெரிதும் வெற்றி கண்டிருந்தனர்.

தாம் விஜயம்செய்த நாடுகளில் இவர்கள், இலங்கை இனப்பிரச்சினையில் தற்போது தோன்றியுள்ள நிலை குறித்து நன்கு விளக்கம் அளித்திருந்தனர்.

முக்கியமாக புலிகள் பேச்சுவார்த்தைக்கு வருகிறார்கள் இல்லை என்ற இலங்கை அரசின் குற்றச்சாட்டுக்கு இவர்கள் அந்த நாடுகளில் தக்க பதில் கொடுத்திருந்தனர்.

தற்பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடமும் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் கடந்த வாரம் கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்திருந்தனர். செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் தவிர்ந்த 20 எம்.பிக்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்துவதற்கு புலிகள் தயாராக இருக்கின்றனர் என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் சர்வதேச நாடுகளுக்குத் தெரிவிக்கவேண்டும் என்று அங்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்தப் பணியை செவ்வனே நிறைவேற்றுவதின் மூலம் அரசின் பிரசார இயந்திரத்தை முழுமையாக முறியடிக்க முடியும்.

புலிகளின் தன்னாட்சி அதிகார சபை யோசனைகளுக்கு ஜே.வி.பி. காட்டிவரும் எதிர்ப்புக் காரணமாகவும் தென்னிலங்கையில் ஜே.வி.பிக்கு அதிகரித்துவரும் செல்வாக்குக் காரணமாகவும் ஜே.வி.பியை மீறிக் கொண்டு புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த முடியாத நிலையில் ஜனாதிபதி இருந்து வருகிறார்.

ஜனாதிபதி விரும்பினால் புலிகளுடன் பேச்சு நடத்தட்டும், ஜே.வி.பி. குறித்து கவலைப்படத் தேவைஇல்லை என்கிறார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசினால் அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. அமைச்சர்கள் உடனே இராஜினாமாச் செய்து விடுவர் என்கிறார் ஜே.வி.பி அமைச்சர் லால்காந்த.

இப்படியான நிலையில் பேச்சுக்களை ஆரம்பிக்க முடியாது, புலிகள் மீது குற்றத்தைச் சுமத்தி தப்பித்துக் கொள்ள முயற்சிக்கிறார் ஜனாதிபதி.

இதனை முறியடித்து உண்மைநிலையை வெளிநாடுகளுக்குத் தெரியப்படுத்த சர்வதேச பிரசாரம் அவசியம்.

# பேச்சை ஆரம்பிப்பதற்கு பின்னடிப்பவர்கள் யார்?

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் தலைமையிலான குழுவினர் கடந்த தீபாவளி தினத்தன்று கிளிநொச்சியில் தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்து விட்டு மீண்டும் நோர்வே திரும்பி உள்ளனர்.

முட்டுக்கட்டை நீங்கி சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் ஏதாவது ஏற்படலாம் என்று இந்தச் சந்திப்பின் போது எதிர்பார்க்கப்பட்டது.

ஜான் பீற்றர்சன் ஊடாக தேசியத் தலைவருக்கு ஜனாதிபதி முக்கிய தகவல் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக அப்பொழுது ஊடகங்களில் வெளியாகி இருக்கின்றன.

ஆனால் அப்படி எதுவும் இல்லை என்பது கிளிநொச்சிச் சந்திப்பின் போது தெரிய வந்தது.

இறுதித் தீர்வு சம்பந்தமான பேச்சுக்களை நடத்தும் போது வடக்கு – கிழக்கிற்கான தன்னாட்சி அதிகார சபை குறித்த பேச்சுக்களையும் நடத்தலாம் என்ற ஜனாதிபதியின் பழைய நிலைப்பாடுதான் ஜான் பீற்றர்சனால் கிளிநொச்சிச் சந்திப்பில் முன் வைக்கப்பட்டது.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக ஆளும் கூட்டமைப்புக்குள் இருந்துவரும் குத்துவெட்டுக்கள் காரணமாகவே ஜனாதிபதி அடிக்கடி நிலைதழும்புவதால் புலிகள் தமது யோசனை ஒன்றை ஜான் பீற்றர்சன் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பியிருந்தனர்.

அந்த யோசனை என்ன என்பதும் தற்பொழுது வெளியாகிவிட்டது.

“பல்வேறு கட்சிகளைக் கொண்ட சாம்பார் கூட்டமைப்பான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் நிலைப்பாடு – கொள்கை – தெளிவுபடுத்தப்பட வேண்டும். இன்ப்பிரச்சினைக்கு அமைதி நகர்வுகளை முன் நகர்த்துவதற்கு வசதியாக அந்த விவகாரம் தொடர்பான அரசின் கொள்கை நிலைப்பாட்டை அரசு பிரகடனம் செய்ய வேண்டும்.” என்பது தான் அந்த யோசனை.

ஜனாதிபதியோடு தனித்துப் பேசுவதில் அர்த்தம் இல்லையா? என்றும் புலிகள் ஜான் பீற்றர்சன் ஊடாக தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி இருந்தனர்.

ஜனாதிபதி இதற்கு இதுவரை பதில் எதனையும் புலிகளுக்கு அனுப்பவில்லை. அதனை விட்டு விட்டு, சமாதானப் பேச்சுக்கு புலிகள் வருகிறார்களா இல்லை என்பதை புலிகள் இந்த மாதத்துக்குள் தெரிவிக்க வேண்டும் என்று காலக்கெடு விடுப்பது போன்று கோரி இருக்கிறார்.

அரசு எப்போதும் பேச்சுக்குத் தயார், புலிகள்தான் வெவ்வேறு காரணங்களைக் கூறுகின்றனர் என்றும் ருபவாஹினி உரையில் புலிகள் மீது குற்றஞ் சுமத்தி உள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான அடிப்படைவிடயங்களில் ஒன்றாக தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி புலிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஜே.வி.பியினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் ஆளும் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு பிரகடனம் ஒன்றின் மூலம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரட்டும் என்று தற்பொழுது புலிகள் யோசனை ஒன்றை முன் வைத்துள்ளனர்.

ஆனால், ஜனாதிபதி புலிகளின் யோசனைக்கு பதில் எதுவும் தெரிவிக்காது, புலிகள் பேச்சு வார்த்தைக்கு வருகிறார்கள் இல்லை என்று கதை விடுகிறார்.

அரசின் பிரதான பங்காளியான ஜே.வி.பி. வடக்கு – கிழக்கில் தன்னாட்சி அதிகார சபை அமைக்கும் யோசனைக்கு தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

ஆனால், ஜனாதிபதி விரும்பினால் புலிகளுடன் பேச்சு நடத்தலாம் என்று ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ லண்டனில் வைத்து பி.பி.சி. சிங்களச் சேவைக்கு பேட்டி அளித்துள்ளார். ஜே.வி.பி. பற்றி ஜனாதிபதி கவலைப்படத் தேவை இல்லை என்றும் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ஆகவே, சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி செய்ய வேண்டியது ஒன்று தான்.

தன்னாட்சி அதிகார சபை யோசனைகளின் அடிப்படையில் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்குத் தயார் என்று ஆளும் கூட்டமைப்பின் கொள்கைப் பிரகடனம் ஒன்றை அவர் வெளியிட வேண்டும்.

இதனை விடுக்காது ஜனாதிபதி நேரத்துக்கு நேரம் ஒவ்வொன்றைச் சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தம் இல்லை.

சமாதானப் பேச்சை ஆரம்பித்தால், தனக்குப் பின்பு பதவிக்கு வரும் ஜனாதிபதி அதனைத் தொடரலாம் என்று ஜனாதிபதி கூறுகிறார்.

ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியினால் 2001 செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்ட சமாதானப் பேச்சுக்களை விட்ட இடத்தில் இருந்து தொடராமல் குழப்பியவரே ஜனாதிபதி தான்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை பற்றிய தமது யோசனைகளை புலிகள் 2003 நவம்பர் முதலாம் திகதி அப்போதைய பிரதமர் ரணிலிடம் அனுப்பி இருந்தனர். இது கையளிக்கப்பட்டு நான்கு நாட்களுக்குள் பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களை – சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான அமைச்சுக்களை – ஜனாதிபதி ஏதேச்சாதிகாரமாகப் பறித்துக் கொண்டு சமாதான முயற்சிகளுக்கு முதல் வேட்டை வைத்தார்.

பின்பு நாடாளுமன்றமும் கலைக்கப்பட்டு புதிய அரசு பதவி ஏற்று சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் நாளுக்கு நாள் அருகிவந்த சமயமே கடந்த தீபாவளி அன்று கிளிநொச்சியில் முக்கிய சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதியுடன் இணக்கம் ஒன்றை ஏற்படுத்த தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறுகிறது. ஜே.வி.பி அரசு ஓர் இணக்கத்துக்கு வரவேண்டும் என்றும் ஐ.தே.க.யோசனை தெரிவிக்கிறது.

ஜனாதிபதி விரும்பினால் புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கலாம், ஜே.வி.பியைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை என்று விமல்வீரவன்ஸ கூறுகிறார். இந்த இரு தரப்பினரினதும் உள்நோக்கமும் வேறாக இருக்கலாம். ஆனால், வெளிப்படையாக இருந்துவந்த பிரதான தடைகள் அகன்ற நிலையிலும், ஜனாதிபதி பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தயங்குவது தான் வேதனை தருகிறது.

–சஞ்சாரன்–

# மாவீரர் நாளுக்கு தயாராகும் யாழ். குடாநாடு

யாழ்.குடாநாடெங்கும் மாவீரர் நாளையொட்டி நிகழ்வுகள் களைகட்டத் ஆராம்பித்துள்ளன. அனைத்துப் பகுதிகளிலும் பெரும் பரபரப்பாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மக்கள் ஒவ்வொரு விடயங்களையும் நன்கு திட்டமிட்டு செயற்படுத்தி வருகின்றனர்.

சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், கல்வியியற்கல்லூரிகள், கலாசாலைகள், தொழில்நுட்ப நிறுவனங்கள், பொது அமைப்புக்கள், ஒன்றியங்கள் என ஒவ்வொரு பிரிவுகளும் மாவீரர் தினத்தை எதிர்கொள்ளத் தயாராகிவருகின்றன.

சர்வதேச தமிழீழ மாணவர்பேரவை மாவீரர் நாளையொட்டி கழகங்களிடையே விவாதச்சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தியது. இதில் ஒவ்வொரு கழகமும் மிகவும் ஆர்வமாக கலந்து கொண்டதை அவதானிக்க முடிந்தது.

யாழ்.பல்கலை சமூகமும் நினைவுப் பந்தல்களை அமைத்துவைத்து மாவீரர்களின் திருவுருவப் படங்களை வைத்து நினைவு கூருவதற்கு ஏற்பாடு செய்தள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாவீரர் வாரத்தை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம், வரணி ஆகிய பகுதிகளில் பொதுப்பந்தல் அமைத்து மாவீரர்களின் உருவப்படங்களை வைத்தல், சுடரேற்றுதல், வீதிகளை மஞ்சள் சிவப்புக் கொடிகளால் அலங்கரித்தல், எழுச்சிக் கீதங்களை ஒலிப்பரப்புதல், பதாகைகள் கட்டுதல், வீதி வளைவுகளை அமைத்தல் ஆகியவற்றை ஒழுங்குசெய்து வருகின்றனர். இதேவேளை – சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை, கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை, கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் ஆகியவற்றில் சிரமதானம் செய்வதற்கு ஏற்பாடுசெய்யப்படவுள்ளது. கடந்த வருடங்களிலும் பார்க்க இம்முறை மாவீரர் தினம் எழுச்சி பூர்வமாகக் கொண்டாடப்படவுள்ளதாகக் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் குடாநாட்டில் கல்விகற்று மாவீரர்களாகியோரின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இது தொடர சந்திப்புக்கள் ஒவ்வொரு கல்விக்கோட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றன.

யாழ்.குடாநாட்டின் அனேகமான பகுதிகளில் மாவீரர் தினத்தையொட்டிய நிகழ்வுகள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு வருகின்றன.

யாழ். கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லப் பகுதிகள் சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டு அலங்கரிக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறே வடமராட்சி தீவுப்பகுதி போன்ற இடங்களிலும் மாவீரர் தின ஏற்பாடு மும்முரமாக இடம்பெற்று வருகின்றது.

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் தீவகம் சாட்டி மாவீரர் துயிலும் இல்லம் ஆகியவை சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இதேவேளை – தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த நாளையொட்டிய நிகழ்வுகளும் குடாநாடெங்கும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 26 ஆம் திகதி தேசியத் தலைவரின் பிறந்த தினம் கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் ஆலயங்களில் விசேட அபிஷேக ஆராதனைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலை சமூகம் மற்றும் யாழ்.மத்திய கல்லூரி சமூகம் ஆகியன தேசியத் தலைவருக்கு நினைவுக் கேடயங்களை வழங்கியுள்ளன. இவை கிளிநொச்சியில் வைத்து தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனிடம் கையளிக்கப்பட்டன.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் இரத்ததான நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர். தலைவரின் பிறந்ததின நிகழ்வன்று நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான ஆசிரிய கலாசாலை மாணவர்கள் இரத்ததானம் செய்யவுள்ளன.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்க எல்லைக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வரும் மக்களை இனங்கண்டு அவர்களுக்கு தலா 15 ஆயிரம் சுயதொழில் ஊக்குவிப்பு நிதியை வழங்கவுள்ளது.

தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழீழ மாணவர் பேரவை கைந்நூல் ஒன்றை வெளியிடவுள்ளது.

இந்நூலில் தேசியத்தலைவரின் சிந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை – தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். வர்த்தக சமூகத்தினரால், யாழ்.முனீஸ்வரன் ஆலயத்தில் 50 பானைகளில் பொங்கல் பொங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரியில் நவீன சந்தைக்கு முன்பாக 50 பானைகளில் 50 மாவீரர்களின் பெற்றோரால் பொங்கல் பொங்கி ஏ – 9 வீதியில் செல்லும் பயணிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வையொட்டி சாவகச்சேரி நவீன சந்தை அலங்கரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் தென்மராட்சி எங்கும் தேசியத் தலைவரின் பிறந்த தினக் கொண்டாட்டங்கள் தேசிய எழுச்சிப்பேரவையின் ஏற்பாட்டில் கிராமங்கள் தோறும் நடத்தப்படவுள்ளன.

–பிரதீபன்–


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓவியச்சிரிப்பு



இரண்டு இளை... சோகமாக உட்காந்திருந்தனர். இ... இளைஞன் மற்ற இளைஞனைப் ப... கேட்டான். "ஏன் சோகமாக இருக்...

மற்றவன் சொ... காதலில் தோல்வி அதுதான் சோகம... றேன்"

"ஒரு ஏழைப்... க்கு சீதனம் வாங்காமல் வாழ்வு த... னேன் அதற்கு

### ஜோக்

ஏகப்பட்ட தடை... ன்றான் முதலாமவன்.

மற்றவன் கே... "ஏன் உனது அப்பா அம்மா எ... களோ?"

முதலாமவன்... ன், "இல்லை அவர்களுக்கு மு..."

"அப்படியான... ணின் வீட்டில் எதிர்க்கிறார்களோ..."

"இல்லை அ... பச்சைக் கொடி காட்டிவிட்டார்கள்..."

"ஆச்சரியமாக இருக்கிறதே! அப்போ யார் உங்கள் காதலை எதிர்க்கிறார்கள்?" என்று கேட்டான் மற்றவன். முதலாமவன் சொன்னான், "எனது மனைவி"

முதலாமவன் சொன்னான், "எனது கதையும் காதல் தோல்விதான். விதவைப்




பெண் ஒருத்திக்கு வாழ்வு தர விரும்பினேன். ஆனால், பொலிஸார் என்னை துரத்தித் துரத்தி தேடுகின்றனர்."

முதலாமவன் ஆச்சரியம்" இது சமூக சீர்திருத்தம் தானே! இதற்கு ஏன் பொலிஸ் உன்னைத் தேடவேணும்?"

மற்றவன் சொன்னான், "அந்த விதவைப் பெண்ணின் கணவனை கொலை செய்ததே நான் தானே....

## விந்தை உலகம்




சின்னத் திரை எனப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் இப்போசினிமாவைப்போல் படு மோசமாகி விடுகின்றன. சின்னத் திரை நிகழ்ச்சிகளைக் கூட இப்போது குடும்பமாக உட்கார்ந்து பார்க்க முடியவதில்லை.

அவைகளிலே வரும் இசகு பிசகான காட்சிகளை வீட்டிலே உள்ள சிறிசுகள் பெரிசுகளுடன் இருந்து பார்க்க சந்தோஷமாகத்தான் இருக்கிறது. அதிலும் சின்ன சந்தோஷத்தை தந்து கொண்டிருப்பது செய்திகள் தான். அதனை மட்டும் குடும்பத்துடன் இருந்து பார்த்து மகிழலாம் என்ற நம்பிக்கை இருந்து வந்தது.

ஆனால், அந்த நம்பிக்கையிலும் இப்போ இடிவிழுந்துவிட்டது. தற்போது இதிலும் நிர்வாணம் புகுந்துவிட்டது. அதாவது செய்தி வாசிக்கும் பெண் செய்தியை வாசித்தபடி தனது உடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி எறியும் புதிய செய்தி வாசிப்பு இப்போ உலகில் பிரபல்யம் பெற்று வருகிறது. இதற்கு 'நேக்கட் நியூஸ்' என்று பெயர். 1999இல் இந்த செய்தி வாசிப்பு உலக தொலைக்காட்சிகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்று தற்போது 172 நாடுகளில் உள்ள தொலைக்காட்சிகளில் இந்த 'நேக்கட் நியூஸ்' நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டு வருகின்றதாம்.

தொலைக்காட்சியில் மட்டுமல்லாமலும் இன்று நெற்றில் கூட இந்த 'நேக்கட் நியூஸ்' நிகழ்ச்சி ஒளிபரப்புப்பட்டு வருகிறதாம். அடுத்து செல்போன்களிலும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதாம்.

இனிமேல் ரசிகர்பாடு திண்டாட்டம் தான். ஏனென்றால் செய்தியிலே காட்டப்படுபவற்றை பார்ப்பதா? அல்லது செய்தி வாசிப்பவர் காட்டுபவற்றைப் பார்ப்பதா?

## புதிர்

இந்த படத்திலே மொத்தமாக எத்தனை சதுரங்கள் இருக்கின்றன? கண்டு பிடியுங்கள் பார்ப்போம்.



## ஐடியா



இந்த அவசர யு...

அதற்கு பேர... ம் கொம்பியூட்டர், பக்ஸ், ரெலிபோன் எல்லாவற்றையும் அங்கேயே பூட்... ல்.... சும்மா உட்கார்ந்திருக்கும் நேரத்தில் கொஞ்சம் உருப்படியாக வேலை... ம் அல்லவா? நல்ல ஐடியா தானே..! ஆனால் யார்தான் கேட்கப்போகிறார்கள்?

## ரெ... குறும்பு



தவளைக... ம் ஒரு பாடசாலை இருந்தால் இப்படித்தான் இருக்கும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விவகார அமைச்சு;
# தொடர்ந்தும் ஏமாற்றும் ஜனாதிபதி

சிறுபான்மையினரை ஏமாற்றும் பேரினவாதத் தலைவர்களில் முன்னணி வகிப்பவர் இப்போதைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார்தான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது.


சந்திரிகா

முஸ்லிம் சமூகத்தின் சமய, கலாசார, பண்பாட்டு உரிமைகளை அவர்கள் முழுமையாக – சுதந்திரமாக அனுபவிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒத்துழைப்பு வழங்குகிறார் இல்லை என்கின்ற விடயம் முஸ்லிம்கள் மத்தியில் பெரும் கவலையையும், விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை முஸ்லிம்களுக்கென இருந்து வந்த முஸ்லிம் சமய, கலாசார, பண்பாட்டலுவல்கள் அமைச்சை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் கீழ் ஜனாதிபதி இல்லாதொழித்திருப்பதற்கு அவர் கூறும் காரணமே முஸ்லிம் சமூகத்தை அவர் ஏமாற்றி வருகின்றார் என்பதற்கும் போதுமாக உள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கின்ற முஸ்லிம் அமைச்சர்களிடையிலான போட்டியே முஸ்லிம் விவகார அமைச்சுக்கென ஒருவரை நியமிக்க முடியாதிருக்கிறது என ஜனாதிபதி கூறியுள்ளார். முஸ்லிம் விவகார அமைச்சு விடயத்தில் தான் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதனால் இப்போதைக்கு முஸ்லிம் விவகார அமைச்சராக எவரையும் நியமிக்க முடியாது எனவும் அடித்துக் கூறிவிட்டார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிலிருந்து அரசுப்பக்கம் சென்று அமைச்சர்களாக நியமனம் பெற்றுக்கொண்ட றிஷாத் பதியுதீன், நஜீப் ஏ.மஜீத், அமீரலி ஆகிய மூவரும் உள்ளிட்ட மு.கா. மாற்றுக் குழுவினர் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்து விடுத்த கோரிக்கையை நிராகரித்துப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தங்கள் மூவரில் ஒருவரை முஸ்லிம் விவகார அமைச்சராக நியமிக்க வேண்டும் என அவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை விடுத்தனர். அதற்கான தமது தரப்பு நியாயங்களையும் அவர்கள் எடுத்துக் கூறினர்.

**ஜனாதிபதியின் நொண்டிச்சாட்டு**

ஆனால், அதற்கு ஜனாதிபதி அளித்த பதில் முடியவே முடியாது என்பதுதான். முஸ்லிம் விவகார அமைச்சைத் தமது பொறுப்பில் தரவேண்டும் என அமைச்சர்கள் ஏ.எச்.எம் பௌஸி, ஏ.எல்.எம். அதாவுல்லா, பேரியல் அஷ்ரப் ஆகியோர் ஏற்கனவே ஏட்டிக்குப் போட்டியாக கேட்ட வண்ணமிருக்கின்றனர். அதனால்தான் இதுவரை முஸ்லிம் விவகார அமைச்சராக ஒருவரை நியமிக்க முடியாதிருக்கிறது எனவும், அந்த அமைச்சு விடயத்தில் தனக்குப் பெரும் தலையிடியாக இருக்கிறது எனவும் ஜனாதிபதி முகத்தைச் சுளித்துக்கொண்டு பதிலளித்துள்ளார்.


அதாவுல்லா

"அமைச்சர் பௌஸி – சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர், அமைச்சர் அதாவுல்லா – தேசிய முஸ்லிம் காங்கிரஸை சேர்ந்தவர், அமைச்சர் பேரியல் – தேசிய ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர். நாங்கள் மூவரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த தனிக்குழுவினர். பல்வேறு பிரச்சினைகள் – சவால்களுக்கு மத்தியில் தங்களுக்கு ஆதரவளிக்க முன்வந்திருக்கிறோம். நாம் அரசுடன் இணைந்துகொள்வதற்கு முன் முக்கிய அமைச்சர்களுடன் நடத்திய பேச்சுக்களில் முஸ்லிம் விவகார அமைச்சை எமக்குத் தருவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆகையினால் முஸ்லிம் விவகார அமைச்சராக எம்மில் ஒருவரை நியமித்தாக வேண்டும்" என அமைச்சர் றிஷாத் அணியினர் ஜனாதிபதியிடம் மன்றாட்டமாகக் கேட்டனர். எனினும், அவர் ஒத்துவரவே இல்லை.


பேரியல்

முஸ்லிம் விவகார அமைச்சுக்கு முஸ்லிம் அமைச்சர்களுக்குள் போட்டி இருக்குமானால், வருடம் ஒருவருக்கு சுழற்சி முறையில் அதனை வழங்குங்கள் என அவர்கள் ஆலோசனை வழங்கினர். ஆனால், அதனையும் ஜனாதிபதி நிராகரித்து விட்டார். யாரை முதலில் நியமிப்பது என்ற சர்ச்சை இருக்கிறது. அது எனக்கு வேறு பிரச்சினைகளைத் தோற்றுவித்துவிடும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிவிட்டார்.

( 16 ஆம் பக்கம் பார்க்க...)

---

## ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 14–11–2004, 20 –11–2004

**பொ. சந்திரன்**

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி |
| | (கீழே காண்க) | | |
| | | | |
| | சூரியன் புதன் | கேது சுக்கிரன் செவ்வாய் | குரு |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | சுவாதி | ராகு |
| சுக்கிரன் | சுவாதி | ராகு |
| புதன் | அனுசம் | சனி |
| சூரியன் | அனுசம் | சனி |
| குரு | அத்தம் | சந்திரன் |
| சனி | புனர்பூசம் | குரு |

ஆனி 28முதல் ஆனி 03 வரை

சந்திரன் மிதுனம் முதல் கடகம் வரை

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8)உரிய செவ்வாய் 7இல் நன்மை செய்யாது.மேலும் ராகுவின் சாரத்தில் நல்ல பலன் செய்ய வாய்ப்பு இல்லை. ராகு செவ்வாய்க்கு பகைக்கிரகம். ராகு ராசியில் இருப்பதும் சிக்கலான நிலை ஆசாரம் அனுஸ்ட்டானம். எண்ணம், புகழ், அந்தஸ்த்து, தர்ம காரியம் ஆகிய பண்புகளுக்கு பாதகமான நிலை தோன்றலாம். (2,7) உரிய சுக்கிரன் 7 இல் ஆட்சியாக இருப்பினும் இந்த வீட்டில் நன்மை செய்ய வாய்ப்பு இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். கையில் பணம் இருக்காது. கொடுத்த வாக்குறுதி தவறக்கூடும். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வாகன சுகம் உண்டு. இனபந்துக்களுடன் கூடிக்குலவ இடம் உண்டு. (10,11) அதிபன் சனி மூன்றில் இருப்பது தொழில்யோகம் உண்டு. ஈட்டிய பொருளை நல்லமுறையில் முதலீடு செய்ய பலன் உண்டு.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகினி, மிருகசிரியம் 1,2**

(1,6)உரிய சுக்கிரன் 6 இல் ஆட்சியாக இருப்பது நல்லதல்ல. 6ஆம் வீட்டில் பலன் செய்ய வாய்ப்பு இல்லை. ராகுவின் சாரத்தில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. ராகுவுக்கு சுக்கிரன் பகைக்கிரகம் இல்லை.உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். குறிப்பாக வயிற்று நோய்வர வாய்ப்பு உண்டு. எடுக்கும் முயற்சிகள் தாமதமாகலாம் அல்லது தடைப்படலாம். (2,5)உரிய புதன் 7இல் இருப்பது நன்மை செய்யாது. கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டமாட்டார். ஆரோக்கியமான எண்ணங்கள் தோன்ற வாய்ப்பு இல்லை. நாலுக்குரிய சூரியன் 7 இல் இருப்பது வாகன சுகம் இருக்காது. (1,12) உரிய செவ்வாய் 6 இல் இருப்பது சிறப்பு. திருமணவாய்ப்பு உண்டு.சயன சுகம் உண்டு. தர்மகர்ம அதிபனான சனி இரண்டில் இருப்பதால் தொழிலில் லாபம் இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 6 இல் இருப்பது நல்லது. புதன் 6 இல் நல்லபலன் செய்வார். மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதே. எடுக்கும் முயற்சிகள் நல்லபலனைப் கொடுக்கும். ஆரோக்கியமான எண்ணங்கள் உருவாகும். வாகன சுகம் உண்டு. ராசியில் சனி இருப்பது சற்று சங்கடமான நிலைதான். இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். அறுசுவை உணவு உண்ண வாய்ப்பு உண்டு. (7,10) உரிய குரு நாலில் இருப்பதும் மத்திமமானபலன்தான். இருப்பினும் கேந்திராதிபத்திய தோசம் உண்டு.மற்றும் சனி இவ்விரு ஸ்தானங்களையும் பார்ப்பது கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. (8,9) இல் உரிய சனி ராசியில் இருப்பது பிதாவுக்கு நல்லதல்ல அதிஸ்ட்டம் இருக்காது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் மீனம் முதல் இடபம் வரை சஞ்சரிப்பது நல்லது. 10,11ஆம் வீடுகளில் நல்லபலனையும், 12இல் நல்ல பலனைச் செய்யாது. வார ஆரம்பத்திலும் மத்தியிலும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். பிரயாணவாய்ப்பு உண்டு. அந்தஸ்த்து மதிப்பு உயரும்.நல்ல எண்ணங்கள் தோன்றும். இரண்டுக்குரிய சூரியன் ஐந்தாம் இடத்தில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. கொடுத்த வாக்குறுதியை காப்பாற்ற முடியாது போகலாம். (4,11) உரிய சுக்கிரன் நாலில் ஆட்சியாக இருப்பது விசேசம். தாய் நலம், வாகன சுகம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய செவ்வாய் நாலில் இருப்பது கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகள் சொற்கேளார். (7,8) உரிய சனி 12 இல் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் நாலில் நன்மையில்லை மேலும் பகைக்கிரகமான சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் சிறப்பு இல்லை. மேலும் செவ்வாயின் வீட்டில் இருப்பதும் நன்மை இல்லை. எடுக்கும் முயற்சிகள் தடைப்படலாம். ஆரோக்கியமான சாதகமான எண்ணங்கள் தோன்றவாய்ப்பு இல்லை. சமூகத்தில் மதிப்பு குறைய வாய்ப்புண்டு. (2,11)இல் உரிய புதன் நாலில் இருப்பதால் கையில் பணம் இருக்காது.(4,9)இல் உரிய செவ்வாய் மூன்றில் இருப்பதால் பெற்றோர் நலம், வாகன சுகம் உண்டு. கல்வியில் ஆர்வம் இருக்கும். இனபந்துக்கள் விசுவாசமாக இருப்பர். (6,7)இல் உரிய சனி 11 இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு.பகை விலகும். வழக்குகள் சாதமாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். 4 இல் சூரியன், புதன் இணைவு நல்லதென்று ஜாதக அலங்காரம் கூறுகிறது.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை1,2.**

(1,10) இல் உரிய புதன் மூன்றில் இருப்பது சிறப்பு இல்லை. ஆனால், சனியின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. மேலும் செவ்வாயின் வீட்டில் மத்திமமான பலனையே செய்ய இயலும். எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறா. தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. சமூகத்தில் உள்ள அந்தஸ்து கேள்விக்குறியாகலாம். குறுந்தூரப் பிரயாணம் அமையலாம். (2,9)இல் உரிய சுக்கிரன் இரண்டில் ஆட்சியாக இருப்பதால் கையில்பணம் இருக்கும். பிதா நலம். சொன்ன சொல்லை காப்பாற்ற முடியும். (4,7) உரிய குரு ராசியில் இருப்பது பயன் இல்லை. மேலும் இவ்விரு வீடுகளையும் சனிபார்ப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது.தாய்க்கும் கூடாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. மகிழ்ச்சியும் இருக்காது.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8)இல் உரிய சுக்கிரன் ராசியில் ஆட்சியாக இருப்பது விசேஷம். மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனளிக்கும். மனத்தை ஒரு நிலைப்படுத்த முடியும். சென்ற இடம் எல்லாம் சிறப்பான வரவேற்பு கிடைக்கும். (2,7)இல் உரிய செவ்வாய் ராசியில் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. திருமண வாய்ப்பு பாதிக்கும். கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது.மேலும் 7 இல் ராகு இருப்பது குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவ வாய்ப்பு இல்லை. (4,5) உரிய சனி 9 இல் இருப்பது சிறப்பு இல்லை. வாகன சுகம் இருக்காது. குழந்தைகளின் செயல்பாடு திருப்தி தராது. தொழில்ஸ்தானமான 10 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். (3,6) இல் உரிய குரு 12இல் மறைவதால் பகைவிலகும். முன்பு இருந்த நோய் விலகும். இளைய சகோதரத்துக்கு கூடாது.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6)இல் உரிய செவ்வாய் 12 இல் இருப்பது சிறப்பு இல்லை. மேலும் ராகுவின் சாரத்தில் சஞ்சாரம் செய்வதும் நல்லபலன் செய்யாது. ஆனால் சுக்கிரனின் வீட்டில் இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு. எடுக்கும் கருமங்கள் நல்ல முறையில் அமையாது. பகைவிலகும். நோய்விலகும். பிரயாண வாய்ப்பு உண்டு. நல்ல எண்ணங்கள் உதயமாகாது. (2,5)இல் உரிய குரு,11இல் இருப்பது கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியல் ஆர்வம் காட்டுவர்.கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றலாம். அறுசுவை உணவு உண்ணவாய்ப்பு உண்டு. (3,4)இல் உரிய சனி 8 இல் இருப்பதை அட்டமத்துச் சனியென்பர். வீடு, வாகனம் சுகம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,12)இல் உரிய சுக்கிரன் 12இல் ஆட்சியாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. தொழிலுக்கு உரிய சூரியன் ராசியில் இருப்பது தொழிலில் சங்கடம் இருக்கும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4)இல் உரிய குரு 10இல் இருப்பதை சில சோதிட நூல்கள்நல்லதாக சொல்லவில்லை. மத்திமபலனைக் கொடுக்கலாம். சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். மேலும் புதனின் வீட்டில் இருப்பது நல்லபலனைச் செய்யாது. சனி இவ்விரு வீடுகளையும் பார்ப்பது கூடாது. எடுக்கும் முயற்சிகள் தடைப்படலாம். நல்ல எண்ணங்கள் உதயமாகாது. வாகன சுகம் இருக்காது. இனபந்துக்களோடு விரோதம்வரவாய்ப்பு உண்டு. (2,3)உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது.(7,10)இல் உரிய புதன்12இல் இருப்பது சிறப்பு இல்லை.திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவாது. தொழில்துறையில் பின்னடைவு வரலாம். 7இல் சனி இருப்பது கூடாது.

**மகரம்: உத்தரடாம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2)இல் உரிய சனி 6 இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் சாரத்தில் இருப்பது நல்லபலனைச் செய்யும். அத்தோடு புதனின் வீட்டில் இருப்பது சிறப்பு. எடுக்கும் முயற்சிகள் வெற்றி பெறும். கையில் பணம் இருக்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற முடியும்.(4,11) உரிய செவ்வாய் 10இல் இருப்பது நல்லதல்ல. வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் கூடாது. மூத்த சகோதரத்துக்கும் கூடாது.(5,10) இல் உரிய சுக்கிரன் 10இல் ஆட்சியாக இருப்பது நல்ல பலனைச் செய்யாது. சிலர் நல்லது என்று சொல்லவும் கூடும். தொழில்துறையில் பெரிதளவு முன்னேற்றம் இருக்காது. 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. மேலும் குரு 9 இல் இருந்து ராசியைப் பார்ப்பதால் சகல தோசங்களும் நிவர்த்தியாகி நல்ல பலனைக் கொடுக்கும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12)இல் உரிய சனி ஐந்தில் இருப்பதை நஞ்சுச் சனியென்பர், நல்லபலனைச் செய்யாது. ஆனால், குருவின் சாரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. மேலும் புதனின் வீட்டில் இருப்பதும் நல்லது. எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெறாது. ஆனால், படுதோல்வி வாரது. சயன சுகம் இருக்காது. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். (2,11)இல் உரிய குரு 8இல் மறைவதால் கையில்பணம் இருக்காது. நண்பர்களால் செலவு இருக்கும். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (4,9) உரிய சுக்கிரன் 9 இல் ஆட்சியாக இருப்பது விசேஷம். பெற்றோருக்கு நல்லது. வாகன சுகம் உண்டு. 7க்குரிய சூரியன் 10இல் இருப்பதால் திருமண வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10)இல் உரிய குரு 7இல் இருப்து விசேஷம். மேலும் சந்திரனின் சாரத்தில் இருப்பதும் விசேஷம். ஆனால், புதனின் வீட்டில் இருப்பது சிறப்பு இல்லை. எடுக்கும் முயற்சிகள் நல்ல முறையில் அமையும். ஆரோக்கியமான சிந்தனைகள் உதயமாகும். தொழில்துறையில் அபிவிருத்தி இருக்கும், சென்ற இடம் எல்லாம் சிறப்பு இருக்கும். சமூகத்தில் நல்ல மதிப்பு இருக்கும். தொழில்துறை முன்னேறும். (2,9)இல் உரிய செவ்வாய் 8இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. (4,7)இல் உரிய புதன் 9இல் இருப்பதால் நல்லபனைச் செய்யாது. வாகன சுகம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். ஆனால், குரு 7இல் இருப்பதால் குடும்பத்தில் அமைதி நிலவும். ராசியை சனிபார்ப்பது கூடாது. அலைச்சல் இருக்கும். ராசியை குரு பார்ப்பதால் தோசம் விலகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொற்கை பூண்ட கொற்கைப் பாண்டியன்! 2

**யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தமிழ் நாட்டில் திராவிடகழக பத்திரிகையான நாத்திகம் பத்திரிகையின் துணை ஆசிரியரும் (1958 – 1960) இலங்கையில் தீப்பொறி, ஒரு தீப்பொறி, பல்கலை ஆதியாம் வாராந்த மாதாந்த பத்திரிகைகளின்ஆசிரியரும் பிரபல எழுத்தாளருமான ம.க.அ.அந்தனிசில், சில செய்யுட்களால் மட்டும் அறியப் பெற்றிருந்த நீதி வழுவா பாண்டிய அரசனான மாறன் குலசேகரன் தொடர்பான வரலாற்று அம்சத்தினையும் செவிவழி கதைகளையும் சீராக ஆராய்ந்து முதன் முதலாக தமிழ் கூறும் நல்லுலகிற்கு கட்டுரை வடிவில் தந்துள்ளார். முதலாவது பகுதி கடந்தவாரம் வெளிவந்தது. இரண்டாவது – இறுதிப்பகுதி கீழே பிரசுரமாகி உள்ளது.**

காலம் நகர்ந்து கொண்டிருந்தது. ஒரு நாள் இரவு அரசன் நகர சோதனைக்காக வந்து கொண்டினருந்த போது வழமை போல் கீரந்தையின் வீட்டை நோட்டம் விட்டான். கழிந்த நாட்களைப் போல் அவ்வீடு அமைதியில் உறங்கவில்லை. மாறாக சிரிப்பொலி கேட்டது!

அதன்கண் அதிர்ச்சியுற்ற அரசன் விரைந்து வீட்டினருகில் சென்று உற்றுக்கேட்டான். கிசுகிசுப்புக் கேட்டது!

'யாரோ சோரநாயகன்'என்று முடிவு கட்டிய அரசன் ஆத்திரம் மிகுதியால் கதவைத் தட்டினான்! தட்டியதும் "யார் கதவைத் தட்டுவது" என்று அதட்டலான குரல் கேட்டது. ஈதென்ன? சோரநாயகன் இப்படி அதட்டலாகக் குரல் கொடுப்பானா? அரசனின் மனதில் கேள்விக்குறி.

பரதேசம் நாடிய கீரந்தை பொருள் தேடியபின் அன்றைய மாலைப் பொழுதில் வீடு சேர்ந்திருப்பதைப் பாண்டியன் அறிந்திருக்கவில்லை. பிரிந்தவர் கூடினால் சொல்லவும் வேண்டுமா? குதூகலம் தானே!

கீரந்தையும் மனைவியும் கூடிக் களித்து சிரித்து மகிழ்ந்திருந்த வேளையிற்றான் அவ் வீட்டினருகே வந்த அரசன் கீரந்தையை சோரநாயகன் என்று தவறுதலாக எண்ணி ஆத்திர மேலீட்டால் கதவைத் தட்டினான். ஆனால் கீரந்தையோ கதவைத் தட்டியது சோரநாயகன் என தீர்க்கமாக முடிவு கட்டினான்.

அந்திக் கருக்கலில் கீரந்தை வீடு வந்து சேர்ந்தமை அயலாருக்கும் தெரிந்திருக்கவில்லையாதலால் காரிருள் வேளையில் வீட்டுக் கதவைத் தட்டியது கள்ளநாயகன் என கீரந்தை நினைத்ததில் வியப்பில்லை.

இன்ப மயக்கத்தில் திளைத்திருந்த தம்பதிகளை அரசனின் செயல் மனக்குழப்பத்துள் ஆழ்த்தியது. கதவு தட்டப்படும் ஒசை கேட்டு கீரந்தையின் மனைவியும் வெலவெலத்துப் போனாள். யார்?ஏன்? இந்த நடுநிசியில்? எனும் கேள்விகள் அவள் உள்ளத்தை உலுப்பியது.

தன் மனைவி மீது ஐயங்கொண்ட கீரந்தை ஆவேசம் கொண்டவனாய் "இது எத்தனை நாட்களாக நடக்கிறது" என்று உரக்கக் கூவினான்.

வீட்டிற்குள் ஒலித்த ஆண் குரல் அரசனுக்குப் பரிச்சயமாக இருப்பதாகத் தோன்றவே 'ஆம் கீரந்தை வீடு வந்து விட்டான்' என்பதை நிச்சயித்துக் கொண்ட அரசன் 'சே....... என்ன காரியம் செய்து விட்டோம்' என அங்கலாய்த்தான்.

கற்புடையாளை அற்பமடந்தையெனச் சொற்ப நொடிக்கு முன் முடிவு செய்தமை உச்சத் தவறென்பதை உணர்ந்த அரசன் தனது அவசரச் செயல் கீரந்தையின்மனைவியை விரசத்திற்குள்ளாக்கிவிட்டதை யிட்டு நெஞ்சம் வருந்தினான்.

கீரந்தையின் தகாத கேள்வியால் உள்ளம் வெதும்பிய மனையாள் கண்களில் கண்ணீர் ததும்ப "நீங்களன்றோ எவ்வித ஆபத்துகளிலிருந்தும் அரசவேலி பாது காக்குமென்றும், அக்காவலல்லாது தூய்மையான காவல் வேறில்லையென்றும் கூறிவேலியில்லாத இவ்வீட்டில் என்னைத் தனிமையில் விட்டுச் சென்றீர்கள். அந்த அரசவேலிஉண்மையானால்இன்றுஎன்னை இவ்விடரிலிருந்து காவாதோ" எனப் புலம்பினான்.......

கீரந்தையின் வீட்டுக்கதவை மட்டுமன்றி பிற வீடுகளின் கதவுகளையும் நான் தட்டி விட்டு வந்தமை நாளை அம்பலத்திற்கு வரும். அப்போது கீரந்தை தனது மனைவி மீது கொண்ட ஐயம் ஆதவனைக் கண்ட இருள் போல் அகலும். ஆனால்.... ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அயலவர் யாவரும் நான் கதவுகளைத் தட்டிவிட்டு வந்ததை அறிந்திராவிடில் கீரந்தை தன் துணைவியைப் பிரிந்தே தீருவான்..... அவள் தவிப்பாள், துடிப்பாள்...... என் குடை நிழலில் என் குடிமகள் ஒருவள் என் செயலால் தன் இல்வாழ்வை இழக்கும் அவலக் காட்சியை.......

அந்த அவலக் காட்சி அரசனின் மனக் கண்ணில் தோன்றுதற்கு முன் நித்திரை அவன் கண்களுக்குத் திரை விரித்தது.அரசன் துயில்கொள்ளலானான்.

பொழுது விடிந்தது; ஆனால் கீரந்தைக்கு மட்டும் விடியவில்லை! அவன் உள்ளம் இருள் சூழ்ந்திருந்தது.கை கால்களை அலம்பிக் கொண்ட கீரந்தை யாதும் பேசாது தனது துணிமணிகளை சிறு முட்டையில் கட்டிக் கொண்டு நெஞ்சில் துயரத்தைச் சுமந்தவனாய் வீட்டை விட்டு வெளியேறினான். அவனது முகம் வெளிறியிருந்தது!

குங்குமம் கலைந்தது; கார்கூந்தல் கலைந்தது; கயல்விழி மை கலைந்தது; மனம் தளர்ந்தது; கலங்கிய விழிகளால் தன்னை நோக்கி பினாள்.

கீரந்தையின் மனைவி உதிர்த்த சொற்கள் பழுக்க காய்ச்சிய ஆணி கொண்டு செவிக் குட்சுடுவது போல அரசனின் காதுகளுக்குள் சுட, அச் சூடானது அவனது இதயத்தையும் சுடுவது போன்ற வேதனை கொண்டவனாக மனச் சாட்சிக்கு அஞ்சி தன் அவசரக் செயலால் அவள் மேல் உண்டான களங்கத்தைக் களைத்தெறியத்துணிந்தவனாய் சடுதியான முடிவுக்கு வந்தனன். அதன்றி அவனுக்கு வேறு வழி தென்படவில்லை.

கடுகதியாக அங்கிருந்து புறப்பட்ட அரசன் அவ் வீதியிலுள்ள எல்லா வீடுகளின் கதவுகளையும் ஓங்கித் தட்டியவாறு வேகமாக அரண்மனை ஏகினான்.

"யார் கதவைத் தட்டுவது" என்ற கீரந்தையின் கேள்விக்குஎவ்விதபதிலும்இல்லை. சோரநாயகன் நழுவிச் சென்றிருப்பான் என்பது கீரந்தையின் நினைப்பு. அல்லாமலும் கதவைத் திறந்து சோரநாயகனை விரட்டிச் சென்று நேரில் காண கீரந்தையின் மனம் ஒப்பவில்லை.

தன் வாழ்வைச் சூழ்ந்திருந்த வறுமையெனும் இருள் அகற்றப் பொருள் தேடி வந்தும் தனது இல்வாழ்வு பாழ் போனதே என உள்ளம் குமுறிய கீரந்தை மனச் சோர்வினாலும் பயணக் களைப்பினாலும் தன்னையறியாமல் அயர்ந்து விட்டான்.

மின்னாமல் முழுங்காமல் தன் வாழ்வில் இடி விழுந்ததை நினைந்து வதனம் வாடிப் போன கீரந்தையின் மனைவி அயரவில்லை; துயரம் விஞ்சி விம்மி விம்மிக் கிடந்தாள். கதவைத் தட்டியது யார் என்ற கேள்வி அவளின் வாழ்வை வேரறுக்க வீசப்பட்ட அரிவாள் போல் மனக் கண்ணில் தோன்றி நின்றது. பிரமை பிடித்தவள் போலானாள்.

## கீரந்தையின் மாற்றம்!

எச்சான நடையில் அரண்மனை புகுந்த வேந்தன் நிம்மதியிழந்தவனாய் சயன மண்டபத்தில் இங்குமிங்குமாக நடந்தான். அடிக்கடி தன் கைகளைப் பிசைந்து கொண்டான். சயன மண்டபத்து மணி விளக்குகளும் தூங்காது விழித்திருந்தன. அரசிக்கு யாதும் புரியவில்லை! அரசன் சிந்திக்கலாயவாறு ஏங்கியிருந்த தன் ஏந்திழையாளை ஏறெடுத்தும் பாராமல் புறப்பட்டான் கீரந்தை. அவனைத் தீண்டவும் முடியாதவளாய் கையேந்திக் கெஞ்சினாள் மனையாள். அவளை இரங்குதற்கு யாருளர்? யாருமேயிலர்.

சோலைசூழ்ந்த அச்சாலையிற் சோர்வுடன் நடந்து கொண்டிருந்தான் கீரந்தை.கார் மேகம் விரவி வானம் மப்பும் மந்தாரமாகவும் இருந்தது. கோலமயில் ஆடவில்லை; மாங்குயில் பாடவில்லை; தேனுண்ணும் வண்டினம் ரீங்காரமிடவில்லை; ஆந்தை அலறியது! ஏனோ பயந்தாள் மனையாள்! 'ஓ' வென்று கதறியழுதாள். கண்ணீர் திரையிட்ட அவளின் கயல் விழிகளுக்கு கீரந்தை மறைந்துகொண்டிருந்தான்.

அச்சாலையில் வீடுகள் நெருக்கமாக இருக்கவில்லை. ஒவ்வோர் வீடும் சொற்ப தூரத்தே தூரத்தே அமைந்திருந்தன. சிறிய தூரம் சென்ற கீரந்தை அங்கு அயலவர் சிலர் குழுமி நிற்பதைக் கண்டான். ஏதோ காத்திரமான விடயத்தையிட்டு அவர்கள் பேசிக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது கீரந்தைக்கு.

அவர்களை அண்மித்த கீரந்தை கரிசனையுடன் விடயமென்ன என வினவினான்.அனைவரின் முகங்களிலும் கடுகடுப்புத் தெரிந்தது. அவர்களில் ஒருவன் "நீ எப்போது ஊர் திரும்பினாய்" என்றுகீரந்தையைக்கேட்டு விட்டு



"ராத்திரி யாரோ ஒருவன் நம்ம வீட்டுக் கதவுகளைத்தட்டி குழப்பஞ் செய்து விட்டான். அந்தக் கட்டுக் கடங்காதவனை கண்டு பிடிக்காவிடில் இனிமேலும் இப்படித் தொல்லை தந்து கொண்டிருப்பான்" என்று கூறி பற்களை நறும்பினான்.

அதனைச் செவிமடுத்த கீரந்தைக்கு நெஞ்சம் 'சுரீர்' என்றது. "அப்படியா.... ராத்திரி என் வீட்டுக் கதவைத் தட்டியவனும் அந்த கசடனாகத்தான் இருக்கவேண்டும்" என்று ஆவேசம் கொட்டியகீரந்தை "இன்றே இதனை அரசனிடம் முறையிடுவோம்" எனக் கூறிவிட்டு ஏதோ நினைந்துக்கொண்டவனாய் தன் வீடு நோக்கி விழுந்தடித்து ஓடினான்.

## இருளும் மருளும்!

உண்மைக்கு மாறான நம்பிக்கைகள் மலிந்திருந்த பழங்காலத்தில் இரவுக் காலத்தை மக்கள் பயம் மிகுந்த காலமாகக் கருதி வந்தனர். அதிலும் நடுச்சாமம் என்றால் சொல்ல வேண்டியதில்லை. அவ்வளவு பயம்....!

நடு இரவுகளில் யாரேனும் ஆபத்து உதவிக்காக அயல் வீட்டுக்கதவைத் தட்டுவார்களானால் பெரும்பாலும் வீட்டுத் தலைவனின் பெயரைச் சொல்லி அல்லது அண்ணே தம்பி என விளித்து கதவைத் தட்டுவார்கள். குரல் பரிச்சயமானதாகவிருந்தால், கதவு தட்டப்படும் காரணம் உணரப்பட்டால் வீட்டிற்குள்ளிருந்து பதிலுரை வரும்; கதவும் திறக்கப்படும்.

கம்பரின் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. அது பல முறை தட்டப்பட்டது. காற்றின் மோதலால் கதவு படபடக்கவும் யாரோ தொடர்ந்து தட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்றெண்ணிய கம்பர் கதவைத் திறந்தார்.

(அக்காலக் கதவுகளுக்கு உட்பக்கம் குறுக்காகத் தடி (தாழ்ப்பாள்) போடுவார்கள். காற்றின் அழுத்தத்தால் கதவு குறுக்குத் தடியுடன் மோதி ஒசையெழும்)

கீரந்தையின் வீட்டுக்கதவு தட்டப்பட்டது. தான் ஊரில் இல்லாததை அறிந்த ஒருவனே அவசரமாக வந்து கதவைத்தட்டுவதாக கீரந்தை நினைத்தான். ஆனால் தனிமையிலிருக்கும் மாற்றான் மனைவியிடம் கள்ள உறவுள்ள சோர நாயகன் நடுநிசியில் தான் வருவானா? ஏன் அவ்வளவு நேரம் தாமதிக்க வேண்டும். முன்னிரவில் வரமுடியாதா? கீரந்தை இதனைச் சிந்திக்கவில்லை!

சந்தர்ப்ப சூழ்நிலையும், கீரந்தையின் அவசர புத்தியும் மனையாளின் ஒழுக்கத்தை மறக்கச் செய்துவிட்டது. 'யார் கதவைத்தட்டுவது' என்ற கேள்விக்கு பதில் ஏதும் இல்லாததால் கீரந்தையின் ஐயம் வலுத்தது.

அரசன் பிறர் வீட்டுக் கதவுகளையும் ஓங்கித் தட்டியவாறே சென்றிருந்தான். அவ்வீடுகளின் ஆடவர்கள் பரதேசம் சென்று திரும்பியவர்களல்ல. அவர்தம் மனங்களில் எவ்வித ஐயமும் எழவில்லை. மாறாக யாரோ ஒருவன் குரல் ஏதும் கொடுக்காமல் ஒருமுறை மட்டும் கதவில் உரக்க அறைந்தமை அவர்களுக்குஇனம் புரியாத அச்சத்தை தோற்றுவித்தது. கள்வன் என்றால் கட்டாரி, குத்துவாள் போன்ற ஆயுதங்களை வைத்திருப்பான். அதனாலும், பேயோ பூதமோ என்ற மூட எண்ணமும் அவர்களை மூச்சும் விடாமற் செய்துவிட்டது.

அதன் கண் அவ்வீதியிலுள்ளோர் தூக்கம் கலைந்து பாதி இரவை ஏக்கமுடன் கழித்தனர். விடிந்த பின்னர்தான் நடுச்சாமத்தில் பல வீடுகளின் கதவுகள் தட்டப்பட்ட விடயம் எல்லோருக்கும் தெரியவந்தது.

அதனை அறிந்து கொண்டவனாய் முட்டை முடிச்சுடன் வீடு நோக்கி ஓடிக் கொண்டிருந்தான் கீரந்தை. அவனின் நெஞ்சத்தை அழுத்தியிருந்த துயரம் பஞ்சாகப் பறந்து கொண்டிருந்தது. அவனது மனதின் இருள் மறைந்து விடியல் முகிழ்த்துக் கொண்டிருந்தது.

வீட்டை அடைந்த கீரந்தை தன் அன்பு மனையாள் முற்றத்து மல்லிகைப் பந்தலடியில் மயங்கி வீழ்ந்திருந்தமை கண்டு பதறிப் போனான். அம் மலர்க் கொடியாள் நீருற்றி வளர்த்த மல்லிகைச் செடி மண்ணில் வீழ்ந்து கிடந்த அவள் தளிர் மேனியில் பூச் சொரிந்தது.

தன் பூங்கோதை புழுதியில் கிடப்பது கண்டு மனம் புண்பட்ட கீரந்தை அவசரமாகச் செம்பில் தண்ணீர் மொண்டு அவளது முகத்தில் தெளித்தான். பின் அருகமர்ந்து அவளின் வதனத்தை மடிமேல் தாங்கி கார் கூந்தலை வருடி "ஏலே ஏலே" என்று குரல் கொடுத்தான். சில நொடிகளில் கீரந்தையின் மனைவி கண்மலர்ந்தாள். இருகரங்களாலும் அவளைத் தழுவி அரவணைத்தான் கீரந்தை.

ஐயம் எனும் பெரும் நெருப்பிலிருந்து கீரந்தையின் மனைவியைப் பாண்டியன் காப்பாற்றிவிட்டான். அரசவேலி அவளை இடரினின்று காத்துக் கொண்டது. ஆனால்....!

(22ஆம் பக்கம் பார்க்க)

அடுத்த வாரம்
மட்டக்களப்பு வாவியின் அடியில் பாடும் மீன்களின் இன்னிசை ஓசை!
இலக்கியப் பொழில்
பகுதியில் ஆரம்பம்

வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினி டிப்ஸ்

சந்திரமுகி படத்தில் பெரும்பாலான காட்சிகளில் ரீசேட் அணிந்து கொண்டு நடிக்கும் திட்டத்தில் இருக்கிறார் ரஜினி. வயசைக் குறைச்சுக் காட்டத்தான் இந்த ஏற்பாடாம்.

* * *

அட்டகாசம் படத்தின் பாடல் காட்சிக்காக வெளிநாடு சென்ற அஜீத் மற்றும் குழுவினர் பிரயாணம் செய்த ஏஜெண்டின் தில்லு முல்லு காரணமாக விமான நிலையத்திலேயே அவதிப்பட நேர்ந்ததாம். தயாரிப்பாளரும் எஸ்கேப் ஆகிவிட்ட நிலையில் அனைவருக்கும் தன் சொந்தச் செலவில் டிக்கெட் போட்டு அழைத்து வந்திருக்கிறார் அஜீத்.

* * *

தேவதையைக் கண்டேன் படத்திற்குப் பின்னர் தனுஷ் - ஐஸ்வர்யா தம்பதிகள் ஹனிமூனுக்கு நியூசிலாந்து செல்லப் போகிறார்களாம். இதற்காக இருபது நாள் ஷூட்டிங்கிற்கு லீவு போட்டிருக்கிறார் புது மாப்பிள்ளை.

* * *

டான்சர் படத்தில் ஒற்றைக் காலுடன் நடிக்கும் குட்டி என்பவர் முதல்வர் ஜெயலலிதா கலந்து கொண்ட அரசு விழாவில் அவர் முன் ஒரு பாடலுக்கு நடனமாடினார். முதல்வரும் அவர் நடனத்தை ஆச்சரியத்தோடு ரசித்தாராம்.

* * *

நடிகர் ஸ்ரீகாந் சென்னை நுங்கம் பாக்கத்தில் உள்ள மாடி வீட்டிலிருந்து தி.நகரில் ஒரு மாடிக்கு குடிபோனார். இப்போது அவ்வீட்டை விற்றுவிட்டு வட பழநி குமரன் காலனிக்கு குடிபோயிருக்கிறார். இந்த வீட்டில் தான் தீபாவளி கொண்டாடினார்.

* * *

ஆண்டுதோறும் ஆதரவற்ற குழந்தைளுக்கு ஸ்ரீராகவேந்திரா அறக்கட்டளை சார்பில் உதவி வழங்கும் ரஜினிகாந் இம்முறை 15 லட்சம் ரூபா பெறுமதியான பரிசுகளை வழங்கினார். சென்னையில் உள்ள 52 ஆதரவற்ற சிறுவர் இல்லங்களை தேர்ந்தெடுத்து இவ் உதவியை வழங்கினார்.

# வீரப்பனின் காட்டில் சேரன்



-சேரன்-

தமிழக, கர்நாடக அரசுகளுககு சிம்மசொப்பனமாக இருந்த சந்தனக் கடத்தல் வீரப்பன் சமீபத்தில் தமிழக அதிரடிப்படையால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

இப்போது அவன் வாழ்ந்த அந்த அடர்ந்த காடுகளில் வீரப்பனால் புதைத்து வைக்கப்பட்டதாக கூறப்படும் பணத்தைத் தேடி மக்கள் படை எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். எல்லோரும் புதையலைத் தேடி ஓட... அந்த அடர்ந்த காட்டுக்குள் ஒருவர் மட்டும் கதையைத் தேடி சென்றிருக்கிறார். அவர் வேறு யாருமல்ல 'சொல்லமறந்த கதை', 'ஆட்டோக்கிராப்' படங்களை இயக்கி நடித்த சேரன்தான் அவர்.

ஒகேனக்கல் அருகே உள்ள அந்த காட்டில் மின்சாரம், செல் தொலைபேசி போன்ற எந்த விதமான் தொடர்புகளும் இல்லாத ஒரு குக் கிராமத்தில் சுமார் 30 நாட்கள் முகாமிட்டிருக்கிறார் சேரன்.

கொட்டும் அருவிகள், மலைகள், மரம், செடி கொடிகள் உள்ள அந்த காட்டுச் சூழலை பார்த்ததும், சேரனுக்கு புதிதாய் ஒரு கதை தோன்றியுள்ளதாம். அந்தக் கதையை தானே இயக்கி, நடிக்கப் போகின்றாராம்.

அப்ப சேரனின் அடுத்த படம் வீரப்பன் பற்றிய கதையாகத்தான் இருக்கப்போகின்றது என்று சினிமாவட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து இன்னும் பல படங்கள் வீரப்பனின் கதையோடு திரைக்கு வரலாம்.



# ரஹ்மான் இசையமைக்கும் லார்ட் ஆஃப் தி ரிங்ஸ் தொடர்

பாம்பே ட்ரீம்ஸ் நாடகத்திற்கு இசையமைத்து இசை உலகின் கவனத்தை ஈர்த்த ரஹ்மான் மேலும் ஒரு சாதனையாக 'லார்ட் ஆஃப் தி ரிங்ஸ்' நாடகமாக்கப்படுவதற்கு இசையமைக்க ஒப்புக் கொண்டுள்ளார்.

நாடகத்தின் இயக்குனரான கெவின் வேலஸ் இத் தகவலை தெரிவித்தார்.

ரஹ்மான் இசையில் மெலடியும் புதுமையும் கலந்திருப்பதால் இந்தப்ராஜக்டை அவருக்கு அளித்ததாக கூறினார்.

ரஹ்மானும் வெர்ட்டினாவும் இணைந்து 'லார்ட் ஆஃப் தி ரிங்ஸ்' கதைக்கு இசையமைக்கவுள்ளார்.

இக்கதை ஹாலிவுட்டில் படமாக தயாரிக்கப்பட்டு வசூலில் சாதனை படைத்ததை தொடர்ந்து அடுத்ததாக மேடையேறவுள்ளது.

ரஹ்மான் இசையமைப்பதன் மூலம் ஆசியப் பகுதிகளில் இரையும் நாடகமும் வர்த்தக ரீதியாக வெற்றியடைய வாய்ப்புள்ளதாக கெயின் வேல்ஸ் மேலும் கருத்து தெரிவித்துள்ளார்.

ஆனல், தற்போது ரஹ்மான் தமிழ்த் திரையுலகில்கவனம்செலுத்துவதில்லை.

# முருகதாஸ் வாய்ப்பை இழந்தார் மாதவன்

அஜித் நடிக்க மறுத்த 'மிரட்டல்' படத்தை கைப்பற்ற மாதவன் விரும்பி பல முயற்சிகள் எடுத்தார். சுசி கணேசன் இயக்கத்தில் படமாகவிருந்த 'கருப்பன்' படமும் நின்று போனதால் இந்த வாய்ப்பை துரத்தினார். ஆனால் டைரக்டர் முருகதாஸ் ஒப்புக் கொள்ளவில்லை! ஏன்? இதே கதையை மாதவனிடம் சொல்ல முறைப்படி அப்பொய்ன்மென்ட் வாங்கிக் கொண்டு போய் சொன்னார் முருகதாஸ். அந்தச் சமயம் மாதவன் வீட்டு நாய்... குட்டிகளை பிரசவித்து இருந்ததால்.. கதையில் கவனம் செலுத்தாமல் நாய் புராணமே பாடிக் கொண்டு முருகதாஸை அலட்சியப்படுத்தினாராம். இதில் கடுப்பான முருகதாஸ் பாதியிலேயே கிளம்பி வந்துவிட்டார்! அந்த கோபத்தில் இப்போது அஜித் வலிய வந்ததும் விலகிப் போகிறார். இப்போது இந்தப் படத்தில் சூரியா நடிப்பார் என்று தெரிகிறது.

# கிருஷ்ணலீலாவில் கமல்

''சண்டியர்''க்குப் பிறகு கமல் சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கத்தில் மீண்டுமொருமுறை நடிக்கவுள்ளார். 07.11.2[illegible] அன்று கமல் தனது 50 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். அப்பொழுது நிருபர்களிடமிருந்து பேசிய பொழுது தனது அடுத்த படங்களை அறிவித்தார்.

இரண்டு படங்கள் முடிவாகிவிட்டது. ஆனால் சிங்கீதம் சீனிவாசராவ் இயக்கத்தில் 'கிருஷ்ணலீலா' என்ற படத்தில் நடிக்கவுள்ளேன்'' என்றார் கமல்.

கமலும், சிங்கீதம் சீனிவாசராவும் இணைந்து 'மைக்கேல் மதன காம ராஜன்', 'காதலா காதலா' போன்ற மறக்கமுடியாத காமெடி படங்களை அளித்துள்ளார்கள்.

இவ்விருவரும் மீண்டும் இணைகின்றார்கள். எனவே ரசிகர்கள் நிச்சயம் அடுத்த ஆண்டில் சிறந்த ஒரு கொமடிப் படத்தினை எதிர்பார்க்கலாம்.

ரசிர்கள் பாடு கொண்டாட்டம்தான்.



'ஜனனம்' -அருண், நந்திதா-

# குமுறுகிறார் சிம்ரன்



முன்பெல்லாம் பத்திரிகை என்றாலே எள்ளும் கொள்ளும் முகத்தில் வெடிக்கும். அந்த முகமா இது? ஆச்சரியப்பட வைக்கிறார். பழைய கோபத்தையெல்லாம் தீ வைத்துக் கொளுத்திய விஷயத்தில் இது சிம்ரனுக்கு தீபாவளியல்ல, போகி!

பக்கத்தில் இருக்கிற கணவர் தீபக்கை வருகிற நிருபர்களிடம் மறக்காமல் அறிமுகப்படுத்தியும் வைக்கிறார். சிம்ரன் பேசப் பேச எவ்வித குறுக்கீடும் இல்லாமல் ரசிக்கிற தீபக், இன்னும் சில மாதங்களில் வாழ்க போட ஒரு கூட்டத்தை கூட்டிக் கொண்டாலும் ஆச்சரியமில்லை. ஏனென்றால் கிச்சு வயசு 16 இல் இவர்தான் கதாநாயகன். கணவரின் நடிப்பை பக்கத்தில் இருந்து திருத்துகிற விஷயத்தில் அழகான டீச்சராகவும் இருக்கிறார் சிம்ரன். கிடைத்த இடைவெளியில் கேள்விகளோடு ஆஜரானோம் சிம்ரன் முன்!

**சந்திரமுகி படத்தில் ரஜினியுடன் நடிப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

இந்தப் படத்தில் நடிப்பதற்காக என்னை அழைத்தபோது உண்மையாகவே சந்தோஷத்தில் பூரித்துப் போனேன். ரஜினி சாருடன் நடிப்பதை எனக்குக் கிடைத்த பெருமை மிக்க கௌரவமாகவே நினைக்கிறேன். மேலும் இந்தப் படத்தில் என் கேரக்டருக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது இன்னும் சந்தோஷத்தை அதிகப்படுத்தியிருக்கிறது. ஒரே படத்தில் ரஜினி மற்றும் பிரபுவுடன் சேர்ந்து நடிப்பது எனக்குக் கிடைத்த நல்ல அதிஷ்டமே!

**சந்திரமுகியில் மிகவும் நல்ல கேரக்டரில் நடிப்பதால் உங்களுக்கு தேசிய விருது கிடைக்கிற வாய்ப்பு இருப்பதாக நம்புகிறீர்களா?**

நிச்சயமாக... ஏனென்றால் இந்த கேரக்டரில் நடிப்பதற்காக நான் மிகவும் கடினமாக உழைக்க வேண்டி இருக்கிறது. உழைக்கவும் செய்வேன். இந்த உழைப்பு தேசிய விருதைக் குறிவைத்து இருக்காது. என்பது மட்டும் உறுதி. ஆனால், தேசிய விருது கிடைத்தால் அது நிச்சயம் சந்தோஷமே.

**நீங்கள் நடிக்கும் படங்களில் உங்கள் கணவருக்கும் வாய்ப்புத் தர வேண்டும் என்று நீங்கள் கட்டாயப்படுத்துவதாக அல்லவா பரவலாக பேசப்படுகிறது?**

இது முற்றிலும் கடைந்தெடுத்த பொய். அப்படி யாரிடமும், எந்த சமயத்திலும் கட்டாயப்படுத்தியதே கிடையாது. ஆனால், இந்த விளம்பரப் படம் மாதிரி சினிமாவில் என் கணவர் நடிக்க வேண்டும் என்று சிலர் ஆசைப்படுகிறார்கள். அதை முடிவு செய்ய வேண்டியவர் என் கணவர். அவ்வளவுதான்.

**மீண்டும் நடிக்க வந்திருப்பதால் தொடர்ந்து தமிழ்ப் படங்களில் நடிப்பீர்கள் என்று நம்பலாமா?**

எனது நடிப்புத் திறமையை நன்றாக வெளி கொண்டு வருகிற நல்ல கேரக்டர்கள் உள்ள படம் கிடைத்தால் மட்டுமே நடிப்பேன்.

**உங்களின் கால்ஷீட் பிரச்சினையால் கிச்சா வயது 16 என்கிற படம் முடியாமல் இழுத்துக்கொண்டே போகிறதாமே. ஏன் அப்படி?**

அப்படி எல்லாம் கிடையாது. அவர்கள் பணம் எதுவுமே தராமலிருந்தும் கூட நான் சில தினங்கள் அந்தப் படத்தில் நடித்தேன் என்பதே உண்மை. என்னால் இதுவரை எந்த ஒரு படப்பிடிப்பும் நின்று போனதாகச் சரித்திரமே கிடையாது.

**குழந்தை என்றதும் சட்டென்று ஞாபகம் வருகிறது. குட்டி ஜூனியர் எப்போது?**

இந்த மாதிரி கேள்வி வேண்டாமே ப்ளீஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் எஸ்.பி.பி. தயாரிக்கிறார்



-எஸ்.பி.பி-

'எம். குமரன் சன் ஆஃப் மகாலட்சுமி' ரவிக்கு வரவேற்பு. தயாரிப்பாளர்கள் பெட்டியும் கையுமாக இவருக்கு தவம் கிடக்கிறார்கள்.

லட்சுமி மூவி மேக்கர்ஸின் 'ராஸ்கல்' (பெயர் மாறப் போகிறது) படத்தில் தற்போது நடித்து வருகிறார் ரவி. இது முடிந்ததும் அவர் நடிக்க விருப்பது பாடகர் எஸ்.பி.பி. தயாரிக்கும் படத்தில்!

ஏற்கனவே படம் தயாரித்திருக்கும் எஸ்.பி.பி. நீண்ட இடைவெளிக்குப் பிறகு தயாரிப்புத்துறையில் கால் பதிக்கிறார். இயக்குனர் இசையமைப்பாளர் யார் யார் என்பது ரகசியம்.

வீட்டில் ஒரு ஹீரோவான மகன் சரண் இருந்தும் ரவியை எஸ்.பி.பாலசுப்பிரமணியம் ஹீரோவாக்கியிருக்கிறார் என்றால் அவரது எண்ணம்போட்டபணத்தை திருப்ப வேண்டுமே என்பதாகும்.



'காதல்'
-பரத், சந்தியா-

# மும்பை எக்ஸ்பிரசில் தபு

கமலுக்கு ஹீரோயின் கிடைத்து விட்டார். மாதுரி தீட்சித், தபு என்று ஓடியவர் கடைசியில் மூச்சு வாங்க நின்ற இடம் கஜோலின் வீடு.

அஜய்தேவ்கானை திருமணம் செய்து குழந்தை பெற்றுக் கொண்ட பின்பும் கஜோலுக்கு நடிப்பார்வம் குறையவில்லை. இந்திப் படங்களில் தொடர்ந்து நடித்து வந்தார்.

இப்போது கமலின் 'மும்பை எக்ஸ்பிரஸ்'சுக்கு பச்சைக் கொடி காட்டியிருக்கிறார். 'மும்பை எக்ஸ்பிரஸ்' தமிழ், இந்தி இரு மொழிகளில் தயாராவதால் ஹீரோயின் இந்தி நடிகைதான் என்பதில் உறுதியாக இருந்த கமலுக்கு இறுதி வெற்றி.

கஜோல் இந்தி எக்ஸ்பிரசுக்கும் மட்டுமா இல்லை தமிழுக்குமா என்பது இன்னும் முடிவாகவில்லை. கஜோலுடன் அவரது குழந்தையும் இந்தப் படத்தில் நடிக்க வாய்ப்புள்ளது.

ஷூட்டிங் வந்த மாதிரியும் இருக்கும் குழந்தையை பார்த்த மாதிரியும் இருக்கும். கஜோல் கணக்கு போட்டுதான் கால்சீட் கொடுத்திருக்கிறார்.

# விஜயின் தங்கையாக மல்லிகா



'திருப்பாச்சி'
-மல்லிகா-

'கில்லி', 'மதுர' வெற்றிப் படங்களைத்தந்த விஜய் திருப்பாச்சியில் பிஸியாக உள்ளார். படம் பொங்கலுக்கு ரீலீஸ் என்பதால் பறந்து பறந்து வேலை பார்க்கிறார்கள்.

'திருப்பாச்சி' என்பதால் வன்முறை அதிகமிருக்கும் என பயப்பட வேண்டாம் என நம்பிக்கை தருபவர்கள் இயக்குனர் பேரரசு. படத்தின் ஆறு பாடல்களையும் இவரே எழுதியிருக்கிறார்.

படத்தில் வன்முறைதான் இல்லை. சண்டைக்காட்சிகள் பல உண்டாம் (இதோடா!). இதற்காக திருப்பாச்சியிலிருந்து ஆளுயரத்துக்கு மூன்றும் மூன்றடி நீளத்திற்கு இருநூறு அரிவாள்களும் வாங்கியிருக்கிறார்கள்.

விஜய்க்கு பாசமிகு அண்ணன் கேரக்டர். நெற்றியில் பட்டையும், கழுத்தில் ருத்ராட்சை கொட்டையுமாக வலம் வருகிறார். இவரை காதலிப்பவராக த்ரிஷா. அம்மணிக்கு செம காமெடி ரோலாம். ஆவி வந்தது போல் இவர் ஆக்டிங் விடும் காட்சி செம கல... கல.. என்கிறார்கள்.

படத்தில் விஜய், த்ரிஷா இருந்தாலும் கதை சுற்றிச் சுழல்வது மல்லிகாவை. இவர் விஜய்யின் தங்கையாக நடிக்கிறார்.

பாதி படம் கிராமம் மீதி படம் பட்டணம் என்று தயாராகி வருகிறது. 'திருப்பாச்சி' படத்தில் ஆறுதலான விஷயம் விஜய் எந்த நடிகருக்கும் சவால் விடவில்லை, பன்ச் டயலாக்குகளும் இதில் கிடையாது.

சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரித்த படங்களிலேயே அதிக பட்ஜெட் 'திருப்பாச்சி' என்பது மேலதிக தகவல்.

# இளையராஜாவின் மகளும் இசையமைப்பாளராகிறார்

இசைஞானி இளையராஜாவின் மகன்களான கார்த்திக்ராஜா, யுவன்சங்கர்ராஜா ஆகிய இருவரும் தமிழ்பட உலகின் முன்னணி இசை அமைப்பளர்களாக பல படங்களுக்கு இசை அமைத்து வருகிறார்கள். இவர்களை தொடர்ந்து இளையராஜாவின் மகள் பவதாரணியும், படங்களுக்கு தொடர்ந்து இசையமைக்க ஆரம்பித்து இருக்கிறார்.

முதன் முதலாக நடிகை ரேவதி டைரக்டு செய்து 'மித்ரு மை ப்ரண்ட்பீ, என்ற ஆங்கில படத்துக்கு பவதாரணி முதன் முதலாக இசையமைத்தார்.

தொடர்ந்து அவர் சில படங்களுக்கு இசையமைக்க ஒப்புக் கொண்டிருக்கிறார்.

'வசந்தமே வருக' இது ஒரு முழுநீள நகைச்சுவைப் படம். ஒரு பெண்ணினால் மூன்று இளைஞர்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாறுதல்களை கதை சித்திரிக்கிறது. இதில் ராம்ஜி முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

# புதுமுகங்கள் நடிக்கும் 'அன்பே வா'

விஜய் நடித்த நினைத்தேன் வந்தாய், பிரியமானவளே, வசீகரா ஆகிய படங்களை டைரக்டு செய்தவர் கே. செல்வபாரதி. இவர் புதுமுகங்களை வைத்து ஒரு படம் டைரக்ட் செய்கிறார்.

இந்தப் படத்தில் 'அன்பே வா' என்று எம்.ஜி.ஆர்படத்தின் பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

இதில் புதுமுகம் ஜே.கே. தென்றல் கதாநாயகனாக அறிமுகமாகிறார். கதாநாயகியாக ஸ்ரீதேவிகா நடிக்கிறார்.

கதாநாயகனுக்கு இணையாக முற்றிலும் மாறுபட்ட வேடத்தில், விவேக் நடிக்கிறார். புதுமுக வில்லன் நாகேந்திரன் ஆகியோரும் நடிக்கிறார்கள்.

காதலிப்பதற்கு முன் – திருமணத்துக்குப் பின் இரண்டு உள்ளங்களுக்கு இடையே நடைபெறும் போராட்டத்தை யதார்த்தமாக சொல்லுகிறார் கே.செல்வபாரதி.

# ரஜினியுடன் நடிக்க சினேகா மறுப்பு



-சினேகா-

சிவாஜியின் சொந்தப் பட நிறுவனம் தயாரிக்கும் படம் சந்திரமுகி. இதில் ரஜினி, பிரபு ஹீரோக்களாக் நடிக்க உள்ளார்கள் என்றும் பின்னர் தன்னைக் கேட்டால் தான் நடிக்கத் தயார் என்றும் கமல் கூறிய சங்கதிகள் உங்களுக்குத் தெரிந்தவையே. ஆனால், சந்திரமுகி படத்தில் ரஜினிக்கு ஜோடியாக முதலில் பேசப்பட்டவர் நடிகை ஐஸ்வரியா.

என்ன காரணமோ ரஜினியின் சந்திரமுகியில் தன்னால் நடிக்கமுடியாது என்று ஈமெயிலில் பதில் அனுப்பிவிட்டார் ஐஸ்.

இந்நேரத்தில் சரத்குமாருக்கு ஐயா படத்தில் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கும் நயன்தாராவை ஒப்பந்தம் செய்ய யூனிட் முடிவு செய்தது. ஆனால், ரஜினியோ புதுமுகமாக இல்லாமல் நடிப்பில் கொஞ்சம் முதிர்ச்சி கொண்ட நடிகை யாராவது என்னுடன் ஜோடியாக நடித்தால் நன்றாக இருக்கும் என்று யோசனை கூறினார்.

இயக்குனர் வாசுவும் அதுபற்றி மற்றவர்களிடம் ஆலோசனை செய்தார். எல்லோருடைய செலக்ஷ்னும் நடிகை சினேகாவின் மீதே இருந்தது.

சரி ரஜினியுடன் நடிக்க வேண்டாம் என்றா சினேகா சொல்லப் போகிறார் என்று நினைத்த இயக்குனர் வாசு, சினேகாவிடம் பேசுவதற்கு முடிவெடுத்திருந்தார்.

இந் நிலையில் ஒரு பத்திரிகைப் பேட்டியில், சந்திரமுகியில் ரஜினிக்கு நீங்கள் ஜோடியாமே என்று ஒரு நிருபர் கேட்டதற்கு, அப்படியா..... எனக்குத் தெரியாது. அப்படியே என்னைக் கேட்டாலும் நான் சந்திரமுகியில் நடிக்க முடியாது. காரணம் என்னுடைய கால்ஷீட் முழுக்க தெலுங்கு, தமிழ் என பிரித்துக் கொடுத்துவிட்டேன் என்று கூறும் சினேகா. அவர்களை ஏமாற்றிவிட்டு ரஜினிகாந்துடன் நடிக்க சந்திரமுகி படத்திற்கு கால்ஷீட் கொடுக்க தன்னால் முடியாது என்று திட்டவட்டமாக கூறி இருக்கிறார்.

ஏற்கனவே ஐஸ்வர்யா நடிக்கமாட்டேன் என்று சொன்னதில் கொஞ்சம் மூட்அவுட்டாகி இருந்த ரஜினி, சினேகாவின் இந்த பேட்டி பற்றி கேள்விப்பட்டதும் கோபமாகிவிட்டாராம்.

அந்த வேகத்திலேயே முதலில் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்யத் தீர்மானித்திருந்த நயன்தாராவையே இதில் ஒப்பந்தம் செய்ய இறுதி முடிவு எடுத்துள்ளார்கள்.

இப்போது ரஜினியுடன் டூயட்பாடப் போகிறார் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானம் தொட்டுவிடும் தூரம் தான்!

பெண்கள் வீட்டின் கண்கள், நாட்டின் கண்கள் என்று நாம் எல்லோரும் பெருமைப்பட்டுக்கொள்கிறோம். ஒருவிதத்தில் பார்த்தால் அது உண்மை தான். ஆனால், பெண்கள் பொதுவாக மற்றவர்களுக்கு நன்மை செய்யும் அளவுக்கு தமக்குச் செய்து கொள்ள முடிவதில்லை. பெண்களுக்கும் , கண்களுக்கும் ஒற்றுமை இருக்கத்தான் செய்கிறது. கண்களைப் போலவே பெண்களாலும் தங்களைப் பார்த்துக்கொள்ள முடிவதில்லை. ஒவ்வொரு இல்லத்திலும் விளக்காக ஒளி வீசும் பெண்ணை கவனமாகப் பார்த்துக்கொள்ள யார் இருக்கிறார்கள்?

கணவனோ,குழந்தைகளோ யாராக இருந்தாலும்,தங்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் சலிக்காதுசெய்கிறாளே, அவளுக்கு என்ன குறைகள் உள்ளன என்று கேட்பதோ, நிவர்த்திப்பதோ கிடையாது என்பதே உண்மை.

வானமே எல்லை என முழக்கமிட்டு அண்ணாந்து பார்க்கும் பெண்களுக்கு,வானில் பல நட்சத்திரங்கள் தெரிந்தாலும், வானம் தொட்டுவிடும் தூரம் தான் என நினைத்தாலும், சாதனை என்ற நட்சத்திரங்களைப் பறிக்க அவர்கள் தலையை நிமிர்த்தினாலோ, கைகளை உயர்த்தினாலோ அங்கே கண்ணுக்குப்புலனாகாத பல கண்ணாடிக்கூரைகள் அவர்களைத் தடுப்பதும் இடிப்பதும் தான் உண்மை.

ஒரு ஆணின் தகுதி— அவனுடைய வாழ்வின் வெற்றி, அவனுடைய பணம், பதவி, அந்தஸ்து என்ற அளவுகோலை வைத்து மட்டுமே மதிப்பிடப்படுகிறது. ஆனால், ஒரு பெண்ணுக்கு இந்த சமுதாயம் வைத்திருப்பது வேறு ஒரு அளவுகோல். அதில் தான் எத்தனை அளவுகள்? வெற்றி அடைந்தவளாக ஒரு பெண் கருதப்படும் முன்பு கீழ்க்கண்ட கேள்விகள் கேட்கப்படுகின்றன. அவள் அவளுக்குக் கொடுக்கப்பட்ட பணிகளை திறம்படச் செய்திருக்கிறாளா? அவள் ஒருநல்ல மகளா? நல்ல மனைவியா? நல்ல தாயா? அவள் அவளுடைய வீட்டையும், குடும்பத்தையும் சரியாக நிர்வாகம் செய்கிறாளா? குடும்பத்தில் தேவையான நேரத்தில் அவள் சரியான முடிவெடுக்கிறாளா? மாமன், மாமியிடம் மரியாதையாக இருக்கிறாளா? அவள் பழக்க வழக்கங்கள் என்ன? என்று பல கேள்விகள் எழுப்பப்பட்டு இவை அனைத்துக்கும் சரியான விடை கிடைத்தால் மட்டுமே அவள் ஒரு சாதனையாளராக அங்கீகாரம் பெறுகிறாள்.

வேலைக்குச் செல்லும் ஒரு பெண்ணுக்குக் குடும்பம் சரியாக அமையவில்லை அல்லது அவள் ஒரு விவாகரத்துச் செய்த பெண்ணாக இருந்தால், அந்தப் பெண்ணை எல்லோரும் சுட்டிக் காட்டி நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ இழிவாகப் பேசுவாரே தவிர, அவளுடைய வெளியுலக சாதனைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. இது சமுதாயம் பெண்ணுக்குஇழைக்கும் மாபெரும் அநீதி!



ஆக வெற்றி பெறும் ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் மட்டும் இருந்தால் போதும். ஆனால், வெற்றி பெற்றதாகக் கருதப்படும் பெண்ணுக்குப் பின் பலமாக ஒரு கௌரவமான குடும்பம் தேவை. அது இல்லாதபோது ஒருபெண் தன் தொழிலில் முழுமையான ஈடுபாடு காட்ட பல சமயங்களில் முடிவதில்லை.

அதுதவிர ஒவ்வொரு பெண்ணும் பிறக்கும்போதே பெண் என்ற வகையில் இரட்டைப்பிறவி வேடம் தரிக்க வேண்டியிருப்பது இன்னொருதுரதிஷ்டம். பெற்றோர் தன் பெண்ணை வளர்க்கும்போது, படிப்பு, இசை,நடனம், விளையாட்டு என்று எல்லாவற்றிலும் ஆர்வம் காட்டச் செய்கின்றனர். சாதனை செய்யத் தூண்டுகின்றனர். ஆனால், திருமணம் ஆன பின்பு "இதெல்லாம் உனக்குத் தேவையில்லை. நீ குடும்பத்தைக் கவனித்தாலே போதும்" என புகுந்த வீட்டில் அவளது சாதனைகளை ஒடித்து, அவளுடைய அடிப்படை உணர்வுகளை நசுக்கி இன்னொரு பிறவியாக மாற்றிவிடுகின்றனர். பல பெண்கள் இது போன்ற சூழ்நிலை ஏற்படுத்தும் தாக்கத்தினால் தமது கனவுகளைப்புதைத்து தன் குடும்பத்துக்கு தங்களை உரமாக மாற்றிக் கொண்டு விடுகின்றனர்.



இந்த நிலை எந்தக் காலத்திலும் ஒரு ஆணுக்கு ஏற்படுவதில்லை. நன்றாகப் படித்துத் தங்கப் பதக்கம் வாங்கிய மணமகனுக்கு வரதட்சணை கொடுக்கக் காத்திருக்கும் பெண்ணைப் பெற்றவர் எத்தனை பேர்? அதுவே ஒரு பெண் தங்கப் பதக்கம் வாங்கி இருந்தால் அதற்காக அவளை யாராவது வரதட்சணை இன்றி மணந்து கொள்வார்களா என்றால் அது கேள்விக்குறிதான். திருமண விடயத்தில் அவள் அழகும், அவள் கொண்டுவரும் பொருளும் தான் அவளுடைய புகழ் பேசும் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும்.

முழுமையான திறமை இருந்து, பல துறைகளில் ஈடுபடும் பெண்களுக்கு அவர்களது தகுதிக்கேற்ப வேலை கிடைத்தாலும், சமயத்தில் குடும்பப் பொறுப்பினால்,அதை ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. அதுவே ஒரு ஆணாக இருந்தால் குடும்பத்துக்காக தன் முன்னேற்றத்தை உத்தியோக உயர்வை தியாகம் செய்ய வேண்டிய அவசியமில்லை.தான் அடைய வேண்டிய, அடையக்கூடிய உயர்வுகளை பல பெண்களால் பார்த்துப் பெருமூச்சுத்தான் விட முடிகிறது.

இவை எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் ஆணுக்கும், பெண்ணுக்கும் வேலையிலும், அதற்குரிய சம்பளத்திலும் உள்ள வேறுபாடுதான். என்னதான் பெரிய வேலையில் இருந்தாலும் ஒரு பெண், ஒரு ஆணுக்குச்சமமாக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டால் அவளை சமுதாயம் இழிவாகத்தான் பார்க்கிறது. அவளது பெண்மைக்குக் களங்கம் கற்பிக்கிறது. இதனால், பெண்கள் ஓரளவுக்கே வெளியுலகில் இயல்பாகப் பழக முடிகிறது. வெளி உலகத் தொடர்புகளை ஒரு ஆண் அளவுக்கு ஏற்படுத்திக்கொள்ள முடியாததாலும், தனது நற்பெயரைக் காக்க வேண்டிய நிலைமை இருப்பதாலும் ஒரு பெண்ணால் ஆண் அளவுக்குச் சாதிக்க முடிவதில்லை.

மேற்கூறப்பட்ட இத்தனை சூழ்நிலைகளையும் தகர்த்து, எல்லாப்பிரச்சினைகளையும் முறியடித்து காற்றில் ஏறி விண்ணையும் சாடும் அளவுக்கு சாதனை புரிவதற்கு ஒரு திறமையான பெண்ணுக்கு, சாதகமான சூழ்நிலை, சரியான வாய்ப்புகள், குடும்பத்தின் ஒத்துழைப்பு மட்டுமே கைகொடுக்கும் என்றால் அது மிகையில்லை. அப்படிச்சாதித்த, சாதித்து வரும் பெண்களுக்குத்தான் சாதனையின் வேதனைகளும் தெரியும்.ஏற்றம் விரும்பு, ஏமாற்றம் தவிர்! ஏக்கம் விலக்கு! ஏச்சுக்கு ஆளாகாதே! என்று புதுமையாய் பெருமையாய் தைரியமாய் எல்லாவற்றையும் கற்றுக்கேட்டு தெரிந்து வாழ்வதே பெண்ணுக்கு அழகு.

என்ன சகோதரிகளே! உங்கள் தடைகளைத் தாண்ட இன்றே நீங்கள் தயார் தானே?

*****

## இவ்வார பொன்மொழி

*இந்த உலகத்திலேயே உங்களிடம் இருந்து வரும் திறமையைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரே நபர் நீங்கள் தான்.*

## டிப்ஸ்

தன்னம்பிக்கையோடு பொது இடங்களில் எல்லோரையும் கவரும் விதத்தில் நடந்து கொள்வது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமா?

எல்லோரும் என்னைப் பார்க்கிறார்களே, அவர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள் போன்ற பயம் கலந்த சிந்தனை, பொது இடங்களில் நிற்கும்போது ஒருபோதும் உங்களுக்கு வரக்கூடாது. அப்படி ஒரு பயம் உங்களிடம் இருந்தால், தன்னம்பிக்கையோடு அதை விரட்டி விடுங்கள்.

மற்றவர்களோடு பேசும்போது, அது பெண்ணாக இருந்தாலும் ஆணாக இருந்தாலும் அவர்களது கண்களைப் பார்த்துப் பேசுங்கள். ஒருவர் உங்களது கண்களைப் பார்த்துப்பேசும் போது நீங்கள் அவரது முகத்தைப் பார்த்தபடி கேளுங்கள்.

எந்த இடத்திலும் நிறையப் பேச வேண்டும் என்று நினைக்காதீர்கள். அதிகம் பேசுவதை விட அர்த்தத்தோடு குறைவாகப் பேசுவதே அடுத்தவர்களின் கவனத்தை ஈர்க்கும். சபையில் இருப்பது யார்? என்ன சூழ்நிலையில் பேசுகிறோம் என்பதை உணர்ந்து பொது இடங்களில் பேச வேண்டும்.

பின்பற்றுங்கள். பயன்பெறுங்கள்.

## குழந்தைகளுக்கு தாய்ப்பால் மட்டும் போதுமா?

காலம் மாறினாலும், மாறாமல் இருக்கும் ஒரே உணவு தாய்ப்பால் தான். குழந்தைகளுக்குத் தேவையான சத்து, நிறைந்த உணவும் இது தான்.

குழந்தைகள் தாய்ப்பால் அருந்துவது என்பது சுவாசிப்பதைப் போன்று இயற்கையானது. குழந்தையை அடிக்கடி எடுத்து மார்போடு அணைத்து, நீண்ட நேரம் வைத்திருக்க வேண்டும். இது மட்டுமல்ல, பாலூட்டும் போது தாயும் ஒருவித உணர்வுக்கு ஆளாகிறார். குழந்தையின் பார்வை, ஓசை ஆகியவற்றாலும், மகிழ்ச்சியான உணர்வுகள், உணர்ச்சிகள் ஆகியவற்றாலும் பால்சுரப்பி தூண்டிவிடப்படலாம்.

குழந்தை பால் குடிப்பது குறையுமானால் பால் சுரப்பும் குறைய வாய்ப்புள்ளது. கவலை, கோபம், தன்னம்பிக்கையின்மை, மனக்குழப்பம் ஆகியவை ஏற்பட்டாலும் பால் உற்பத்தி குறையும். எனவே, நல்ல சூழ்நிலையும், தன்னம்பிக்கையும் தாய்ப்பால் கொடுப்பதற்கு மிகவும் முக்கியமான தேவைகளாகும்.

குழந்தைக்கு எவ்வளவு காலத்துக்கு தாய்ப்பால் கொடுக்க வேண்டும் என்பது குறித்து ஆராய்ச்சியாளர்களிடையே வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

3,6மாதம் வரை தாய்ப்பால் கொடுக்க வேண்டும். அதன் பின்பு துணை உணவு கொடுக்க வேண்டும் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

இதே போன்று குழந்தையின் சத்துணவுத் தேவைகளை தாய்ப்பால் மட்டுமே போக்குமா என்பதும் ஒரு கேள்விக்குறிதான்.

4 மாதம் வரை குழந்தைகளின் தேவையைப் போக்கும்.பின் அவசியம் துணை உணவு கொடுக்க வேண்டும். ஆரம்பத்தில் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கேற்ப கொஞ்சம்,கொஞ்சமாக துணை உணவு கொடுக்க வேண்டும். ஒரு வாரம் கழிந்த பின்பு இரண்டாவது துணை உணவு கொடுக்கலாம்.இப்படிப் படிப்படியாக துணை உணவு கொடுப்பதன் மூலம் குழந்தைகள் ஆரோக்கியமாக வளரும் என்று ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது.



## பெண்

சசி

## சமையல் குறிப்பு

### பேபி சைனீஸ் இட்லி

*தேவையான பொருட்கள்*

| | |
|---|---|
| பேபி இட்லி | –50 |
| உள்ளி | –4,5 |
| வெங்காயம் | –1 |
| பச்சை மிளகாய் | –2 |
| சிவப்பு மிளகாய் சோஸ் | 2 தேக்கரண்டி. |
| சோயா சோஸ் | – 1 தேக்கரண்டி |
| உப்பு | –தேவையான அளவு. |
| எண்ணெய் | – 4 தேக்கரண்டி |

*செய்முறை*

சமையல் பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றிக் கொதித்ததும் பொடியாக நறுக்கிய உள்ளியைச் சேர்க்கவும். பின்பு வெங்காயம், பச்சை மிளகாய் சேர்க்கவும். இவை நன்றாக வதங்கியதும், சிவப்பு மிளகாய் சோஸ்,சோயா சோஸ் சேர்க்கவும். பின்பு நன்றாகக் கலந்து கடைசியில் மல்லித்தழை அல்லது வெங்காயத் தழையைப் பொடியாக நறுக்கி சேர்க்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸ்டர் வேதாளம்



அன்றைய தினப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை மேலோட்டமாகப் பார்த்தபடி இருந்தோம். எதிரே நிழலாடியது. பத்திரிகையில் இருந்து கண்களை எடுக்காமலே, ''உட்காருங்கள்''என்று சொல்லிவிட்டு தொடர்ந்து பத்திரிகைகளை மேய்ந்தோம். சற்று நேர இடைவெளியின் பின்னரும் வந்தவர் நின்றுகொண்டேயிருப்பதை அவதானித்தோம். '' என்ன உங்களை உட்காரச் சொன்னோமே! ஏன் உட்காரவில்லை?'' என்றபடி பத்திரிகையில் இருந்த கண்ணை வந்தவர் பக்கம் வீசினோம். வந்திருந்தவரைப் பார்த்ததும் ''அடடா...'' என்றபடி எமது தவற்றை உணர்ந்து ''sorry'' என்றோம்.

அருகே காற்றிலே மிதந்தபடி நின்றார் வேதாளத்தார். ''என்ன வந்து சத்தமில்லாமல் நிற்கிறீர் ?'' என்று கேட்டுவிட்டு, ''சரி வந்த விடயங்களைத்தாரும்'' என்று கேட்டோம்.

வேதாளத்தார் அவிழ்த்துவிடத் தொடங்கினார்.

''கடந்த சனிக்கிழமை கொழும்பு சுகததாஸ உள் அரங்கில் ஜே.வி.பிக்காரர்களின் கார்த்திகை வீரர்கள் தினம் பார்க்கப் போயிருந்தேன். அங்கே கூடியிருந்த கூட்டத்தைப் பார்க்க எனக்கு ஒன்று தெளிவாக விளங்கியது?'' என்றார்.

''என்ன விளங்கியது?''என்று கேட்டு வைத்தோம்.

''விரைவிலே தமிழீழம் மலர்ந்துவிடும் போலிருக்கிறது'' என்று சர்வசாதாரணமாகச் சொன்னார்.

ஏதோ நினைவிலே இருந்த எங்களுக்கு அவர் சொன்ன விடயம் ரியூப் லைட்டைப் போல் கொஞ்ச நேரத்தின் பின்புதான் பற்றிக் கொண்டது. திடுக்கிட்டு அவரை திரும்பிப் பார்த்தோம்.

''என்ன பகிடி விடுகிறீரோ?'' என்றோம்.

''இல்லை சீரியஸாகத்தான் சொல்கிறேன்'' என்றார்.

''மிகப் பெரிய விடயத்தை சர்வசதாராணமாகச் சொல்கிறீரே! விளக்கமாகச் சொல்லுமேன்'' என்றோம்.

''அன்றைய தினம் சுகததாஸ உள் அரங்கு சனத்தினால் நிரம்பி வழிந்தது. பலர் உள்ளே செல்ல வழியில்லாது வாசல்களை அடைத்துக்கொண்டு நின்றார்கள். இன்னும் பலர் எட்டிப்பார்க்கக்கூட முடியாமல் திரும்பிச் செல்ல நேரிட்டது...''

''ஆம் அதற்கும், தமிழீழத்துக்கும் என்ன சம்பந்தம்?'' என்று கேட்டோம் ஆவலுடன்.

''இந்தக்கூட்டம் பலரையும் சிந்திக்க வைத்துவிட்டது. ஜே.வி.பியினருக்கு அம்மையார் ஒதுங்க இடம் கொடுத்தது, இப்போ ஒட்டகத்துக்கு மழைக்கு ஒதுங்க இடம்கொடுத்ததுபோல் ஆகிவிட்டதாகப் பலரும் விமர்சனம் செய்தார்கள்''

''என்ன... ஒட்டகத்துக்கு ஒதுங்க இடம் கொடுத்த கதை... புரியவில்லையே...!''

''பரிதாபத்துக்கு ஒட்டகத்துக்கு மழைக்கு ஒதுங்க இடம் கொடுத்தார் ஒருவர். அது முழு இடத்தையும் பிடித்துக்கொண்டு ஒதுங்க இடம் கொடுத்தவரையே உதைத்துத் தள்ளிய பழைய கதை தெரியாதோ?''

''சிறுவயதில் கேள்விப்பட்ட ஞாபகம்'' என்றோம்.

''அதுபோல் ஜே.வி.பிக்கு பரிதாபம் பார்த்து இரங்கி அவர்களை இணைத்துக் கொண்டது இன்று தங்கள் கட்சிக்கே ஆபத்தாகப் போய்விடுமோ என்ற நிலையில் அம்மையாரின் கட்சி தவித்துப்போயிருக்கிறதாம்''

''ஏன் ஜே.வி.பியின் வளர்ச்சி அவர்களை ஓரம் கட்டிவிடும் என்று பயப்படுகிறார்களோ...?''

''ஓரம் கட்டிவிடும் அல்ல... ஓரம் கட்டிவிட்டதாம். முன்னர் ஜே.வி.பியின் கூட்டங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் தலைகள் தெரியுமாம். ஆனால், இப்போதோ எள்ளுப்போட்டால் நிலத்தில் விழாத கூட்டம். இப்படியே போனால் அடுத்து அம்மையாரின் கட்சி அம்போ ஆகிவிட, ஜே.வி.பி மிகப் பெரிய கட்சியாக வளர்ந்துவிடக்கூடிய சாத்தியங்கள் தெரிகிறதாம்.''

''அப்படியென்றால் அடுத்த அடுத்த தேர்தல்களில் ஜே.வி.பி தனித்து ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்டுவிடும் என்கிறீரோ?''

''வேறென்ன? ஜே.வி.பியின் துரிதமான வளர்ச்சி அடுத்தடுத்தடுத்த அல்ல அடுத்த தேர்தலிலேயே ஆட்சிக்கு வருமளவுக்கு படு பயங்கர முன்னேற்றமாம். அதனால், தேசிய கட்சிகள் இரண்டும் படு அப்செட்டில் இருக்கின்றனவாம்.''

''அதுசரி... இதற்கும் தமிழீழத்துக்கும் என்ன சம்பந்தம்?''

''ஜே.வி.பி ஆட்சி அமைத்தால் சமாதானப் பேச்சுக்கள், இடைக்காலத் தீர்வு— இறுதித் தீர்வு எல்லாம் மூட்டை கட்டி வைக்கப்பட்டுவிடும். இதனால், சுலபமாக புலிகள் தமிழீழத்தை பிரகடனப்படுத்த முடியும். ஜே.பி.யை மேற்குலக நாடுகளுக்குப்பிடிக்காது. அதே போல் ஜே.வி.பிக்கும் மேற்குலக நாடுகளைக் கண்ணிலே காட்ட முடியாது. எனவே, விடுதலைப்புலிகளின் தமிழீழப்பிரகடனத்துக்கு மேற்குலக நாடுகள் சில ஆதரவளிக்கக் கூடும்.'' என்று அடுக்கிக் கொண்டே போன வேதாளத்தாரை இடைமறித்து, ''என்னே கற்பனைத்திறன் உமக்கு..'' என்று கிண்டலாகப் பாராட்டினோம்.

''இல்லை இவை எனது கற்பனை அல்ல. ஐ.தே.க.காரர்கள் சொல்லும் எதிர்வுகூறல் தான் இவை. ஆனால், எனது சிற்றறிவுக்கு எட்டியவரை இப்படி நடக்க சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாகவே தெரிகிறது'' என்றார்.

''ஆம். இலங்கையிலே சமாதானத்துக்காக மேற்கொண்ட முயற்சிகளில் இனி பலனெதுவும் இல்லை.. அதேவேளை, தமக்குப் பிடிக்காமல் ஜே.வி.பி ஆட்சிக்குத் தலையிடி கொடுக்க வேண்டும் என்று மேற்குலகு விரும்பினால் இது சாத்தியப்படக்கூடும்'' என்று நாமும் எமது பங்குக்குச் சொல்லி வைத்தோம்.

அடுத்த விடயத்துக்குத் தாவினார் வேதாளத்தார்.

''தமிழ் அமைச்சரின் கட்சிக்குள் கசமுசா என்பது உண்மை தானாம். தனது வலது... இடதெல்லாம் தன்னைவிட்டு ஓடிப்போனதில் மிகுந்த மனக் கஷ்டத்தில் இருக்கிறார் அவர்''

''இல்லையே! அவர்கள் வெளிநாட்டுக்கு சிகிச்சைக்குச் சென்றதாக அல்லவா அமைச்சர் சொல்கிறார்..'' என்ற எமது வார்த்தையை கேட்டுவிட்டு மெதுவாக சிரிப்பை மட்டும் வெளிப்படுத்தியவர், ''வன்னியிலேயும் கசமுசா பற்றி கேட்டீரே... அண்மையில் அனைத்துத் தளபதிகளும் ஒன்றாகச் சேர்ந்து மதியுரைஞரை வழியனுப்பி வைத்ததைக் கண்டீரோ'' என்றார்.

''ஆம்... கசமுசா என்று சொன்ன தளபதிகள் எல்லோரும் கை கோர்த்தபடி நின்றது பார்க்க சந்தோஷமாக இருந்தது. இன்னொரு பிளவா என்ற ஏக்கத்தில் இருந்த எமக்கு பெரிய மனப்பாரம் இறங்கியது போலவும் இருந்தது''என்றோம்.

''வேறுவிடயமில்லை''என்றவர், வெளியே பார்த்தார். மழை இருட்டாக இருந்தது. ''அடடா... நான் எனது வேப்ப மரத்துக்குத் திரும்ப வேண்டும். மழை வரப்போகிறது'' என்றபடி விடைபெற்றார்.

# உமா பாரதி வெளியேற்றம்; சங்கராச்சாரியார் கைது

## பரபரப்பாகிய இந்திய அரசியல் களம்

### பத்திரிகை வீடு

கடந்த வாரம்தான் இந்தப்பந்தியில் இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சி கடும் நெருக்கடியில் இருப்பது பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு முக்கிய காரணம் ஆட்சியை இழந்திருக்கும் நேரத்தில் அத்வானி, வாஜ்பாய் அல்லாத இரண்டாம் நிலைத் தலைவர்களிடையேயான பதவிப்போட்டி என்றும் கூறியிருந்தோம்.

சொல்லிவைத்தாற்போல சில நாட்களுக்கு முன் டெல்லியில் நடந்த பி.ஜே.பி. புதிய நிர்வாகிகள் கூட்டத்தில் இந்த இரண்டாம் நிலைத்தலைவர்களிடையான பனிப்போர் உக்கிரமடைந்து கட்சியின் அதித்தீவிர இந்துத்வ முகமான செல்வி உமாபாரதி கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளார்.

காவிதரித்த பெண் சந்நியாசினியாகிய உமாபாரதி சமீபகாலமாக பிரமோத் மகாஜன், அருண் ஜேட்லி, வெங்கையாநாயுடு, சுஷ்மா ஸ்வராஜ் ஆகிய தன்னையொத்த இளம் தலைவர்களுடன் கடும் அறிக்கைப்போரில் ஈடுபட்டு வந்தார். மகாராஷ்டிரா மாநில தேர்தல்களில் கட்சி தோற்றத்தையடுத்து 80களில் கட்சித் தலைவராக இருந்த அத்தவானி மீண்டும் கட்சி தலைவராக்கப்பட்டார். வெங்கையாநாயுடு தலைவர் பதவியை ராஜினாமா செய்ததை அடுத்தே இந்நியமனம்.

பின்னர் அத்வானி கட்சிக்கு புதிய நிர்வாகிகளை அறிவித்தார். அப்போது உமாபாரதிக்கு ஒரு பொதுச்செயலாளர் பதவியும் வழங்கப்பட்டிருந்தது. மத்திய பிரதேச முதல்வராக இருந்துவந்த உமாபாரதி அவர் மீது ஊரடங்கு சட்டத்தை மீறி மதக்கலவரத்தை தூண்டும் வகையில் 1994இல் பேரணி ஒன்றை நடத்தினார் என கர்நாடக அரசு தொடுத்த வழக்கால் பதவி விலகினார். பின்னர் சிறை சென்றார்.

எனினும், தேசிய கொடியை ஏற்றவே தாம் பேரணி நடத்தியதாகவும் சோனியா காந்திக்கு தேசிய கொடியின் மதிப்பு விளங்காததால் தன்னை சிறையிட அவர் சதிசெய்வதாகவும் உமாபாரதி கூச்சலிட்டார். முதல்வர் பதவியை விட்டு விலகி கர்நாடக நீதிமன்றத்தில் சரணடைய அவர் நீண்ட ரயில் பயணத்தை பெரும் ஆரவாரத்துடன் மேற்கொண்டார். வழிநெடுகிலும் பி.ஜே.பி. தொண்டர்கள் திரண்டு அவருக்கு உற்சாகமளித்தனர்.

இதைக் கண்டு கர்நாடகாவின் காங்கிரஸ் அரசு மிரண்டு போனது. அம்மாநிலத்தில் ஹர்த்தாலும் நடந்தது. வேறுவழியின்றி கர்நாடக அரசு வழக்கை வாபஸ் பெற்றது.

இதற்கிடையில் இந்த நிகழ்வுகளால் பி.ஜே.பிக்குள் உமாபாரதியின் தனிப்பட்ட செல்வாக்கு அதிகரித்து வந்ததை மூத்த தலைவர்கள் கூட உணர்ந்தனர். ஒரு காந்தி — நேரு குடும்பத்தை நம்பிய காங்கிரஸ் கட்சியை போலன்றி பி.ஜே.பியானது அத்தீவிர மதவெறி என்ற ஒரே அம்சத்தை கொண்டு வளர்ந்து, வாழ்ந்துவரும் கட்சியாகும். இதனால் சோனியா போன்ற ஒற்றைத் தலைவர் கட்சி அல்ல அது. அதுவும் தேர்தலில் தோற்று ஆட்சி இழந்து வாஜ்பாய் செல்வாக்கு சரிந்துவரும் நிலையில் கட்சி புதிய தலைவரை தேடும் கட்டத்தில் இருக்கும்போது உமாபாரதி போன்ற பெண், அதுவும் காவியுடுத்தவர் முன்னிலைக்கு வருவது அத்வானிக்கு கூட பெரும் அச்சுறுத்தலாகும்.

இதனால் பெரும்பாலான மூத்த தலைவர்கள் உமாபாரதியின் ரயில் பயணத்தில் பங்கு கொள்ளவில்லை. ஆனால் தொண்டர்களோ உற்சாகத்துடன் திரண்டனர். கர்நாடக அரசு வழக்கை வாபஸ் பெற்றதால் உமாபாரதி கர்நாடக சிறையிலிருந்து வெளிவந்தார். நீதி கேட்டு அவர் யாத்திரை ஒன்றை தொடங்கினார். அதற்கும் தொண்டர்கள் திரண்டனரே தவிர தலைவர்கள் பெரிதாக கலந்து சிறப்பிக்கவில்லை. இது உமாபாரதிக்கு ஆத்திர மூட்டியது.

கட்சித்தலைவர் நாயுடுவை அவர் தாக்கிப் பேசினார், பிறகு அரசியலைத் துறந்து சந்நியாசம் போவதாக அறிவித்தார். ஒருவாறு தலைவர்கள் அவரை சாந்தப்படுத்தினர். விஷயம் அத்துடன் முடிந்தது என்றே பலரும் கருதினர். எனினும், தன்னை மீண்டும் மத்திய பிரதேச முதல்வராக்கும்படி கோரியதை அத்வானி ஏற்கவில்லை.

அத்வானி, உமாபாரதி இருவருமே ஒரே சித்தாந்தம் உடையவர்கள் என்றாலும் தனது தலைமைக்கு உமாபாரதி அச்சுறுத்தலாவதை அத்வானி கண்டுகொண்டார். இருவருமே பாபர் மசூதி வழக்கில் நேரடியாக குற்றஞ் சாட்டப்பட்டவர்கள். வாஜ்பாய் பி.ஜே.பி.யின் மிதவாதி என்றால் அத்வானி தீவிரவாதி, உமா பாரதியோ அதிதீவிரவாதி. தனது அதிரடிபேச்சுக்கலால் ஊடகங்களில் பிரபலமடைந்தவர். சோனியா காந்தி பிரதமரானால் மொட்டை அடிப்பேன்; முதல்வர் பதவியை துறப்பேன் என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் கடந்த வாரம் நடந்த கூட்டத்தில் தன்னை இழிவுபடுத்தும் தலைவர்கள் மீது நடவடிக்கை எடுக்க உமாபாரதி கோரினார். தலைவர் அத்வானியோ இந்த விடயம் ஏற்கனவே விவாதிக்கப்பட்டு முடிவு காணப்பட்டது, எனவே, மீண்டும் விவாதிக்கப்படமுடியாது என்றார்.

இதனால் கோபமுற்ற உமாபாரதி கூட்டத்தைவிட்டு வெளிநடப்பு செய்தார். கமராக்கள் முன்னிலையில் அத்வானியை கைநீட்டி உமாபாரதி பேசியது பெரும் அவமானமாகியது கட்சிக்கு. உடனடியாக அவர் கட்சியை விட்டு வெளியேற்றப்பட்டார். அவர் மக்கள் செல்வாக்குள்ள தலைவர்தான் என்றாலும் அவரது வெளியேற்றம் கட்சியை பெரிதாக பாதிக்காது. ஏனெனில், பி.ஜே.பி இப்போது நன்கு வளர்ந்துவிட்ட ஒரு கட்சி.

எனவே, தனிப்பட்ட ஒரு தலைவரால் கட்சியின் வாக்குகளை உடைக்க முடியாது. உத்தரப்பிரதேச முதல்வராக இருந்த கல்யாண் சிங்கும் இவ்வாறே கட்சியை விட்டு ஒரு முறை வெளியேற்றப்பட்டார். சக்திவாய்ந்த தலித் தலைவரான அவர் வேறுவழியின்றி மீண்டும் கட்சியில் சேர்ந்துள்ளார்.

எனினும், இந்நிகழ்வுகள் ஆட்சியை இழந்த பி.ஜே.பிக்குள் இருக்கும் புகைச்சலை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளன. கட்சி மீண்டும் இந்துமத வெறிக்கு திரும்ப திட்டமிடும் வேளையில் தீவிர இந்துவாதியான உமாபாரதி அந்த உபாயத்தை செயற்படுத்த சிறப்பாக உபயோகப்பட்டிருப்பார். அந்த வாய்ப்பை கட்சி இழந்துள்ளது. அவ்வளவே.

இது இவ்வாறிருக்க கடந்த வாரம் மற்றொரு திருப்பமாக காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜெயேந்திர சரஸ்வதிக் குருக்கள் முக்கிய கொலை வழக்கொன்றில் கைது செய்யப்பட்டார்.

காஞ்சி வரதராஜர் கோவில் மேலாளர் கொலையில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்காததை கண்டித்து தி.மு.க. மற்றும் நேசக்கட்சிகள் போராட்டம் நடத்தி வந்தன. கடைசியாக உண்ணாவிரதமும் அறிவிக்கப்பட்டது. ஜெயலலிதா பிராமண ஆதரவாளர் என்பதால் காஞ்சி சங்கராச்சியாரை காப்பாற்றுவதாக கூறப்பட்டது. இந்நிலையில் கடந்த வாரம் நள்ளிரவில் அவர் தமிழக பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். இதை எதிர்த்து விஷ்வ ஹிந்து பரிஷத் அடுத்தநாள் பாந்த் நடத்தியது. எனினும், இவருக்கு எதிராக பலமான ஆதாரங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. இதனால் இந்த விவகாரத்தை கொண்டு ஒரு அரசியல் போராட்டம் நடத்த பி.ஜே.பிக்கு முடியுமா என்பது தெரியவில்லை. வழக்கு, நீதிமன்றில் இருப்பது மற்றொரு சிக்கல்.

பிராமண அனுதாபியான தமிழக முதல்வரின் இந்த அதிரடிப்பாய்ச்சல் பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. பி.ஜே.பியிடமிருந்து தான் விலகிவிட்டதை காங்கிரஸுக்கு காட்டும் முயற்சியா, தி.மு.க வின் போராட்டத்தால் இறங்கி வந்தாரா என கேள்விகள் எழுகின்றன. எனினும், இவ்வாறான அதிரடிப்பாச்சல்கள் ஜெயலலிதாவிற்கு புதிதல்ல. கருணாநிதியை நள்ளிரவில் கைதுசெய்தவரே அவர். மேலும் சதுர்வேதி என்ற மற்றொரு பாலியல் சாமியாரை கைதுசெய்து பரபரப்பை ஏற்படுத்திவிட்டு அந்தப்பின்னணியில் சூட்டோடுசூடாக சங்கராச்சாமியாரை கைதுசெய்துள்ளார். தான் இந்து வெறியரல்லர் என்று காட்ட ஆடும் நாடகமோ எனவும் ஆய்வாளர்கள் ஐயுறுகின்றனர்.

எஸ்.சுரேந்திரஜித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் விவகார..........

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகையினால் முஸ்லிம் விவகார அமைச்சு விடயத்தில் தன்னால் இப்போதைக்கு எந்த முடிவையும் மேற்கொள்ள முடியாது என அவர் கைவிரித்துவிட்டார்.

உண்மையில் ஜனாதிபதியின் இந்த நிலைப்பாடு றிஷாத் அணியினருக்கு பலத்த அடியாக இருக்கின்றபோதிலும் முஸ்லிம் சமூகம் தொடர்பில் அவர் கொண்டிருக்கின்ற கொள்கை எத்தகையது என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

### குட்டக்குட்டக் குனியும் முஸ்லிம் தலைமைகள்

முஸ்லிம் அமைச்சர்களுக்குள் போட்டி நிலவுவதாலேயே முஸ்லிம் விவகார அமைச்சராக ஒருவரை நியமிக்க முடியாதிருப்பதாக ஜனாதிபதி கூறுவதை எந்தவொரு சராசரி மனிதனாலும் ஏற்றுக்கொள்ள முடியாது.

முஸ்லிம் சமூகத்தின் காதில் பூச்சுற்றும் கதையாகவே அவரது இக்கூற்று அமைந்துள்ளது.

தான் விரும்புகின்ற – பொருத்தமான ஒருவரிடம் முஸ்லிம் விவகார அமைச்சை ஒப்படைப்பதில் ஜனாதிபதி அவ்வளவு பெரிய பிரச்சினையை எதிர்நோக்கப்போவதில்லை.

குட்டக்குட்டக் குனியும் முஸ்லிம் அமைச்சர்களுள் ஒருவரை முஸ்லிம் விவகார அமைச்சராக நியமித்தால், ஏனையோர் அரசை விட்டு வெளியேறிவிடவா போகின்றனர். நிச்சயமாக இல்லை. முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை ஒட்டுமொத்தமாக அடகு வைத்துவிட்டு அமைச்சுப் பதவிகளுக்காகவும், அற்ப சலுகைகளுக்காகவும் பேரினவாத அரசுகளுக்கு சேவகம் செய்கின்ற முஸ்லிம் தலைவர்கள் தன்னை விட்டு ஒருபோதும் விலகிச் செல்ல மாட்டார்கள் என்பது நன்கு தெரிந்திருந்தும் ஜனாதிபதி இவ்வாறு கூறுவது கேலிக்கூத்தாகவே தெரிகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பதவிக்கு வந்து ஏழு மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் முஸ்லிம் விவகார அமைச்சு விடயத்தில் ஜனாதிபதி அசட்டையாக இருந்து வருவதானது முஸ்லிம்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளபோதிலும், முஸ்லிம் அமைச்சர்கள் அதுவிடயத்தில் சற்றும் அக்கறையில்லாதவர்களாகவே இருந்து வருகின்றனர்.

முஸ்லிம் விவகார அமைச்சு விடயத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் மீதே ஜனாதிபதி பழிசுமத்தியுள்ளார். இது தொடர்பில் அவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருப்பது ஏன்?

உண்மையில் ஜனாதிபதி கூறுவது போன்று முஸ்லிம் அமைச்சர்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொள்வதுதான் முஸ்லிம் விவகார அமைச்சுக்குத் தடையாக இருக்குமானால், அவர்கள் தங்களுக்குள் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரமுடியாதா? சுழற்சி முறையிலாவது அந்த அமைச்சை வருடம் ஒருவர் என்ற அடிப்படையில் நிர்வகிப்பதற்கு ஏன் முன்வரமுடியாது?

**அஸ்லம் எஸ்.மௌலானா**

எனவே, முஸ்லிம் விவகார அமைச்சு விடயத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஜனாதிபதியை சந்தித்து தமக்குள் ஒருவரை அந்த அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சராக நியமிக்க அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் முஸ்லிம் விவகார அமைச்சை இல்லாதொழித்த ஜனாதிபதியின் சதிக்கு முஸ்லிம் அமைச்சர்களும் துணைபோனதாகவே சமூகம் கருதும்.

# சங்கராச்சாரியார் கைது....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மடத்தின் பொறுப்பில் மாகாபெரியவர் இருந்தபோதே ஜெயேந்திரருக்கும் சங்கரராமனுக்கும் இடையில் முரண்பாடுகள் ஆரம்பித்துவிட்டன. மடத்தை விட்டு ஜெயேந்திரர் கோபித்துக் கொண்டு சென்றபோது அவரை விமர்சித்தவர் சங்கரராமன். ''ஆன்மீகத்தில் ஈடுபடுபவர்கள் சபலத்திற்கு இடம்கொடுக்கக் கூடாது'' என்று காட்டமாகக் கண்டித்துப் பேசினார்.

இருவரிடையேயும் அப்போதிருந்தே முரண்பாடுகள் வளர ஆரம்பித்துவிட்டன. ஜெயேந்திரர் மடத்தில் பதவிக்கு வந்ததும் சங்கரராமன் ஓரங்கட்டப்பட்டார். அதற்கும் அவர் எதிர்ப்புத் தெரிவித்துக் கண்டனங்களையும் கூறி வந்தார்.

வெளிநாட்டில் வசிக்கும் அன்பர் ஒருவரிடம் இருந்து மடத்துக்கு கோடிக் கணக்கான ரூபாய் அன்பளிப்புக் கிடைக்க இருந்த சமயம், மடத்தில் ஊழல்கள் இடம்பெறுகின்றன என்றும் அதனால் பணத்தை அனுப்பவேண்டாம் என்றும் தெரிவித்து அந்த அன்பருக்கு சங்கரராமன் கடிதம் எழுதியுள்ளார். இதனால் அந்தப் பணம் மடத்துக்குக் கிடைக்காமலேயே போய் விட்டது.

இது தவிர, சங்கராச்சாரியார் சீனாவுக்கு விஜயம் செய்ய இருந்த சமயம் அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். இந்து தர்மப்படி பிரமச்சாரியாக இருந்து கொண்டு ஆன்மீகத் தொண்டு செய்பவர்கள் வெளிநாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்யக்கூடாது என்று அவர் தனது மனுவில் தெரிவித்திருந்தார். இதனால் சங்கராச்சாரியாரின் சீன விஜயம் நின்று போனது.

இவையெல்லாமும்கூட ஜெயேந்திரருக்கும் சங்கரராமனுக்கும் இடையிலான பகைமை வளரக் காரணம் என்கிறார்கள். தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்த சங்கரராமனைத் தீர்த்துக்கட்டுவதற்கு ஜெயேந்திரர் முடிவு செய்வதற்கு இவையே காரணம் என்கிறார்கள் பொலிஸார்.

ஆனால், ஜெயேந்திரர் கைதுக்கு தனிப்பட்ட கொலையோ வேறு விவகாரங்களோ காரணங்கள் இல்லை என்கிறன்றன சங்கர மடம் வட்டாரங்கள்.

முன்னைய மடாதிபதிகள் போன்று ஜெயேந்திரர் ஆன்மீகத்துடன் மட்டும் நின்றுவிடாதது அவர் மீதான பழி தீர்த்தலுக்குக் காரணம் என்றும் சொல்லப்படுகின்றது. மகாபெரியவர் வரைக்கும் சங்கர மடம் ஆன்மீகப் பணிகள் மற்றும் வேதங்களைக் கற்றுக்கொடுப்பது என்றுதானுண்டுதன்பாடுண்டு என்றே இயங்கி வந்தது.

ஜெயேந்திரர் பொறுப்பேற்றதும் மடத்தின் சார்பில் பல பொதுப் பணிகளிலும் மடம் ஈடுபாடு காட்ட ஆரம்பித்தது. கல்லூரிகள் மருத்துவமனைகள் போன்றன மடத்தின் சார்பில் ஆரம்பிக்கப்பட்டன.

தலித்துக்கள் விடயத்திலும் ஜெயேந்திரர் மென்போக்கையே கடைப்பிடித்தார். அதிலும் ஒருபடி மேலே போனார் என்று சொன்னாலும் மிகையில்லை. இன்றை காலகட்டத்தில் அனைவரையும் அரவணைத்துச் செல்வது இந்து மதத்தின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது என்று அவர் கருதினார். இவையும் ஜெயேந்திரர் மீதான நடவடிக்கைகளின் பின்னணிக் காரணங்களாக இருக்கலாம் என்று கூறுவோரும் உள்ளனர்.

அரசியல் காரணங்களுக்கான கைது இது என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர். ஜெயலலிதா தனது 'இமேஜை' வளர்த்துக் கொள்வதற்காக சங்கராச்சாரியார் மீது கை வைத்து விட்டார் என்கிறார்கள் அவர்கள். அதற்குத் தகுந்தாற் போல சட்டமன்றத்தில் கைது குறித்து விளக்கமளித்த முதல்வர் ஜெயலலிதா, ''சட்டத்தின் முன்னால் எல்லோரும் சமன் என்பதை இதன் மூலம் தமிழக அரசு நிரூபித்துள்ளது'' என்று கூறினார்.

சங்கரராமன் கொலையில் ஜெயேந்திரருக்கு தொடர்புகள் உண்டு என்று பத்திரிகைகளில் ஏற்கனவே செய்திகள் வந்துகொண்டிருந்தன. பொலிஸாரின் விசாரணையில் சங்கராச்சாரியார் குறி வைக்கப்படுகிறார் என்று அறிந்த தி.மு.க. அது பற்றி தமிழக அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான சமிக்ஞைகள் தெரிய ஆரம்பித்ததும் முந்திக்கொண்டது தமிழக அரசு. எதிர்க்கட்சிகள் அழுத்தம் கொடுத்துத்தான் சங்கராச்சாரியார் கைது செய்யப்பட்டார் என்ற நிலை வராமல் பார்த்துக் கொள்வதில் ஜெயலலிதா ஆர்வமாக இருந்தார் என்கின்றன கோட்டை வட்டாரங்கள்.

வரும் வாரங்களிலும் இந்தச் சர்ச்சை சூடாகவே இருக்கும் என்பது மட்டுமே இப்போதைக்கு உண்மை.

## சொற்சிலம்பம் போட்டி இல.135

சொற்சிலம்பம் 135 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் தினம் நவம்பர் 28ஆம் திகதி ஆகும். விடைகள் டிசம்பர் 05ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 12ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.133க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும், இரண்டாவது பரிசாக 150 ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்பவேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.133

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 வி | 2 ர | 3 ச | ம் | ■ | 4 ச | 5 மா | 6 தி |
| 7 வா | ச | ம் | ■ | 8 ச | ந் | த | ரி |
| 9 த | ம் | ப | 10 தி | ■ | 11 த | ம் | ■ |
| ம் | ■ | 12 வ | ரு | 13 ம | தி | ■ | 14 க |
| ■ | 15 வி | ம் | ம | ல் | ■ | 16 க | ரு |
| 17 ப | லா | ■ | 18 க | லி | 19 கா | ல | ம் |
| 20 த | ங் | 21 க | ள் | ■ | 22 த | ப் | பு |
| 23 வி | கு | தி | ■ | 24 அ | ம் | பு | லி |

## சொற்சிலம்பம் போட்டி இல.135

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | ■ | 5 |
| 6 | | | ■ | | ■ | 7 | |
| 8 | | ■ | 9 | | 10 | | ■ |
| | ■ | 11 | | | | ■ | 12 |
| 13 | 14 | ■ | 15 | | | 16 | |
| ■ | 17 | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | ■ |
| 22 | | | | | ■ | 23 | |

## சொற்சிலம்பம் போட்டி இல.135

**இடமிருந்து வலம்**

1. பார்த்தனுக்குப் பரந்தாமன் போர்க்களத்தில் உபதேசித்தது.
6. அரிசியைத் தீட்ட வருவது.
7. ஒரு தானிய வகை.
8. தாவரம் முளைப்பது இதிலிருந்து.
9. ஒலி.
11. அழகுத் தேவதை.
13. சமிக்ஞை.
15. ஞாபகம் கொள்ளல்.
17. வாய்ப்பான ஒழுங்குகள் / ஏற்பாடுகள்.
19. தலைவன் மனம் கவர்ந்தவள்.
20. ஒரு நட்சத்திரம்.
21. வித்தை / அறிவு / படிப்பு.
22. ஒன்றுகூடிப் பேசுதல்
23. வரி / கப்பம்.

**மேலிருந்து கீழ்**

1. அரசியல் வாதிக்கு மிகுந்து காணப்படுவது.
2. பாடல்
3. காயத்தின் அடையாளம் / மறு.
4. ஸ்தோத்திரம் / பாடல்.
5. ஓடு கொண்ட உயிரினம்.
7. ஓர் ஏவுகணை ரகம்.
9. மூலஸ்தானம் / பெரியோரின் இடம்.
10. நிறுத்துதல்
12. வெற்றிக்கான முதல்படி.
14. தற்போது கரத்தில் இருப்பது.
16. சிரசில் எழுதப்பட்டது இது தான் என்பர்.
18. ஒரு நெல் / அரிசி வகை.
20. தடவ / மெதுவாகத் தேய்க்க.
21. பாணம்.

## சொற்சிலம்பம்-132 பரிசு பெறுவோர்.

1. திருமதி.எல்.அமலவதி பெர்னாண்டோ, 3ஆம் வட்டாரம், பேசாலை.
2. எம்.ராம மூர்த்தி, ஊவா பென்ஹெட்—ஏ.பி.சீ, வெலிமடை—90200.
3. நா. அச்சுதன், இல.389, திருநகர், யோகபுரம், கிளிநொச்சி.

### பாராட்டுப் பெறுவோர்

1. கே.எம்.எம்.கலீல், குளியாப்பிட்டிய வீதி, ஹொறம்பாவ.
2. த.சுதர்சினி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
3. வ.ஆ. அதிரூபசிங்கம், அம்மன்கோவிலடி, வல்வெட்டித்துறை.
4. இ.சுதர்சினி, ''மணியகம்'', வாசிகசாலை வீதி, கொம்மாந்துறை, செங்கலடி.
5. செல்வி.பவானி சின்னப்பன், 48/15 B, டவுன், அட்டன்.
6. கலீல் தௌபீக், புஹாரி சந்தி, கிண்ணியா— 05.
7. திருமதி.கி.மா.நவம், 36, பழைய கல்முனை வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
8. க.நிரஞ்சன், 22, பிரதிபிம்பராம வீதி, களுபோவில.
9. திருமதி. ரீ.பரமேஸ்வரன், J3, அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு—05.
10. ந.நவலோகன், 288/5, இராமநாதபுரம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் வேட்டை



நான்கு நாள் விடுமுறையில் வீட்டுக்குச் செல்லும் திட்டத்தில் இருந்ததால், லூசியா தனது அலுவலக வேலையில் மிகவும் பரபரப்பாக இருந்தாள்.

15 நாட்களுக்கு ஒருமுறை வீட்டுக்குச் சென்று வரும் லூசியா இம்முறை வேலைப் பழு காரணமாக ஒருமாதமளவில் விடுமுறை பெறவில்லை. அதன் காரணமாக மொத்தமாகச் சேர்த்து மாத இறுதியில் நான்குநாள் விடுமுறையில் செல்லத்திட்டமிட்டாள். தனது மேலதிகாரியிடம் அதற்காக அனுமதியும் பெற்றுக்கொண்டாள்.

அவசர அவசரமாக தனது அலுவலக வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சமயம், அவளது மேலதிகாரி ஜோன் முக்கியமான பைல்களை எடுத்துக்கொண்டு தனது அறைக்குள் வருமாறு லூசியாவை அழைத்தார். எல்லா பைல்களையும் சரிபார்த்த பின் ''லூசியா நீ நாளை வீட்டுக்குப்போகின்றாயா?'' எனக் கேட்டார் ஜோன்.

''ஆமா சேர்'' எனத் தலையசைத்தாள்.

''அவசரமாகப் போகத்தான் வேண்டுமா?'' எனக் கேட்டார்.

''ஆமா, சேர் குழந்தைகளையும், கணவனையும் பார்த்து ஒருமாதமாகிறது. அதுக்காக உங்களிடம் ஏற்கனவே நான்கு நாள் விடுமுறைக்காக அனுமதியும் பெற்றுவிட்டேனே'' — என்றாள்.

''நான்கு நாட்கள் அல்ல ஆறு நாட்கள் என்றாலும் பரவாயில்லை. சந்தோசமாக வீட்டில் இருந்து உன் கணவன், குழந்தைகள் எல்லோரையும் பார்த்துவிட்டு வா. அதுக்கு முதல் நான் உன்னோடு ஒரு முக்கியமான விடயம் பற்றிப் பேச வேண்டும். இதுவரை அதுக்கு நேரம் இருக்கவில்லை. இன்றைக்கும் நான் பிசியாக இருப்பதால் முடியாது. ஆகவே நாளைக்கு நீ வீட்டுக்குப்போக முன் என்னைச் சந்திக்க வேண்டும்'' என்றார்.

''சேர் நான் எத்தனை மணிக்கு உங்களைச் சந்திக்கலாம். எங்கே வர வேண்டும்?''

''நாளை எத்தனை மணிக்குப் போகிறாய்?''

''பின்னேரம் ஆறு மணிக்கு''

''அப்படியானால் நீ பஸ் ஸ்டாப்பில் நில். நான் அங்கு வருகிறேன்''

'என்ன விடயமாக இருக்கும்' என மண்டையைக் குடைந்தவாறே லூசியா அவரின் அறையை விட்டு வெளியேறினாள்.

மறுநாள் மாலை லூசியா தனது வீட்டுக்குச் செல்வதற்காக பஸ் ஸ்டொப்பில் காத்துக்கொண்டு நின்றாள்.

மாலை 6.15 மணியளவில் ஜோன் அங்கு வந்து சேர்ந்தார். இங்கே நின்று பேச முடியாது, ரெஸ்ரோரன்ட் ஒன்றுக்குச் சென்று தேநீர் ஏதும் அருந்திக்கொண்டு பேசுவோம் என்றார். லூசியாவைத் தனது காரில் ஏற்றி ரெஸ்ரோரன்ட் ஒன்றை நோக்கிச் சென்றார்.

தேநீர் அருந்திக்கொண்டு இருவரும் பேச அமர்ந்தனர். ஜோன் தனது சோகக் கதையை அவிழ்த்துவிட்டார்.

''நான் திருமணம் முடித்து 5 வருடங்களாகிவிட்டன. இருப்பினும் என் வாழ்வில் ஒரு துளி கூட சந்தோஷமில்லை. என் பெண்டாட்டி மிகவும் சந்தேகம் பிடித்தவள். கோபக்காரி. இதன் காரணமாக எங்கள் இருவருக்கும் அடிக்கடி சண்டை வரும்.




''இதனால் நான் மிகவும் மனமுடைந்திருக்கிறேன். இந்த வேதனையை யாரிடமாவது கூறி என் மனச்சுமைகளை இறக்கி வைக்க நான் விரும்பினேன். உன்னை எனக்கு மிகவும் பிடித்துப்போனதால் தான் நான் இதனை உன்னிடம் சொல்கிறேன்'' — என்றார்.

தொடர்ந்தும் ஜோன் தனது குடும்பப் பிரச்சினை பற்றிச் சொல்லிக்கொண்டே போனார். ஜோனின் கதை மிகவும் பரிதாபகரமாக இருந்தது. ஜோனின் கதையில் மூழ்கியிருந்ததால் லூசியாவுக்கு நேரம் போனதே தெரியவில்லை. நேரத்தைப் பார்த்தாள். நேரம் இரவு 9மணி ஆகியிருந்தது. இப்போது அவளால் வீட்டுக்குச்செல்ல முடியாது. ஹொஸ்டலுக்கும் செல்ல முடியாது.

''பயப்படாதே இந்த ரெஸ்ரோரன்டில் இரவுக்கு மட்டும் அறை எடுத்துத் தங்கிவிட்டு காலையில் போய்விடலாம். நான் உன்னோடு நிறையப் பேச வேண்டும்''

''நான் எப்படி உங்களோடு....?'' இழுத்தாள் லூசியா.

''பயப்படாதே'' தனித்தனி ரூம் எடுத்துத் தங்குவோம்'' — என்றார்.

இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்ட பின் இருவரும் பியர் அருந்தினர். நேரம் பதினொரு மணியைத் தாண்டியிருந்தது.

''நீங்கள் உங்கள் அறைக்குப்போகவில்லையா?'' லூசியா கேட்டாள்.

''ரூம் எல்லாம் 'புக்'காகிவிட்டது. அதனால்இங்கயே தூங்கப் போகிறேன் என்றார் ஜோன்.

ஜோன் எதற்கோ முயற்சிக்கின்றார்என்பதை லூசியா ஊகித்துக் கொண்டாள்.

மெல்லிய விளக்கொளியில்ஜோனுக்கு அவள் ஒரு தேவதையாய்த் தெரிந்தாள். ஜோன் பீர் போதையில் இருந்ததால் அவனுக்கு அது தேவைப்பட்டது. லூசியா மூலம் தனது இச்சையை அடக்க விரும்பினான்.

அவனது பிடியில் இருந்து விடுபட லூசியா முதலில் விரும்பியபோதிலும், ஓரிரு நிமிடங்களில் அவள் தானாகவே அடங்கிப் போனாள்.

இதனைத் தொடர்ந்து இருவருக்குமிடையில் காதல் மலரத் தொடங்கியது. லூசியா அவளது கணவனுக்குத் தெரியாமல் ஜோன் அழைக்கும்போதெல்லாம் அவனுடன் சென்று வந்தாள்.

அது ஆறு மாதமாகத் தொடர்ந்தது. திடீரென ஒரு நாள் ஜோன் கத்திக்குத்துக்கு இலக்காகி மரணமானான் என்ற செய்தி பரவியது.

உளவுத்துறையினர் விசாரணையை முடுக்கிவிட்டனர். தொடர்ந்து மூன்று மாதங்களாக விசாரணை நடத்தியும் எவரும் அகப்படவில்லை.

திடீரென் மீண்டும் ஒருமுறை ஜோனின் அலுவலகம் சோதனையிடப்பட்டது.

அப்பொழுது அந்த அலுவலகத்தில் வேலை செய்த லூசியாவின் கையில் தொங்கிய ஒரு மெல்லிய தங்க வளையல் ஒன்று உளவுத்துறையினரின் கவனத்தை ஈர்த்தது.

அதேபோன்ற ஒரு வளையல் பிணத்துக் கருகில் கண்டெடுக்கப்பட்டதே இதற்குக் காரணம். இது தொடர்பாக அலுவலகத்தில் வேலை செய்த மற்றுமொரு பெண் விசாரிக்கப்பட்டாள்.

ஏற்கனவே லூசியா இரண்டு வளையல்கள் அணிந்திருந்ததாகவும், அண்மையில் அவற்றில் ஒன்று தொலைந்து விட்டதாகவும் லூசியாவே தன்னிடம் கூறியதாகவும் அப் பெண் கூறினாள்.

அடுத்து லூசியா விசாரிக்கப்பட்டாள். முதலில் இக்கொலை பற்றி எதுவும் தெரியாதென அவள் கூறியபோதிலும் அந்த வளையலை உளவுத்துறையினர் கண்டுபிடித்ததும் அதிர்ந்து போனாள்.

இறுதியில் உண்மையைக் கூறினாள்.

''நானும் ஜோனும் ஆறு மாதங்களாக திருட்டுத்தனமாகக் காதலித்து வந்தோம். இறுதியில் ஜோன் என்னை விட்டு விலகிப் போனான். என்னை அனுபவித்து முடிந்ததும் என்னை அவன் வெறுத்தொதுக்கிய போது நான் மிகவும் துன்பமடைந்தேன்.''

இதன் காரணத்தால் நான் ஜோனை கொலை செய்ய எண்ணினேன். அதன்படி ஜோன் ஒரு நாள் நிறை போதையில் இருந்த வேளையில் காரில் வைத்து நான் கத்தியால் குத்திக் கொன்றேன்'' — என்றாள்.

1978 ஆம் ஆண்டு நியூயோர்க் நீதிமன்றம் லூசியாவுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது.

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங்ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | எம்.ரி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை 7.55 அன்பு மடல் | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா 7.55 அன்பு மடல் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஆங்கில காட்டூன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | ஹொலிவூட் மூவி சிறுவர் | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கொமடி டைம் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | குட்டி சுட்டி | ஞாயிறு சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சொய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப்பாட்டு | நம்ம நேரம் | கொண்டாட்டம் | களம் | சப்தஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கானங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டாப்10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மூமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சண்டே சமையல் | மங்கையர் நேரம் | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள் (எம்.ரி.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 1.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.00 | (காதல் காவியம்) | (அதிரடி) | (நகைச்சுவை) | (கிளசிக்) | (குடும்பம்) | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 2.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்திதிரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.00 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 3.30 | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | சக்தி திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் | வாரஇறுதிநாள் திரைப்படம் |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மை டியர் பூதம் | மை டியர் பூதம் | சக்தி திரைப்படம் | விக்கிரமாதித்தன் | சூப்பர் 10 பாடல்கள் |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி—மேன் | கிட்ஸ் சோன் | தமிழ் கார்ட்டூன் | தமிழ் காட்டூன் | விக்கிரமாதித்தன் அன்பு மடல் 4.55 | நினைவுகள் |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் காட்சிகள் | என்றும் கலாட்டா | நகைச்சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 5.30 | இசைத் தென்றல் | பாடல்கள் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | நகைச்சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 6.00 | களம் | இளைய கானம் | திமி தக்க தா | இளந்தளிர் 5.45 | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிக்கட் | புத்தம் புதிசு | மின்னல் |
| 6.30 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | மனைவி இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 | திமி தக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | மியூசிக்கல் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | மியூசிக்கல் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையைப் போலவே களத்தில் புலி! வெற்றிகளைக் குவிக்கும் லைலா அலி!!

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா?; தாய் எட்டடி பாய்ந்ததால் குட்டி பதினாறு அடி பாயும்; விளையும் பயிரை முளையிலேயே தெரியும். இந்தப் பழமொழிகள் எல்லாம் நிச்சயம் இந்த பெண் புலிக்குப் பொருந்தும். பங்கேற்ற அனைத்துப் போட்டிகளிலும்



தோல்வியைச் சந்திக்காத வீராங்கனை இவர். தந்தையைப் போலவே களத்தில் புலியாக இருக்கும் இவர், குத்துச்சண்டை உலகில் தற்போது 'நம்பர் வன்'. அவர்தான் அமெரிக்காவின் பிரபல குத்துச்சண்டை வீராங்கனை லைலா அலி. முன்னாள் பிரபல குத்துச்சண்டை வீரரான முகமது அலியின் மகள்.

தனது இளம் வயதிலேயே சர்வதேச மகளிர் குத்துச்சண்டை கழகத்தின் 'சூப்பர் மிடில்வெயிட்' சாம்பியன், சர்வதேச மகளிர் குத்துச்சண்டை சம்மேளனத்தின் 'சூப்பர் மிடில்வெயிட்' சாம்பியன் போன்ற பட்டங்களை அள்ளிச் சென்றார். இத்தனைக்கும் இவர் தொழில்முறை குத்துச்சண்டை உலகில் நுழைந்ததென்னவோ 1999இல் தான். இருப்பினும் குறுகிய காலத்திலேயே வானளாவிய புகழை இவர் பெற்றார். சீரிய பயிற்சி, எதையும் செய்து முடிக்கும் வைராக்கியம் தந்தையின் அபாரப் பயிற்சி போன்றவற்றால் முன்னணி குத்துச்சண்டை வீராங்கனைகளுள் ஒருவராக உருவெடுத்தார் லைலா அலி.

தந்தை பங்குகொள்ளும் குத்துச்சண்டைப் போட்டிகளின் போதும் தந்தை பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் போதும் அவருடனேயே இருந்ததால் இவருக்கும் குத்துச்சண்டை மீது மோகம் வந்துவிட்டது போலும். பிறகென்ன குத்துச்சண்டைப் பயிற்சியைத் தொடங்கி விட்டார். தந்தையின் மேற்பார்வையிலும், பயிற்சியாளர் கொடுத்த தொழில் நுணுக்கங்களையும் கற்றுக்கொண்டு திறமையான வீராங்கனையாக உருவானார்.

1999இல் தொழில்முறை குத்துச்சண்டை வீராங்கனையாக தன்னைப் பதிவு செய்து கொண்டார் லைலா. தனது அபரா குத்துகளால் பெற்ற வெற்றியையடுத்து, தனது போட்டிகளுக்கு ரசிகர்கள் பட்டாளத்தையே வரவழைத்தார் இவர். 1999 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் குத்துச்சண்டை வீராங்கனை ஏப்ரல் பௌலருடன் தனது முதல் போட்டியில் மோதினார். 31 விநாடிகளில் பௌலரை வீழ்த்தி தனது முதல் முத்திரை வெற்றியைப் பதித்தார். இதுவரை அவர் பங்கேற்ற 18 போட்டிகளிலும் வெற்றி அவருக்கே. முதல் வெற்றியைத் தொடர்ந்து நவம்பரில் நடந்தேறிய 2ஆவது போட்டியில் ஷாடினா பென்னிபேக்கரை வீழ்த்தினார். இந்தப் போட்டியில் பென்னிபேக்கரின் உதடு கிழிந்தது. 2000ஆம் ஆண்டில் 'சூப்பர் மிடில்வெயிட்' சாம்பியன் பட்டத்தையும் பெற்றார்.



தந்தை முகமது அலியுடன் லைலா அலி

இவருக்கு சோதனை உருவானது 2001ஆம் ஆண்டில்தான். முன்னாள் குத்துச்சண்டை சாம்பியன் ஜோ பிரேசியரின் மகள் ஜேக்கி பிரேசியர் உருவில் அந்த சோதனை வந்தது. லைலா அலியை வீழ்த்தியே தீருவேன் என்று சபதம் செய்துகொண்டு களத்தில் குதித்தார் ஜேக்கி பிரேசியர். 1971ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி முகமது அலியும், ஜோ பிரேசியரும் மோதினர். 30 ஆண்டுகளுக்குப் பின்னர் முகமது அலியின் மகள் லைலாவும், ஜோ பிரேசியரின் மகள் ஜேக்கியும் மோதுகின்றனர் என்றால் முக்கியத்துவம் வாய்ந்த போட்டிதானே. போட்டியின் முதல் 2 சுற்றுகளில் நெருக்குதலைத் தந்த ஜேக்கியை, அடுத்த 3 சுற்றுகளில் ஏராளமான குத்துகளைவிட்டு வீழ்த்தினார் லைலா. பின் 3 மாதங்கள் கழித்து மீண்டும் ஜேக்கியுடன் மோதினார் லைலா. இம்முறை போட்டி 8 சுற்றுகள் வரை நீடித்தது. 8 சுற்றுகள் வரை சென்றாலும் சோர்ந்து போகாத லைலா, இந்தப் போட்டியிலும் வெற்றிக் கனியைப் பறித்தார்.

2001 ஜூலையில் அவரது தோளில் ஏற்பட்ட காயம் காரணமாக சிறிது காலம் போட்டிகளிலிருந்து லைலா அலி விலகியிருந்தார். தோளில் அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட பின்னர் 2002இல் மீண்டும் களத்துக்குத் திரும்பினார் அவர். ஓகஸ்ட் மாதம் சுசெட் டெய்லரை வீழ்த்தி சர்வதேச குத்துச்சண்டை சங்க 'சூப்பர் மிடில்வெயிட்' சாம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டார். தொடர்ந்து 'ஐ.டபிள்யூ.பி.எவ்', 'டபிள்யூ.ஐ.பி.ஏ', 'சூப்பர் மிடில்வெட்' சாம்பியன் பட்டங்களையும் வென்றார். இந்த ஆண்டில் புகழின் உச்சாணிக் கொம்பில் லைலா ஏறியிருந்தார்.

2003, 2004 ஆம் ஆண்டுகளிலும் தனது திறமையை அவர் வெளிப்படுத்தி, தான் பெற்ற பட்டங்களைத் தக்கவைத்துக் கொண்டார். 2004ஆம் ஆண்டு ஜூலை 30இல்



கடைசியாக தனது 18 ஆவது போட்டியில் மோனிகாவை வென்று 'ஐ.டபிள்யூ.பி.எவ்' பட்டத்தை தக்கவைத்துக்கொண்டார். இனி தனது அடுத்தப் போட்டிக்காக தயாராகி வருகிறார் லைலா.

முரட்டுத்தனமாக தோற்றமளித்தாலும் மென்மையான இதயம் கொண்டவர் லைலா. இவரும், இவரது கணவர் ஜானியும் சேர்ந்து அமெரிக்காவில் லாப நோக்கற்ற இரு அமைப்புகளை நடத்தி வருகின்றனர். 'அப்சலூட் அவேர்னஸ் பவுண்டேஷன்', 'ரீச் பவுண்டேவுன்' என்ற பெயரில் இந்த அமைப்புகள் இயங்கி வருகின்றன. 'அப்சலூட் அவேர்னஸ் பவுண்டேஷன்' – விளையாட்டில் விருப்பமுள்ள இளைஞர்களுக்குத் தேவையான உதவிகள், பயிற்சிகள், அறிவுரைகளை வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது. 'ரீச் பவுண்டேஷன்' – இளைஞர்களுக்கான கல்வி, சுகாதாராம், சமூகத் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது. குத்துச்சண்டை போக மற்ற நேரங்களில் இந்த அமைப்புகளில் கவனம் செலுத்தி வருகிறார் இந்த வித்தியாசமான குத்துச்சண்டை வீராங்கனை.

## 'துஷ்ரா'வுடன் மீண்டும் களமிறங்குவார் இலங்கை சுழற்பந்துவீச்சாளர் முரளிதரன்

இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வீசிய 'துஷ்ரா' பந்துவீச்சு பெரிய சர்ச்சைகளை உண்டாக்கியது.



இதைக் காரணமாக வைத்து முரளிதரனை சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து தடை செய்வதற்கான முயற்சிகளும் ஒரு பக்கம் நடந்தன. இந்த நிலையில் யாரும் எதிர்பாராத வகையில், சர்வதேச கிரிக்கெட்டின் சுழற்பந்துவீச்சு முறையில் அதிரடியாக மாற்றங்கள் செய்யப்படவுள்ளன.

இதற்கான ஒப்புதல் கொடுக்கப்பட்டு விட்டதால், இனி சர்வதேச ஆட்டங்களில் முரளிதரன் 'துஷ்ரா' பந்துவீச்சு முறையில் பந்துவீச முடியும் என்று இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மகிழ்ச்சித் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள முறைப்படி சுழற்பந்து வீச்சாளர்களின் மணிக்கட்டு 10 டிகிரி வரை திரும்பலாம். ஆனால், முரளிதரனின் 'துஷ்ரா' பந்துவீச்சில் அவரின் மணிக்கட்டு 14 டிகிரி வரை திரும்புகிறது. மாற்றம் செய்யப்படவுள்ள விதிப்படி சுழற்பந்து வீச்சாளர்கள் 15 டிகிரிவரை மணிக்கட்டைத் திருப்பலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதேவேளை – ''இவ்வாறு மாற்றம் செய்யப்பட்டால் சர்வதேசக் கிரிக்கெட்டில் இனி நிறையப் பேர் முரளிதரன் வழியில் பந்து வீசுவார்கள்'' என முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் ஜெப்ரி பாய்கொட் குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்:–

''இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, முரளிதரனுக்கு நெருக்கமானவர்கள் கொடுத்த நெருக்கடி காரணமாகவே ஐ.சி.சி இந்த அவசர முடிவை எடுத்துள்ளது'' எனக் கூறியுள்ளார்.

எனினும் இது குறித்து அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் மெல்போர்னில் நடைபெறும் ஐ.சி.சி.யின் செயற்குழுக் கூட்டத்திலேயே இறுதி முடிவு அறிவிக்கப்படும். எனவே, முரளிதரனின் முக்கிய ஆயுதமான 'துஷ்ரா'விற்கு தடை நீங்குவது உறுதியாகி விட்டது.

## விளையாட்டுச் செய்திகள்

பிராங்



இளம் வீரர்கள் பங்கேற்கும் 'கோ கார்டிங் கார் ஓட்டப் பந்தயம்' கடந்தவாரம் மும்பையில் நடைபெற்றது. இப்போட்டியை இந்திய கிரிக்கெட் அணி வீரர் சச்சின் டெண்டுல்கர் ஆரம்பித்து வைத்தார். அதன்போது அவர் கார் ஓட்டி மகிழ்வதை படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பித்தன் பதில்கள்

*புவிதா — திருநெல்வேலி கிழக்கு*

**கேள்வி:** பித்தா! இன்றைய அரசியல் வாதிகள் பொதுநல வாதிகளா? சுயநலவாதிகளா?



**பதில்:** சுயநலம் மிகுந்த பொதுநலவாதிகள்.

*சி.அருண் — கிரான்*

**கேள்வி:** பித்தரே! எனது உறவினர் ஒருவர் வெளிநாடு செல்ல பலமுறை எத்தனித்தும் கைகூடுவதாக இல்லை. அதற்கு அவருக்கு அதிஷ்டம் இல்லை என்கிறார்கள் அவரது வீட்டார். இதுபற்றி உமது கருத்து என்ன?

**பதில்:** அதிஷ்டத்தில் கிஞ்சித்தும் நம்பிக்கை இல்லாதவன் நான். முயற்சி திருவினையாக்கும் என்பதை ஆழமாக நம்புகிறேன். சரி.. அவர்களது நம்பிக்கைப்படி பார்த்தாலும் அதிஷ்டம் என்பது எப்போதும் வருவதில்லை. ஏதோ ஒரு எதிர்பாராத நேரத்தில் தான் அதிஷ்டம் அடிக்கும். எனவே, உமது உறவினரை தொடர்ந்தும் முயற்சிக்கச் சொல்லும். திடீரென அதிஷ்டம் அடித்தாலும் அடிக்கும். இதற்காக அதிஷ்டம் இல்லை என்று நம்பிக்கை கொண்டு வீட்டிலே முடங்கிக் கிடந்தால் அதிஷ்டம் எப்போது அடிக்கும் என்பது தெரியாமல் போய்விடுமல்லவா....!

*ஆர். காயத்திரி — ஸ்கந்தபுரம்*

**கேள்வி:** தூக்கத்தில் உளறி உங்கள் மனைவியிடம் மாட்டிக்கொண்ட ஏதாவது அனுபவம் உண்டா?

**பதில்:** அதற்குச் சான்ஸே இல்லை... ஏனென்



றால், எனது மனைவி தூக்கத்தில் கும்பகர்ணனின் ஒன்றுவிட்ட சகோதரி. படுத்தால் மறுநாள் காலை வரை இடிவிழுந்தாலும் எழுந்திருக்கமாட்டாள்.

*ஏ.ஆர்.எம்.லாரிப் — லுகதெனிய*

**கேள்வி:** அன்புள்ள பித்தா! காதலிக்கும் போது இருவருக்கிடையில் சந்தேகம் வந்தால், பிற்காலத்தில் இருவரும் சந்தோஷமாக இருப்பார்கள் என்று கூறுகிறார்களே...! உண்மையா?

**பதில்:** சந்தேகக்கோடு அது சந்தோஷக்கேடு என்று சினிமாப் பாட்டே இருக்கிறதே... நீர் கேட்டதில்லையா?

*சுதா — உடையார்கட்டு*

**கேள்வி:** பித்தா! தினமும் கனவில் ஒரு கறுப்பன், கட்டையன் வந்துமிரட்டல் விடுகிறான் என்ன செய்வது?

**பதில்:** தூங்காமல் விழித்திருப்பது.....



*எம்.ஐ.அப்றோஸ் — மருதமுனை*

**கேள்வி:** பித்தரே! நாங்கள் எல்லாம் முட்டாள்களாகவும் — நீங்கள் மட்டும் புத்திசாலியாகவும் இருந்தால் எப்படி இருக்கும்?

**பதில்:** இப்போ மட்டும் என்னவாம். நான் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

*க.கிருஷ்ணகுமார் — உடையார்கட்டு தெற்கு*

**கேள்வி:** மனிதன் குரங்கில் இருந்து பிறந்தானா? அல்லது ஆதாம் — ஏவாளில் இருந்து உருவானானா?

**பதில்:** இந்தச் சிக்கலான கேள்வியில் இருந்து நான் தப்ப வேண்டுமானால் ஆதாம்— ஏவாளில் இருந்து என்றே வைத்துக் கொள்வோம். ஏனென்றால், நான் குரங்கிலிருந்து மனிதன் பிறந்தான் என்று சொன்னால் அடுத்தவாரம், குரங்கு எதிலிருந்து பிறந்தது என்று கேட்டு வைப்பீர்.. வேணாண்டா... சாமி.

*வி.வைஷ்ணவன் — நுணாவில்*

**கேள்வி:** கோவிச்சுக்காத பித்தா? நான் சரியான ரீயூப்லைட். எனக்கு ''ரண்டிலதான் ஒண்ண தொட வரியா'' என்ற பாடலில் அந்த ரண்டு எது என்று தெரியவில்லை. கொஞ்சம் சொல்லித்தருகிறீரா?

**பதில்:** யோவ்.. நீர்... ரீயூப்லைட் அல்ல... ஏனென்றால், ரீயூப்லைட் என்றால் சுவிச்சை போட்டு கொஞ்ச நேரத்தில் எரியும். மக்கு இதன் அர்த்தம் கொஞ்சநேர தாமதத்தின் பின் புரிந்திருந்தால் உம்மை ரியூப்லைட் என்று குறிப்பிடலாம். ஆனால், உமக்கு ஆக இரண்டும் எதுவென்று தெரியவே இல்லையே! எனவே, நீர் சுட்டுப் போன பல்ப்... சரி... விடயத்துக்கு வருவோம்.

அந்த இரண்டில என்றால் வேறு எதுவும் இல்லை... சும்மா... மனசைப் போட்டுக் குழப்பிக் கொண்டு அதாக இருக்குமோ.... இதாக இருக்குமோ... இல்லை இந்த இரண்டும் இல்லாமல் வேறொன்றாக இருக்குமோ என்று அலட்டாதேயும். வேறு எதுவுமே அல்ல. அந்த இரண்டு இருக்கிறதல்லவா? அதனை தான்... ரண்டு என்று குறிப்பிட்டு அதில் ஏதாவது ஒன்றைத் தொட வரும்படி அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறதே ஒழிய நீர் நினைப்பது போல் வேறுவிபரீதமான எதுமில்லை.

*தீபன் — உருத்திரபுரம்*

**கேள்வி:** நான் தாடி வளர்க்கிறேன். அதனால் சிலர் என்னை காதலில் தோல்வி என்பதால் தாடி வளர்க்கிறேன் என்கிறார்கள். காதலில் தோல்வி என்றால் மட்டும் தான் தாடி வளர்க்க முடியுமா?

**பதில்:** அப்படியென்றால் திருவள்ளுவர், ரவீந்திரநாத்தாகூர், லியனார்டோ டாவின்ஸி போன்ற பல முற்காலத்து அறிஞர்கள் தாடி வளர்த்தார்களே! அவர்களெல்லாம் காதலில் தோல்வி அடைந்தவர்களா? இப்போதெல்லாம் காதலில் தோற்றவர்கள் மட்டுமல்ல சலூனுக்குக் காசு கொடுக்காத பிசிநாறிகள் தானே சவரம் பண்ணப் பஞ்சிப்படும் சோம்பேறிகள். முகத்திலே குட்டை உள்ளவர்கள் எல்லாம் தாடி வளர்க்கிறார்கள்.



*ஜீவன் — அக்கராயன்*

**கேள்வி:** அன்பின் பித்தா! சீதனம் இல்லாமல் திருமணம் செய்யும் ஆண்களைப்பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:** தாங்கள் பெரிய தியாகிகள் என்று அவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். ஏதோ குறையுள்ளவர்... அதுதான் சீதனம் வாங்கவில்லை என்று மற்றவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள்.

*வீ.தீபா — வட்டக்கச்சி*

**கேள்வி:** தற்போது வெளியாகும் பாடல்களில் பெண்களை ராட்சசி என்று உவமிக்கிறார்களே! இதனைக் கேட்டு உமது மனைவி கொதித்து எழுவதில்லையா?

**பதில்:** நாள் முழுவதும் ராட்சசியாக நிற்கும் அவளுக்கு இந்த பாடல்களையெல்லாம் கேட்க ஏது நேரம்?

*அ.ஜென்சன் — மல்லாவி*

**கேள்வி:** பித்தா! தத்துவமேதைகளுக்கெல்லாம் வாழ்க்கைத்துணை சரியாக அமைவதில்லை என்கிறார்களே! என்ன காரணமாக இருக்கும்?

**பதில்:** குடும்பத்தைப் பொறுப்பாகக் கவனிக்காமல் மனைவியுடன் தத்துவம் பேசி அறுத்துக் கொண்டே இருந்திருப்பார்கள். மனைவிமார் விட்டுவிட்டு ஓடியிருப்பார்கள்.

*பௌமிதா — ஏறாவூர்*

**கேள்வி:** டியர் பித்தா! ஆண்களை கைக்குட்டையாக நினைக்கும் பெண்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள்?

**பதில்:** அது பரவாயில்லை போல் தெரிகிறது. கைக்குட்டைகளை என்றாலும் தோய்ந்துத் தோய்ந்துப் பாவிக்கிறார்கள். ஆனால், காலம் மாறும் மாற்றத்தை பார்த்தால் ஆண்களைப் பெண்கள் முகம் துடைக்கும் ரிசூ ஆக நினைக்கும் காலம் வெகு விரைவில் வரும் போல் தெரிகிறதே! பாவித்து முடிந்த உடன் தூக்கி எறிந்து விடுவது போல்...

*செ.தாட்சாயணி — வத்தளை.*

**கேள்வி:** உம்மை சமைக்க விட்டுவிட்டு உமது மனைவி அப்படி என்ன வெட்டிவிழுந்து வேலை பார்க்கிறார்?

**பதில்:** சுவையாக சமைப்பது எப்படி என்று ஒரு புத்தகம் எழுதிக்கொண்டிருக்கிறாள். விரைவிலே வெளியிடப்போகிறாள்.

*மு.சிவரூபன் — வவுனிகுளம்.*

**கேள்வி:** பித்தா, நீர் நகைச்சுவை மன்னன் என்கிறார்கள். எங்கே எனது பெயரில் ஒரு நகைச்சுவை எடுத்துவிடும்?

**பதில்:** ஒரு நாட்டில் ஒரு சர்வாதிகாரி அரசாட்சி செய்தான். அவன் மிகவும் கொடுமைக்காரன் மக்களைப் பற்றி நினைக்காமல் அளவுக்கு அதிகமாக செலவு செய்து மக்களிடம் அதிகமாக வரி அறவிட்டான். இதனால், நாட்டில் பஞ்சம், பசி, பட்டினி, விலைவாசி உயர்வு எலலாம் தலைவிரித்தாடின. ஒரு பாண்துண்டுக்கோ நீண்ட கியூ காத்திருந்தது. சர்வாதிகார அரசனோ அவைகளை கணக்கெடுக்காமல் இருந்தான்.

ஒருநாள் பாணுக்கு நீண்ட கியூ காத்திருந்தது. ஆனால், பாண் வரவில்லை. இதனால் கியூவிலே நின்ற இளைஞன் ஒருவன் கோபமடைந்தான். இவ்வளவு கொடுமைகள் செய்யும் சர்வாதிகாரியை கொன்றுவிட திட்டமிட்டான். உடனே புறப்பட்டு அரண்மனைக்குச் சென்றான். சென்ற கொஞ்ச நேரத்தில் சோர்வோடு திரும்பிவந்தான். மீண்டும் பாண் கியூவிலே நின்று கொண்டான். அவனுக்கு அருகே பாண் கியூவில் நின்ற ஒருவன் அவனிடம் கேட்டான் ''சர்வதிகாரி அரசனை கொல்வதற்கு சென்றாயே? ஏன் திரும்பி வந்துவிட்டாய்?''

அவன் ''அங்கே இதைவிட பெரிய கியூ காத்திருக்கிறது'' என்றான் சலிப்புடன்

*வே.திருநாவுக்கரசு, புத்தளம்.*

**கேள்வி:—** பித்து அங்கிள் நானும் எனது மனைவியும் திருமணம் முடித்து இரண்டு மாதங்கள் ஆகின்றன! இன்றும் புழுபூச்சி கிடைக்கவில்லை. அங்கிள் தயவு செய்து புத்திர பாக்கியத்திற்கு என்ன செய்ய வேண்டும் என பதில் தரவும்?

**பதில்:** அதுக்குமேல அடி அடித்தால்தான் அம்மியே நகரும். நீர் இரண்டு மாதங்களுக்குள் அவசரப்படுகிறீர்... தொடர்ந்து முன்னேறும்.... முயற்சி திருவினையாக்கும்.

*செ.வாசுகி — ஆவரங்கால்.*

**கேள்வி:** பித்தா! தற்போது எம்.ஜி.ஆர். உயிருடன் இருந்தால் ஜெயலலிதாவை தூக்கி டான்ஸ் ஆடுவாரா?

**பதில்:** ஆடினால் இடுப்பு எலும்பு உடைந்து ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். இப்போது தான் நிக்கென்று — சிக்காக எவ்வளவு பாப்பாக்கள் இருக்கும் போது... அந்த பீப்பாவை தூக்கி டான்ஸ் ஆட அவர் என்ன அரை லூசா?

*கே.சந்திரா — கொடிகாமம்.*

**கேள்வி:** பித்துக் கண்ணா! தாய்க்குப்பின் தாரம் என்று சொல்கிறார்களே? தாரத்துக்குப் பின்?

**பதில்:** சின்ன வீடு.

*மு.ராஜேஷ், புளியங்குளம்.*

**கேள்வி:** அன்பின் பித்தா! எமது நாட்டுப் பிரச்சினைக்கு உம்மை நடுவராக விட எண்ணியுள்ளோம்.. உமக்கு சம்மதமா?

**பதில்:** ஐயோ வேண்டாம்... நான் உரலாகவே இருக்க விரும்புகிறேன் (மனைவியிடம் மட்டும் அடி வாங்கிக் கொண்டு மேளமாக விரும்பவில்லை)

*ஆர். ஜெகன், இரத்தோட்டை.*

**கேள்வி:** அன்பின் பித்தண்ணா! காதலித்துப் பார்த்தால் கவிதை வரும் என்றார்களே! நான் காதலித்து பார்த்தேன். கவிதை வரவில்லையே ஏன்?

**பதில்:** காதலிப்பதற்காகக் காதலித்தால் கவிதை வரும். கவிதைக்காக காதலித்தால்...செருப்புத்தான் வரும்.

*செ.அன்ரன் — 4ஆம் கட்டை பூநகரி*

**கேள்வி:** பெண்களைப் படைத்த இறைவன் கண்களைப் படைக்காமல் விட்டிருக்கலாம். அல்லது கண்களைப்படைத்த இறைவன் பெண்களைப் படைக்காமல் விட்டிருக்கலாம்.எனவே உம்மிடம் பெண் வேண்டுமா? கண்வேண்டுமா?



என்று கேட்டால் எது வேண்டும் என்பீர்?

**பதில்:** ஒரே ஒரு கண்ணும் — ஒரு பெண்ணும் வேண்டும் என்று கேட்பேன். ஏனென்றால் பெண்ணில்லாமல் கண் மட்டும் இருந்து என்ன பலன்? கண் இல்லாமல் பெண் மட்டும் இருந்து என்ன பயன்?

---

## பித்தனின் கேள்வி

கேள்வி:— பித்தா பெண்கள் ஆண்களை எப்படி நக்கல் பண்ணுவார்கள்?

## வாசகர்கள் பதில்கள்

*ரூபன் — யாழ்ப்பாணம்.*

பேயன், விசரன், மொல்லமாரி என்றும் ஏலாதவிடத்து மிருகங்களின் பெயரைக் கொண்டும் செல்லமாக அழைப்பார்கள்.

*பிரேமானந் — மட்டக்களப்பு.*

யார்சொன்னது திட்டுவது என்று? அதனை அவர்கள் அவ்வாறு தங்களிடம் உள்ள குறைகளை அவர்கள் மீது சுமத்துகிறார்கள்.

*அருள் — வத்தளை.*

இயலாத்தனத்தின் மேடையேற்றமே புனைபெயர் கொண்டு அழைத்தலாகும். அவ்வாறு அன்பாக நாய், பேய் என அழைப்பார்கள்.

*தமிழ்ச்செல்வி — ஹட்டன்.*

காதலித்து திருமணம் முடித்தவர்கள் ஆயின் நண்பர்களிடம் பேயே, பிசாசே என்பார்கள். காரணம் இவர்கள் பேய்,பிசாசு வரும் நேரத்திலேயே காதலை அரங்கேற்றியவர்களாவர்.

*கௌசிகா — திருகோணமலை.*

படம் பார்க்க தியேட்டருக்கு அழைத்துச் சென்று படம் பார்த்துவிட்டு படத்தில் வரும் ஒரு காட்சியில் எவ்வாறு கதாநாயகனை நாயகி நக்கலாக அழைக்கிறாளோ அவ்வாறு நக்கலாக அழைப்பர். அதாவது நியூ, பிளேன்டீ என்று அழைப்பது போல்.

---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:—

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.



ஐந்து தரமான — குறும்பான யதார்த்தமான — பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை நவம்பர் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

**கேள்வி:—** சந்திரமுகி படத்துக்கான கதாநாயகிகளை அடிக்கடி மாற்றுவதற்கான காரணம் என்ன?

**பதில்:—** பிரபுவும் கமலும் ரஜினியுடன் சேர்ந்து நடிப்பார்களோ என்ற பயத்தின் காரணத்தினால் இருக்கலாம்.



**இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.**

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு— 14.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அகவை 50 இல் பிரபா

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுக்கு இந்த நவம்பர் 26 ஆம் திகதியுடன் 50 அகவை நிறைவு பெறுகின்றது. ஈழத் தமிழினத்தைத் தலைநிமிர்ந்து நடக்க வைத்த தலைவன் தன் பயதில் கம்பீரமாக அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து வீறு கொண்டு நடக்கின்றான்.

தமிழீழத் தேசியத் தலைவரின் வரலாறே தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாறாகவும் பின்னிப் பிணைந்துள்ளது.

போராட்டகாலங்களிலும் சமாதான காலங்களிலும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவரீதியிலும், இராஜதந்திர ரீதியிலும் மிகவும் நுட்பமாக வழி நடத்தி தமிழீழ போராட்டத்தின் பால் உலகின் கவனத்தை ஈர்க்கவைத்த பெருமையுடன் தனது ஐம்பதாவது அகவைப் பூர்த்தி செய்கிறார் தேசியத் தலைவர்.

புலிகளின் கதை முடிந்தது எனக் கதைகள் கூறப்பட்ட போதெல்லாம் புதிய உத்வேகத்துடனும் மதிநுட்பத்துடனும் தமிழர் போராட்டத்தைத் தனித்து வழிநடத்திய பெருமை அவருக்கே உரியது.

கொலில்லா போர் முறையில் சேகுவரா, மா.ஓ.சேது, கோசுமின் போன்ற உலகப் புகழ்பெற்ற போராட்டத் தலைவர்களை விஞ்சும் வகையில் தனதாற்றலை தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிருபித்தார். தூரநோக்குடனும், தீர்க்கதரிசனத்துடனும் ஒரு மாபெரும் விடுதலை இயக்கத்தை வளர்த்தெடுத்து, இன்று அதனை மக்கள் மயப்படுத்தி, புலிகளே தமிழர் தமிழரே புலிகள் என்ற நிலைக்கு விடுதலைப் போராட்டத்தை தேசிய மயப்படுத்திய உன்னத மா மனிதர் அவர்.

சிறு பிராயம் முதலே சிங்களப் பேரினவாதத்தின் அடக்கு முறைகள் தேசியத் தலைவரின் ஆழ் மனதில் வடுவாகப் பதிந்து விட்டன. 1970 களின் ஆரம்பத்தில் தமிழ் மக்கள் மத்தியில் தோற்றம் பெற்ற ஆயுத எழுச்சியில் தோன்றிய புதிய தமிழ்ப் புலிகள் அமைப்பை உருவாக்கி பின் 1976 இல் தமிழீழ விடுதலைப் புலிகள் என அதனைப் பெயர் மாற்றி அதனைக் கால நகர்வில் தமிழீழ மக்களின் தேசிய சக்தியாக மாற்றியவர் தலைவர் தான்.

இலங்கையின் 50 வருட சுதந்திர வரலாற்றில் தமிழ்த் தலைவர்கள் சிங்கள ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட, அகிம்சை மீதிருந்த நம்பிக்கை தமிழ் மக்களுக்கு அற்றுப் போனது. மிதவாதத் தமிழ் தலைவர்கள் மக்க




ளால் ஓரங் கட்டப்பட்டனர். இக் காலகட்டத்தில் பல போராட்ட சக்திகள் தோற்றம் பெற்றன. இருப்பினும் தேசியத் தலைவரின் உறுதியான கொள்கையும், கொள்ளைக்காக உயிரை விடும் போராளிகளின் பிரசவிப்புமே விடுதலைப் புலிகளை விடுதலையின் முதன்மைச் சக்தியாக்கியது.

விடுதலைப் போராட்ட காலத்தில் தேசியத் தலைவர் சந்தித்த நெருக்கடிகளும், அழுத்தங்களும் ஏராளமானவை. பல்வேறு சந்தர்ப்பங்களில் விடுதலைப் போராட்டம் பெரும் நெருக்கடிக்குள் சிக்கியது. எனினும் நெருப்பாறுகளை நீந்தி கடந்து எந்த அழுத்தங்களுக்கும் வளைந்து கொடுக்காது எதிரிகளின் திட்டங்களை உறுதியுடன் எதிர்கொண்டு தமிழ் மக்களைத் தலைநிமிர வைத்தவர் தலைவர் பிரபாகரனே.

இந்திய இராணுவத் தின் காலம் தமிழர் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு இருண்ட யுகம். அக்காலகட்டத்தில் பிராந்திய வல்லரசான இந்தியாவின் கரங்களுக்குள் போராட்டம் சிக்கிச் சின்னாபின்னப் படுவதைத் தடுக்க தீர்க்க தரிசனத்துடன் முடிவெடுத்த ஒரே தலைவர் பிரபாகரன்தான்.

ஏனைய கட்சிகள் இந்தியாவின் மடிச் சூட்டுக்குள் படுத்துக் கொண்டு சுகம் கண்ட போது, பிராந்திய வல்லரசை எதிர்க்கும் துணிவு பிரபாகரனுக்கு மட்டுமே இருந்தது. எதிரிகளும் துரோகிகளும் சூழ்ந்திருந்த வேளையில் எல்லாம் தலைவரின் இராணுவ, இராஜதந்திர நகர்வுகளால் ஆபத்துக்களில் இருந்து மக்களையும் இயக்கத்தையும் காத்தவர் அவர்.

உலகில் மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்றும், பிராந்திய வல்லரசுமான இந்தியாவுக்கு இன்றுவரை தலைவர் ஒரு புரியாத புதிர்தான்.

1990களின் ஆரம்ப காலகட்டத்தில் ஆனையிறவு பெரும் தளம் மீது புலிகள் நடத்திய ஆகாய கடல்வெளிச்சமர் மூலம் இலங்கையில் இரு இராணுவங்கள் உள்ளன என்ற கருத்து முதன்முறையாக உலகுக்குச் சொல்லப்பட்டது. இதன் மூலம் தேசியத் தலைவரின் பெயர் எங்கும் பேசப்பட்டது.

இதன் பின்னர் மரபுவழி இராணுவ மாக புலிகளை வளர்த்தெடுப்பதில் தேசியத் தலைவரி பேரார்வம் கொண்டார். பல படையணிகளை அணிவகுத்து தமிழீழ தேசத்தின் காவல் அரண்களாக நிறுத்தினார்.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகட்டத்தில் சொற்ப போராளிகளுடன் இருந்த வேளை தலைவர் ஐம்பது போராளிகள் சீருடையுடன் அணிவகுத்து நின்றால் எப்படி இருக்கும்? என்று சக போராளிகளிடம் கூறினாராம் தலைவரின் கனவு நனவானது. அது ஐம்பதாகி, நூறாகி, ஆயிரமாகி, பல்லாயிரமாகி விடுதலையின் பெருவிருட்சமாக மாறியது. இந்த வரலாற்றுப் பெருமை எமது இனத்தின் தேசிய நாயகனான தேசியத் தலைவரையே சாரும்.

இந்நிலையை அடைவதற்காக தலைவரால் வளர்த்தெடுக்கப்பட்டு வீரமரணமான பல்லாயிரம் மாவீரர்களை யாரும் மறந்து விட முடியாது. அவர்களே எமது விடுதலையின் ஆணிவேர். மாவீரர்களை தேசியத்தலைவர் எப்பொழுதும் உயர்ந்த ஸ்தானத்திலேயே வைத்துள்ளார். இதனால் தானோ என்னவோ தலைவரின் பிறந்த தினத்துக்கு மறுநாள் கார்த்தகை 27 மாவீரர்நாள்.

## நள்ளிரவில் ஒரு கெரில்லா தாக்கு!

*1983 ஜூலை 23. நள்ளிரவு-*

விடுதலைப் போராட்டத்தில் மறக்க முடியாத நாள். யாழ்ப்பாணம் திருநெல்வேலி தபால்கட்டைச் சந்திப் பகுதியில் 14 பேர் கொண்ட புலிகளின் கெரில்லா அணி ஸ்ரீ லங்காப் படைகளின் வாகனரோந்து அணிக்காக காத்திருக்கின்றது.

கண்ணிவெடிகளைப் புதைக்கும் நடவடிக்கையில் லெப். கேணல் அப்பையா ஈடுபட்டிருந்தார். வீதியின் இரு மருங்கிலும் தாக்குதலுக்காகக் காத்திருந்தது புலிகள் அணி. போராளியாக தேசியத் தலைவரும் ஒரு நிலையில் தயாராக நிற்கிறார்.

தொலைவில் வாகன முகப்பு வெளிச்சங்கள் தெரிகின்றன. தாக்குதலுக்கு தயாராகுமாறு உத்தரவு பறக்கிறது. இத் தாக்குதல் நடவடிக்கைக்கான பொறுப்பை தலைவர், போராளியான லெப். செல்லக்கிளி அம்மானிடம் ஒப்படைத்திருந்தார்.

அவரின் கீழ் தேசியத் தலைவர் மற்றும் கேணல்கிட்டு,லெப்.கேணல்பொன்னம்மான், லெப். கேணல் புலேந்தி அம்மான், ரஞ்சன் உட்படப் போராளிகள்தயாராகின்றனர்.

வாகனங்கள் நெருங்குகிறன. கண்ணிவெடியைதாக்குதல்போராளி அழுத்த இரண்டாவதாக வந்தவாகனம் சிதறுகிறது.

தொடர்ந்து சடுதியான துப்பாக்கிச் சூடுகள் இரவின் அமைதியைக் குலைத்தன. தாக்குதல் நடத்திய கெரில்லாக்கள் மாயமாய் மறைந்தனர்.

இந்தத் தாக்குதலில் 13 ஸ்ரீலங்காப் படையினர்கொல்லப்பட்டனர். தாக்குதல் நடவடிக்கையைதலைமையேற்று நடத்திய செல்லக்கிளி அம்மானும் மரணத்தை தழுவிக் கொள்கிறார்.



தேசியத்தலைவரின் திட்டமிடலில் நடந்த முதலாவது மிகப் பெரிய கெரில்லாத் தாக்குதல் அது.

ஆயுதப்போராட்டவரலாற்றின்திருப்பு முனையாகவும் அமைந்தது.

புலிகளின் முதல் தாக்குதல் தளபதியான லெப். சீலன் (சாள்ஸ் அன்ரனி) இராணுவத்தால் கொல்லப்பட்டதற்கு பதிலடி வழங்க எடுத்த முடிவின் படி தாக்குதல் நடத்தப்பட்டது.

இச் சம்பவத்தை தொடர்ந்து தென்னிலங்கையின் கலவரம் சிங்களப் பேரினவாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்டது என்பது மறக்க முடியாத வரலாற்றுபதிவு ஆகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரக் கைவண்ணம்


அ.அன்றன் சாள்ஸ், தரம் 1b, முல்லைத்தீவு



இ.ஜெறாஜ், தரம் 8, முல்லைத்தீவு மா.வி


வி.சுதர்சன், தரம் 6, புதுக்குடியிருப்பு


ம.ஜெனிபேர்ஸ், தரம் 8C, மு/முல்லைத்தீவு ம.வி.


கே.வித்தியா, 4 ஆம் மதவடி முல்லை வீதி, பரந்தன்

## படம் சொல்லும் பழமொழி-13

01


02


03


04


அன்பான தம்பி, தங்கைகளே! மேலே உள்ள படங்கள் ஏதோ ஒரு பழமொழியை நினைவூட்டுகின்றன. அவை என்ன பழமொழிகள் என்பதை கண்டுபிடித்து விடையை தபால் அட்டையில் எழுதி அனுப்புங்கள். சரியான விடையை நவம்பர் 27ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதும் 5 பேரின் பெயர் விவரம் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரமாகும். படம் சொல்லும் பழமொழி 10க்கான சரியான விடைகள் வருமாறு.

1. முதலைக் கண்ணீர் வடிப்பது போல். 2. பானையில் இருந்தால் அகப்பையில வரும்.
3. இளமையில் கல்வி சிலையில் எழுத்து. 4. பணம் பத்தும் செய்யும்.

சரியான விடையை அனுப்பியவர்களது பெயர் விபரம் வருமாறு:
1.அபிராமி, கொழும்பு - 13. 2.சங்கரன், அளுத்மாவத்தை வீதி, கொழும்பு-15. 3. தர்ஷினி மட்டக்குளி, கொழும்பு - 15. 4. பிரியா, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். 5.சர்வபாமினி, பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

அனுப்பவேண்டிய முகவரி: *'படங்கள் சொல்லும் பழமொழி',*
*சுடர் ஒளி வாரமலர், 85, ஜயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14*

## சாதனைக் குமரன்

பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்குப்போக அந்த ஒற்றையடிப் பாதை வசதியாக இருந்தது குமரனுக்கு.

பாதி வழி போனதும் தண்டவாளம் தாண்ட வேண்டும். அப்புறமாய் கொஞ்சம் முள்புதர்களை கடந்தால் வீடு இருக்கும் தெருவில் கொண்டு போய் விட்டு விடும்.

அன்றும் அப்படித்தான் மாலை பள்ளி முடிந்து குறுக்குப் பாதையில் வந்து கொண்டிருந்தான் குமரன். தண்டவாளம் இணைப்பு ஆணிகளை இரண்டு முரட்டு ஆசாமிகள் கழற்றிக் கொண்டிருந்தது பார்வையில்பட்டது.

மாலை அந்த நேரத்தில் ஒரு எக்ஸ்பிரஸ் ரெயில் அந்தவழியாகவரும். இவர்கள் செய்கிற சதி மோசடியில் ரெயில்கவிழ்ந்து பெரும்உயிர்ச் சேதம் ஏற்படலாம். அதிர்ந்து போனான் குமரன்.



உடனே சூழ்நிலை மறந்து பலமாக கத்தினான், ''ஆபத்து... ஆபத்து...!''

அந்தக் குரல் யாருக்குக் கேட்டதோ இல்லையோ, அந்த இரண்டு முரடர்களுக்கும் கேட்டது. ஒரு சின்னப்பையன் இப்படி அவர்களை மாட்டிவிட முயன்றது பிடிக்காமல் போக, ஆத்திரத்தில் ஒருவன் கையில் இருந்த சுத்தியலை குமரன் மீது வீசினான்.

சுத்தியல் குறிதவறாமல் நெற்றியில் வந்து 'ணங்' என மோதியது. இரத்தம் கொட்ட, இவன் போட்ட அலறலில் இந்த முரட்டு ஆசாமிகள் இருவரும் ஓட்டம் பிடித்தனர்.

மளமளவென தனது சட்டையை கழற்றிய குமரன் நெற்றியில் வழியும் இரத்தத்தை துடைத்தான். அப்படியும் இரத்தம் நின்றபாடில்லை. மயக்கம் வருவதுபோல் உணர்ந்தான். அந்த நிலையிலும் அவனது பார்வை தண்டவாளப் பகுதியை நோக்கிப் போக.... தண்டவாளத்துண்டு ஒன்று அகற்றப்பட்டிருந்ததைச் கண்டு அதிர்ந்தான்.

கால் மணி நேர ஓட்டத்தில் ரெயில்வே ஸ்டேஷன் இருந்தது. ஆனால், அதற்குள் ரெயில் வந்து விட்டால்... விபரீதம் நேர்ந்துவிடும். அதனால் ரெயில்வே ஸ்டேஷனை நோக்கி ஓடுவதை விட, ரெயில் வரும் பாதையை நோக்கி ஓடலாம். ரெயிலை நிறுத்தலாம் என முடிவு செய்தான்.

அப்போதுதான் இரத்தம் துடைத்த சட்டை நினைவில் அடிக்க, அதை தலைக்கு மேலாக தூக்கினான். தண்டவாளத்தில் கையை உயர்த்தியபடி ஓடினான்.

தூரத்தில் வரும் போதே டிரைவர் கவனித்து விட.... ரெயிலின் வேகம் குறைந்தது. ரெயில் நின்றது. இறங்கியவர்கள் குமரன் திரும்பி ஓடி வந்த இடம் வரை வந்து பார்த்து அதிர்ந்து போனார்கள்.

குமரனுக்கு ரெயில்வே டாக்டர் சிகிச்சை அளிக்க.... ரெயில் பயணிகளோ சிறுவன் என்பதையும் கருதாமல் இருகைகளையும் தூக்கி வணங்கினர்.

குமரன் நினைத்திருந்தால் தனது காயத்துக்கு பயந்து ஓடியிருக்கலாம். தன்நலம் கருதாமல் மற்றவர்கள் நலம் முக்கியம் என்று எண்ணியதால் அவனது கஷ்டம் அவனுக்கு தெரியவில்லை.

நீங்கள் எப்படி? குமரன் மாதிரித் தானே..!

## முன்னைய பெயர்கள்

நாடுகளின் முன்னைய பெயர்கள்
மியன்மார் – பர்மா
சிம்பாவே – றொபீலியா
ஈரான் – பாரசீகம்
ஸைரே – கொங்கோ
எத்தியோப்பியா – அபிசீனியா
ஈராக் – மெசப்பெத்தேமியா
நெதர்லாந்து – ஒல்லாந்து, ஹொலன்ட்

த.கயேந்தினி
யா/இராமநாதன் கல்லூரி,
தரம் 7.

## ஆயுட் காலங்கள்

* நீர்யானை – 40 வருடங்கள்
* தீக்கோழி – 50 வருடங்கள்
* சுண்டெலி – 2 வருடங்கள்
* பொன்மீன் – 25 வருடங்கள்
* வரிக்குதிரை – 22 வருடங்கள்.

ஜே.கௌசிக்கா,
கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலை,
கல்கிசை.

பாவம், எலியைத் துரத்திபிடிக்க வழி தெரியாமல் தவிக்கும் பூனையாருக்கு நீங்களாவது வழி காண்பித்து உதவக் கூடாதா?



## தொகைப் பெயர்கள்

1. இருதிணை – உயர்திணை, அஃறிணை.
2. இருகுரவர் – தாய், தந்தை.
3. முக்கனி – மா, பலா, வாழை
4. முத்தமிழ் – இயல், இசை, நாடகம்
5. நாற்படை – தேர்படை, யானைப்படை குதிரைப்படை, காலாற்படை
6. நானிலம் – குறிஞ்சி, மருதம், நெய்தல், முல்லை
7. ஐம்பொறி – மெய் வாய், கண், மூக்கு, செவி.

பி.சிந்துஜா, தரம் 9
கிளி/புனித திரேசா
பெண்கள் கல்லூரி.

## வேண்டியவை

1. கூடு கட்டும் பாம்பினம்?
இராஜ நாகம்.
2. யானைகள் அதிகமுள்ள நாடு?
சிம்பாவே
3. வெட்டுக்கிளிக்கு எத்தனைக் கண்கள்?
ஐந்து.
4. கோள்களில் எதிர்ப்பக்கம் சுற்றும் கோள்?
யுரேனஸ்.
5. மோட்டார் சைக்கிளை பிரதானமாக உற்பத்தி செய்யும் நாடு?
யப்பான்.
6. சர்வதேச வங்கி எங்கு அமைந்துள்ளது?
லண்டனில.
7. விமானப் பாகங்களில் அதிகம் பயன்படுத்தும் உலோகம்?
அலுமினியம்.

குணராசா ரகுவரன்
கிளி/வன்னேரிக்குளம் ம.வி
தரம் 10.

## அறிந்து கொள்ளுங்கள்

1. இயற்கை ஒளி முதல்கள் எவை?
சூரியன், நட்சத்திரம்.
2. அதிர்வு என்றால் என்ன?
பொருட்களின் அசைவு.
3. திரவ இளையத்தின் நிறம் என்ன?
மஞ்சள்.
4. தாவரங்கள் உறங்கும் காலம் எது?
இரவு.
5. ஒளி நுணுக்குக்காட்டியை முதல்முதலில் ஆக்கியவர்?
ஜென்சன்.
6. தொலைக்காட்சியை கண்டுபிடித்தவர்?
கவாரிகின் (அமெரிக்கா).
7. இலங்கையில் பயிரிடப்படும் பணப்பயிர்கள்?
தேயிலை, இறப்பர், தென்னை.
8. செங்கல் ஓடு செய்யப்படும் இடங்கள் எவை?
ஒட்டி சுட்டான்
அநுராதபுரம்
நீர்கொழும்பு.
9. தந்தி அனுப்பும் முறையை அறிமுகம் செய்தவர்?
கூற்றன் பேக்.

சி.ஷமீனா, தரம் 9 A
யா/கொடிகாமம்
திருநாவுக்கரசு ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

# தொடரும் தவிப்பு

தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.

நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

7

அவர் குளித்துத் தயாராகி வருவதற்கும்குழுத் தலைவர்கள் ஒவ்வொருவராக வருவதற்கும் சரியாக இருந்தது.

அனைவர் முகத்திலும் இறுக்கம். இறுக்கத்தை கூட்டியது அச்சமயம் நிகழ்ந்த அற்புதத்தின்வரவு. அவரது முகத்தை நேருக்கு நேராய் பார்க்கவும் யாருக்கும் துணிவில்லை.

'வாங்கம்மா. உட்காருங்க' – என்றார் நெடுமாறன்.

அமர்ந்தவாறே 'என்னங்கய்யா இப்படிப் பண்ணிட்டாங்க. அந்த பெரியஅதிகாரியைப் பார்த்தீங்களாய்யா என்னா திமிரா பேசியிருக்காரு. சதிபண்ணிட்டாங்கய்யா... என்னய்யா பண்ணப்போறோம்?' – கண்ணீர்மல்கக் கேட்டார்.

காலைப் பத்திரிகைகளிலும்தொலைக்காட்சிகளிலும் பெரிய அதிகாரியின் பேட்டியைப் பார்த்து அங்கு நின்றிருந்த ஒவ்வொருவரும் ஏற்கனவே கொதித்துப்போயிருந்தனர். அற்புதத்தின் கண்ணீர் அவர்கள் கோபத்தை அதிகரித்தது.

அங்கு இருந்த தலைவர்கள் அனைவரும் அற்புதத்தைப் பல ஆண்டுகளாக அறிவார்கள். இனத்துக்காக தம் மக்களுக்காக பெரியார் கொள்கைகளுக்காக தங்களையே அர்ப்பணித்த குடும்பம் அவரது குடும்பம் என்பதையும் அறிவார்கள். அதோடு இந்த 8 ஆண்டுகளாக அந்தக் குடும்பம் பட்ட துயரையும் தனி ஒருவராக 26 பேருக்கும் உழைத்த அந்தத் தாயின் அருமையையும் நன்கு உணர்ந்தவர்கள். அதனாலேயே அந்தத் தாயின் கண்ணீர் அவர்கள் இதயத்தை அறுத்தது. அற்புதத்தைப் போல குயில்தாசனைப்போல அங்கு கூடியிருந்த தலைவர்களும் கொண்ட கொள்கைகளுக்காக அர்ப்பணிப்போடு செயல்படுபவர்கள். அதனால் அற்புதத்திற்கு ஏற்பட்ட துன்பம் தங்களுக்கு ஏற்பட்டதாகவே உணர்ந்து அதைக் களைய என்ன செய்யவும் தயாராக நின்றிருந்தனர்.

அந்த நம்பிக்கையில்தானே அற்புதமும் இவர்களிடம் ஓடி வந்துள்ளார்.

'ஒன்றும் கவலைப்படாதீங்கம்மா' – என்ற நெடுமாறன், உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வது பற்றியும் அதற்கு மூத்த வழக்கறிஞர் நடராசன் அவர்களை அமர்த்துவது குறித்தும் நிதிதிரட்டும் செயல்திட்டங்கள் குறித்து விவாதிக்க ஒருங்கிணைப்புக் குழுவைக் கூட்டுவது குறித்தும் அனைவருக்கும் கூறி அவர்கள் கருத்தைக் கேட்டார்.

பின்னர் பிப்ரவரி ஆறாம் தேதி கூட்டத்தை வைத்துக் கொள்ளலாமென முடிவாயிற்று.

வேறு என்னவெல்லாம் செய்யலாம், எப்படியெல்லாம் நிதி வசூல் பண்ணலாம் என பலவற்றையும் பற்றி ஆலோசித்துவிட்டு அனைவரும் கலைந்து சென்றனர்.

மாலையில் வழக்கறிஞர்கள் கூட்டம். வழக்கறிஞர்கள் சந்திரசேகர், துரைசாமி, கோபி, இராமதாசு, குணசீலன் உட்பட 26 பேருக்கும் ஆஜரான வழக்கறிஞர்கள் அனைவரும் வந்திருந்தனர். மேல் முறையீட்டுக்கான நடைமுறைகளை பேசியபின், சந்திரசேகரைத் தவிர அனைவரும் கிளம்பினர்.

மறுநாள் மூத்த வழக்கறிஞர் நடராஜனைச் சந்திக்க ஏற்பாடு செய்யும்படி சந்திரசேகரனைப் பணித்தார் நெடுமாறன்.

தீர்ப்பு நகல் வாங்குவதற்கும் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்வது குறித்தும் சிறையில 26 பேரையும் சந்தித்து ஒப்புதல் பெறுவது குறித்தும் இருவரும் பேசி முடித்தனர்.

குயில்தாசனுக்கு சற்று உடல்நலம் தேறியதும் அவரையும் அழைத்துக்கொண்டு சோலையார் பேட்டை திரும்பினார் அற்புதம். அனைவரும் கூறிய ஆறுதல் வார்த்தைகள் அவருக்குச் சிறிது தெம்பளித்திருந்தன. சோலையார் பேட்டைக்கு இவர்கள் திரும்பிய சேதி கேட்டவுடன் உள்ளூர் நண்பர்கள் பலரும் வந்து பலவாறு ஆறுதல் கூறினர்.

ஒருவழியாக எல்லோரையும் அனுப்பிவிட்டு, குயில் தாசனும் மாடிக்குப் படுக்கச் சென்ற பிறகு தானும் படுக்கச்சென்றார் அற்புதம். இரண்டு நாட்களாய் நிகழ்ந்த மன உளைச்சலிலும் களைப்பிலும் படுத்து கண்ணை மூடினார். மூடிய கண்களுக்குள் தொங்கும்தூக்குக் கயிறும் அறிவின் கழுத்துப் பகுதியும் நிழலாடின. திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தார். உடலெங்கும் வியர்த்துக் கொட்டியது. எழுந்து சென்று தண்ணீர் அருந்திவிட்டு மீண்டும் படுத்தார். கண்களை மூடியவுடன் மீண்டும் அதே பிம்பம். எத்தனை முயன்றும் அந்த பிம்பங்களை மாற்ற முடியவில்லை.



எங்கிருந்து தான் ஆவேசம் வந்ததோ.....!

சென்னையிலும் இங்கேயும் அனைவரும் அருகிருந்ததால் சிறு துளிகளாக மட்டுமே அவ்வப்போது வெளிப்பட்ட துயரம், தனிமையில் பூதாகரமாய் தெரிந்தது. அடக்கி வைத்தது எல்லாம் பீறிட்டு எழும்ப வாய்விட்டு அழத்துவங்கினார். வார்த்தைகளோ வராத கதறல் வெறும் கதறல். 'அறிவு, அறிவு' இதைத் தவிர அவர் மனதில் வேறு நினைவுகளே இல்லை.

அருகில் படுத்திருந்த அருள், அம்மாவின் அழுகைக்குரல் கேட்டுதிடுக்கிட்டு எழுந்து அமர்ந்தாள்.

அம்மா அழுவதை வெறித்து நோக்கியபடி அமர்ந்திருந்தவளுக்கு அவரை சமாதானப்படுத்தவும் தோன்றவில்லை. கண்களில் மட்டும் கண்ணீர் வழிந்தபடி இருந்தது. எத்தனை நேரம் அப்படியே இருந்தார்களோ.

அம்மாவின் அழுகை மெல்ல அடங்க ஆரம்பித்தது. அம்மா அருகில் சென்று அருள் மெதுவாக அவர் தோளைப் பற்றினார். நிமிர்ந்து பார்த்த அற்புதம் கண்களைத் துடைத்துவிட்டு 'தூங்கலையா நீ' –என்றார்.

'இல்லம்மா.....!' அருள் கன்னங்களில் இருந்த கண்ணீர் கோடுகளைக் கண்ட அற்புதம். 'நீஎதுக்கு கண்ணு அழுவுற? ஒண்ணுமில்ல எல்லாம் சரியாவிடும். போ. போய் படுத்துத் தூங்கு....' சொல்லும்போதே அவர் குரல் கம்மியது.

'அம்மா அண்ணன் வந்திடும்லம்மா.' தழுதழுத்தக் குரலில் சின்னக் குழந்தைபோல கேட்ட மகளுக்கு பதில் சொல்லவும் தெம்பில்லை அற்புதத்திற்கு.

'ம்' – என்று சொல்லும் போதே மீண்டும் உடைந்து அழ அதற்கு மேல் பொறுக்க முடியாமல் அருளும் கதற தாயும் மகளும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்தபடி அழத்துவங்கினர்.

***

*பிப்ரவரி 6, 1998:* குழுக் கூட்டத்திற்கு எல்லா ஊர்களிலிருந்தும் பெரும் திரளான தோழர்கள் வந்திருந்தனர். அனைவரிடமும் ஏதாவது செய்து 26 பேரையும் காப்பாற்ற வேண்டும் என்ற வேகம் இருந்தது. அவர்கள் முகபாவங்களிலும் பேச்சுக்களிலும் தெரிந்தது.

கூட்டத்திற்கு அற்புதம், குயில் தாசன், அருள் மூவருமேவந்திருந்தனர். பலரும்வந்து அவர்களிடம் பேசுதுவதும் ஆறுதல் கூறுவதுமாய் இருந்தனர்.

'இங்க மாதிரி இல்லம்மா. உச்ச நீதிமன்றத்தில எல்லாம் இவங்க பேச்சு எடுபடாது. அங்க நிச்சயமா நியாயமா நடந்துப்பாங்க. நீங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க. ஒருகை பார்த்திடலாம்.'

பலவித ஆறுதல் வார்த்தைகள் உறுதி மொழிகள்.

'அறிவு கண்டிப்பா வெளிய வந்திருவான்' – இந்த வார்த்தைகளை முதன் முதலில் கேட்ட நாள் இன்னமும் நன்றாக ஞாபகம் இருக்கிறது அற்புதத்திற்கு.

அன்றும் எப்போதும்போல் அறிவைக் காண மல்லிகைக்கு செல்லும்முன், பாரிமுனையில் வழக்கறிஞரைச் சந்திக்க சென்றார் அற்புதம். அங்குதான் அறிவை பூந்தமல்லி சிறைக்கு மாற்றியிருப்பது தெரிந்தது. சென்னையில் திசை அறியாத அற்புதம் வழக்கறிஞரிடமே பூந்தமல்லி செல்லும் வழி கேட்டு அறிந்து அவர் கூறிய பேருந்தில் ஏறினார். நடத்துனரிடம் வழக்கறிஞர் சொன்னபடி காட்டாங்குளத்திற்கு ஒரு சீட்டு கேட்க, நடத்துனர் முறைத்தார்.

'எங்கம்மா போகணும். இந்த வண்டி அங்கேயெல்லாம் போகாது. நீங்க சொல்ற இடம் தாம்பரம் போற வழில இருக்கு.ம்.இறங்குங்க'.

'இல்லப்பா. இந்த வண்டிதான்பா சொன்னாங்க. பூந்த மல்லி கிட்டப்பா. அங்க ஒரு சிறை இருக்காமே. அது பக்கத்துலபோணும்'.

சிறைக்குச் செல்லவேண்டும் என்று சொல்ல ஏனோ தயக்கம். அப்படிச்சொன்னால் ஏதேனும் நினைத்துக் கொள்வார்களோ என்ற பயம். அதனால் சிறைக்கு அருகில் என்றார்.

'அதுவா – அது கரையான் சாவடி. சரி சரி உட்காருங்க நான் இறக்கி விடுறேன்' – என்றபடி பயணச்சீட்டை கொடுத்தார் நடத்துனர்.

நல்ல வேளையாக நடத்துனர் நல்லவராக இருந்தார். இல்லையேன்றால் நம் கதி!

ஆமா. பூந்தமல்லி சிறைன்னு சொல்றாங்களே. கடைசியில என்பிள்ளைய சிறையில போட்டுட்டாங்களேபாவிங்க. சிறைன்னா! சிறை உடையெல்லாம் போட்டு விட்டுருப்பாங்களே. அய்யோ! கைதி உடையிலயா பிள்ளையைப் பார்க்கப்போறோம்.

பலவாறாக ஓடிய சிந்தனையைக் கலைத்தது நடத்துனரின் குரல். 'அம்மா கரையான்சாவடி வந்திருச்சு இறங்குங்க'! அவசரமாகஇறங்கினார். கிட்டத்தட்ட ஒருமணிநேரபயணம்.

பேருந்து நிறுத்தத்தில் இறங்கி சிறை மாதிரி ஏதாவது தெரிகிறதா? என சுற்றும்முற்றும் தேடினார்; ஒன்றும் புலப்படவில்லை.

அருகில் இருந்த தேநீர்க்கடைக்கு சென்றுகடைக்காரரிடம் 'ஏம்ப்பா இங்க பக்கத்துல சிறை எங்க இருக்குது'. மெல்லிய குரலில் கேட்டார். கடைக்காரரின் முகத்தை நிமிர்ந்து கூட பார்க்க முடியாத அளவிற்கு கூச்சம்.

'சிறையா? ஆமாம்மா இப்படியே கொஞ்சத் தூரம் போனீங்கன்னா இடது பக்கம் ஒரு கிளைச்சாலை பிரியும். அதுலதாம்மா இருக்குது சிறை.' கடைக்காரருக்கு நன்றி கூறிவிட்டு அவர் சொன்னவழியே நடந்தார். அவர் சொன்னபடியே அரை கிலோமீட்டர் சென்ற பிறகு கிளைச்சாலை வந்தது.

(தவிப்புத் தொடரும்....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

## பொற்கை பூண்ட கொற்கைப் பாண்டியன்......!

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி..)

### நீதி தீர்ப்பு!

முற்பகல்வேளை இளம் காற்றில் கருமேகம் கலைந்து எழு ஞாயிற்றின் ஒளியில் இரட்டைக் கயற்கொடிகோட்டை வாயிலில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

அரண்மனைக்கு முன் கீரந்தையும் அயலாரும் கூடி நின்றனர். முறைப்பாட்டுடன் வந்திருப்பதான விவரத்தை கீரந்தை வாயிற் காப்போனிடம் சொன்னான். வாயிற் காப்போன் அதனை அமைச்சனிடம் சொன்னான். அமைச்சன் அதனை அரசனிடம் சொன்னான். "சபை கூடட்டும்" என்றான் அரசன்.

அதுவரை மனம் குழம்பியிருந்த அரசன் முறைப்பாடு வந்துள்ள சேதியறிந்து கீரந்தையின் ஐயம் மாயமாக மறைந்திருக்குமென நினைந்து அமைதி கொண்டான்.

இருநாழிகையில்சபைகூடியது. அமைச்சர்கள், பிரபுக்கள் குழுமினர். கீரந்தையும் அயலவரும் அங்கு சேர்ந்தனர்.

கட்டியம் கூறப்படுகிறது; 'ராசாதி ராச ராச மார்த்தாண்ட வீர குலசேகர பாண்டியத் தேவர் வருகிறார்'. எல்லோரும் எழுந்து நிற்கின்றனர். கூரிய கண்களும் அடர்ந்த மீசையும் விரிந்த மார்பும் திரண்டதோள்களும் முறுக்கேறிய கரங்களுமுடையவனான மாறன் குலசேகரப் பாண்டியன் மணிமுடி சிரமேந்த அத்தாணி மண்டபம் வந்து அரியாசனத்தில் அமர்கின்றான். சபையோர் அமர்கின்றனர். அரிவையர் அரசனுக்கு வெண்சாமரம் வீசுகின்றனர்.

அரசன் முறைப்பாடுடன் வந்திருக்கும் குடிமக்களை நோக்குகிறான்.

அமைச்சர்: (எழுந்து சிரம் தாழ்த்திய பின்) அரசே நேற்றிரவு நடுச் சாமப் பொழுதில் குடி மக்களின் வீட்டுக் கதவுகளைத் தட்டி அச்சமுட்டிவிட்டான் ஒருவன்.

அரசன்:-யார் அவன்?

கீரந்தை:-ஐயனே! கள்வர்கள்தான் இரவில் நடமாடுவார்கள்.

அரசன்:-கள்வன் இரவில் விழித்திருப்பவன்தான். ஆனால் வீட்டிலுள்ளோரை விழிக்கச் செய்து விட்டு கள்வனால் களவாட முடியுமா?

அமைச்சர்:- ஆமாம் அரசே, அது முடியாத காரியம் தான். ஆனால் ஒருவன் ஒரே வீதியில் இருளோடு இருளாக எல்லோர் வீடுகளின் கதவுகளையும் தட்டி குடி மக்களின் அமைதி குலைத்து அச்சமுட்டி அட்டகாசம் புரிந்திருப்பது மன்னிக்க முடியாத குற்றம். களவை விட மேலான குற்றம்.

அயலவன்:- ஐயனே! நாங்கள் தூக்கம் கெட்டு அஞ்சி நடங்கியிருந்தோம்.

அமைச்சர்:- அரசே! தங்கள் மேன்மையான செங்கோலின் நிழலில் குடி மக்களின் அமைதி குலைத்து கட்டுமீறி நடந்தவனை விரைவில் நம் ஒற்றர்கள் கண்டு பிடிக்க வேண்டும். அக்கயவனுக்கு கடுமையான தண்டணைவழங்கப்பட வேண்டும்.

(இச்சமயத்தில் அரசன் தானே கதவைத் தட்டியவன் என்றோ, அதற்கான காரணத்தையோ கூறவிரும்பவில்லை. வீணேநேரத்தையும் அவன் விரயமாக்கவிரும்பவில்லை)

அரசன்:-குற்றவாளிக்கு என்ன தண்டனை?

அமைச்சர்:- அரசே! அவனைக் கண்டு பிடித்து காரிருளில் கதவுகளைத் தட்டிய அவனது கரத்தைத் துண்டிக்கவேண்டும்.

அமைச்சன் சொன்னதுதான் தாமதம் விறுக்கென அரியாசனத்திலிருந்து எழுந்த மாறன் குலசேகரப் பாண்டியன் தன் உடைவாளை வீச்சாக உருவி தனது கரத்தினைத் துண்டித்தனன்.

இந்நிகழ்ச்சியையே ஒரு புலவர் கையரிந்தான் மாறன் கதவடித்த குற்றத்தால்" எனப் பாடிப் போந்தார்.

(முற்றும்.)



### 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகக் கண்ணோட்டம்

இரா. புத்திரசிகாமணி

# மலையகத்தில் நடமாடும் சேவை கண்துடைப்பா, இல்லை கேலிக் கூத்தா?

ஆனால், அங்கேயும் கூட சில தில்லு முல்லுகளும், சதிவேலைகளும் இடம்பெறுகின்றன.

அமைச்சர்களுக்கும் உயர் அதிகாரிகளுக்கும் தெரியாமலே இந்த நாசகார செயல்கள் இடம் பெறுகின்றன.

அண்மையில் அரசியல் விவகார, நல்லிணக்க அமைச்சர் டி.யூ.குணசேகர தலைமையில் அட்டனில் ஒரு நடமாடும் சேவை நடத்தப்பட்டது.

பிறப்பு, இறப்பு, விவாக, சான்றிதழ்கள் இல்லாதவர்கள், தோட்டத்துரைமாரின் அத்தாட்சிக் கடிதங்கள், சமய முறைப்படி நடந்த திருமணங்களுக்கு கோயில் நிர்வாகங்களின் கடிதங்கள், மற்றும் சத்தியக் கடதாசிகளை சமர்ப்பித்தால் அவை பரிசீலனை செய்யப்பட்டு அதே இடத்தில் குறிப்பிட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும் என பிரசாரப்படுத்தப்பட்டது.

இன்று மலையகத்தில் அதிமுக்கிய பிரச்சினையாக இருப்பது தேசிய அடையாள அட்டை. இவர்களிடம் பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத காரணத்தாலேயே தேசிய அடையாள அட்டைகளைப் பெற முடியவில்லை

தேசிய அடையாள அட்டைகளை வழங்குகிறோம். பிறப்பு இறப்பு சான்றிதழ்களை வழங்குகிறோம் என்று கூறிக் கொண்டு மலையகத்தில் அடிக்கடி நடமாடும் சேவைகளை நடத்துகின்றனர்.

இத்திட்டம் வரவேற்கத் தக்கது, பாராட்டக் கூடியது.

கிராம சேவகர்களிடமும், உதவி அரசாங்க அதிபர்களிடமும், பிறப்பு இறப்பு அதிகாரிகளிடமும் அலைந்து திரிந்து களைத்துப் போன தோட்டத் தொழிலாளர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாகவே அமைகின்றது.

இது அனைவராலும் பொதுவாகக் கூறப்படும் கருத்துகளும் பாராட்டுகளும்.

என்பதே அங்கு புதைந்துள்ள அடிப்படை உண்மை.

இதனால் 70 சதவீதமானவர்கள் பிறப்பு சான்றிதழ்களைப் பெறுவதற்காகவே முண்டியடித்துக் கொண்டு சென்றனர்.

குழந்தைகள் பிறந்ததற்கான தோட்டத் துரைமாரின் அத்தாட்சிக் கடிதங்களுடனேயே சென்றனர். அதில் தந்தையின் பெயர், தாயின் பெயர், பிறந்த பிள்ளையின் பெயர், பிறந்த திகதி, இடம் என்பவற்றை தோட்டத் துரைமார் உறுதிப்படுத்திய அத்தாட்சிக் கடிதங்களையும் சமர்ப்பித்துள்ளனர்.

ஆனால், அவர்களுக்கு வழங்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களில் தகப்பன் இல்லா பிள்ளை என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

தோட்ட நிர்வாகிகள் தாய், தந்தையரின் பெயர்களைக் குறிப்பிட்டே அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கி உள்ளனர்.

அப்படி இருந்தும் நடமாடும் சேவையில் கடமையில் இருந்த அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலங்கள் போல் அப்பன் இல்லாத பிள்ளைகள் என்றே பிறப்புச் சான்றிதழ்களை வழங்கியது ஏன்?

இதுவரை பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாதிருந்தது ஒரு குறை. ஆனால், இப்போதோ அப்பன் பேர் தெரியாத பிள்ளைகள் என்று அவமானப்படுத்தி உள்ளனர். அப்படியானால் இந்த அதிகாரிகள் திட்டமிட்டே தோட்டத் தொழிலாளர்களை அவமானப்படுத்துகின்றனரா?

ஒரு சமூகத்தை அவமானப்படுத்துவதில் இந்த அதிகாரிகளுக்கு என்ன அவ்வளவு ஆனந்தம்.

இதனை வேண்டுமென்றோ, அல்லது நடமாடும் சேவைகளைக் குறைகூற வேண்டும் என்றோ கூறவில்லை.

உண்மையாகவே ஆதாரத்துடன் கூறுகின்றோம். கினிகத்தேனை பிரதேசத்தில் கரோலினா என்று ஒரு தோட்டம். அங்கே பிறந்த

| | |
|---|---|
| பிள்ளையின் பெயர் | :- பணிமலர் |
| தாயின் பெயர் | :- வெள்ளசாமி நல்லபுரவி |
| தகப்பன் பெயர் | :- சுப்புராயன் இராஜேந்திரன் |
| பிறந்த திகதி | :- 10.12.1980 |
| பிறந்த இடம் | :- கரோலினா தோட்டம் |
| பதிவு இலக்கம் | :- 58 |

இவற்றை எல்லாம் உறுதிப்படுத்தி தோட்டத்துரையும், தோட்ட வைத்தியரும் சான்றிதழ் வழங்கி உள்ளனர்.

இவற்றை எல்லாம் வாங்கி வைத்துக் கொண்ட அதிகாரிகள் அந்தப் பிள்ளைக்கோ தகப்பன் இல்லாப்பிள்ளை என்று பிறப்புச் சான்றிதழ் வழங்கி உள்ளனர்.

அந்தப் பிள்ளையின் எதிர்காலப் பாதிப்புகளை இந்த அதிகாரிகள் சிறிதும் எண்ணிப்பார்க்கவில்லை.

பாடசாலையில் அப்பிள்ளையை ஆசிரியர்களும் சக மாணவ மாணவிகளும் சந்தேகக் கண் கொண்டே பார்ப்பார்கள்.

அடையாள அட்டை பெறுவதற்கு தந்தையின் பெயர் அவசியம். தகப்பனின் அல்லது தாயின் அடையாள அட்டை அவசியம். அவற்றின் இலக்கங்கள் அவசியம்.

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்திலேயே பிள்ளையின் தகப்பனின் பெயர் இல்லை என்றால் யாரை தகப்பன் என்று கூறுவது? எவருடைய அடையாள அட்டையை தகப்பனின் அடையாள அட்டை என்று கூறுவது? பாடசாலையில் பரீட்சை எழுதும் பொழுது தகப்பனின் பெயரை என்னவென்று எழுதுவது.

இதனால் ஏற்படும் அவமானங்களைத் தாங்காத அப்பிள்ளைகள் விபரீதமான முடிவுகளைக் கூட எடுக்க நேரிடும்.

இதற்கெல்லாம் காரணம் நடமாடும் சேவைகளில் கடமைக்குச் செல்லும் அதிகாரிகளின் கவனமே.

இவர்களுடைய அசட்டை ஒரு பிள்ளையின் எதிர்காலத்தையே நாசமாக்கி விடுகின்றது. இவ்வாறு வழங்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களால் என்ன பிரயோசனம்? இந்த நடமாடும் சேவைகளால் யாருக்கு நன்மை?

மேலே கூறப்பட்டது ஓர் உதாரணம் மட்டுமே. இதைப் போல் தான் பல சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன! இவைகளுக்கு எல்லாம் பரிகாரம் காண்பது எப்படி.

நடமாடும் சேவைகளை ஊர் மெச்ச நடத்திவிட்டால் மட்டும் போதாது?

அதில் உண்மையான பலன் ஏற்பட வேண்டும். அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் இதனைக் கவனிப்பார்களா?

-சூரிய கண்ணன்-

---



## டேஸ்ட் கடை தணிகாசலம்

# அயோக்கியர்களை அரசியல்வாதிகள் ஆதரிக்கலாமா?

தணிகாசலம்அண்ணன் கொழும்பிலிருந்து கினிகத்தேனை வழியாக மஸ்கெலியா நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். பிரயாணக் களைப்பால் சற்று அசதியால் நித்திரையாகிப் போனார்.

திடீரென பஸ் நிறுத்தப்பட்டது. வீதியெங்கும் மாணவர்கள், பெற்றோர்கள், சமூகத் தொண்டர்கள் என ஒரே கூட்டம். கினிகத்தேனை நகரமே அல்லோலகல்லோலப்பட்டது.

தூக்கம் கலைந்த தணி அண்ணன் திடுக்கிட்டு கீழே இறங்கிச் சென்றார்.

மாணவர்களின் கைகளில் பதாகைகள், “வேலியேபயிரைமேயாதே!”, “காடைத்தனம் புரியும் ஆசிரியருக்கு தண்டனை வழங்கு”, “அரசியல்வாதிகளே அயோக்கியர்களுக்குத் துணைபோகாதீர்கள்.”

என்ற வாசகம் எழுதப்பட்ட சுலோக அட்டைகளுடன் ஆக்கிரோசமாக அந்தப் பாடசாலையை நோக்கிச் சென்றனர்.




தணிகாசலம் அண்ணன் அந்த மாணவர்களை நோக்கிச் சென்று விவரம் அறிந்தார். “அண்ணே வாங்க அட்டகாசம் எங்கே நடக்கிறதோ, அங்கே தணிகாசலம் அண்ணன் கட்டாயம் வருவார் என்று தெரியும்” என மாணவர் தலைவன் தணி அண்ணனை வரவேற்றார்.

“என்ன தம்பி இப்படி திடீர் என்று ஆர்ப்பாட்டம், போராட்டம்என்று குதித்து விட்டீர்கள்” என்றார் தணி அண்ணன்.

“அண்ணனுக்குத் தெரியும். ஒரு ஆசிரிய மிருகம் எங்கள் சகோதரிகளில் ஒருத்தியை சீரழித்து விட்டார். அவரைக் காப்பாற்ற அதிபர் இடமாற்றத்திற்கு சிபார்சு செய்துவிட்டார்.

விசாரித்து தண்டனை வழங்க வேண்டிய கல்வி அதிகாரி அந்த மிருகத்தைக் காப்பாற்ற இடமாற்றம் கொடுத்து விட்டார்.

எங்களுடைய வாக்குகளை மட்டும் கேட்டுவரும் மலையக அரசியல்வாதிகள் கண்டும்காணாதது போல் இருக்கின்றனர்.

இவர்களுக்கு எல்லாம் வழக்கு விசாரணை, ஒழுங்கு நடவடிக்கை எல்லாம் சரிப்பட்டுவராது. அடிக்கு அடி கொடுக்க வேண்டும். பழிக்கும் பழி, அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டான்” என ஆக்ரோசத்துடன் கூறினார் ஒரு பெற்றோர்.

இப்படிப் பேசிக் கொண்டே ஆர்ப்பாட்ட ஊர்வலம் பாடசாலையை அண்மித்து விட்டது. அப்போது அதிபர் எட்டிப் பார்த்தார். அதோ வருகிறார் காவாலிகளுக்கு அடைக்கலம் கொடுக்கும் அதிபர் எனக் கூறிக்கொண்டே ஓடிய மாணவர் கூட்டம் அதிபரைப் பிடித்து தரதரவென்று வீதிக்கு கொண்டுவந்து விட்டது.

அதிபர் ஏதோ சமாதானம் சொல்ல மேலும் பல மாணவர்கள் கூடி அதிபரின் மேற்சட்டையைக் கழற்றி வெற்றுடம்புடன் வீதியில் அமர்த்திவிட்டனர். பாடசாலைக்குள் ஒரே பதற்றம்.

இந்த விடயம் எப்படியோ, கல்வி அலுவலகத்திற்கு எட்டிவிட்டது. கல்வி அதிகாரியும் பதறிப்போய் ஜீப்பில் வந்து இறங்கினார்.

“அண்ணே, அண்ணே அவர்தான் வீடு எரிக்கும் ராஜாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரி.

இந்த பெரிய மனிதன்தான் அந்த அயோக்கிய ஆசிரியருக்கு உடனடியாக இடமாற்றம் கொடுத்து ஆளை மாற்றியவர். இவரையும் சும்மா விடக்கூடாது” என கல்வி அதிகாரியையும் பிடித்து இழுத்து அதிபருக்கு அருகில் தரையில் இருத்தி விட்டனர்.

அதிபரையும், அதிகாரியையும் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. அப்போது அங்கே வந்த ஆசிரியை அவர்களுக்கு வக்காலத்து வாங்கினார். “இப்படியா உயர் அதிகாரிகளை அவமானப்படுத்துவது” என்று பொரிந்தார்.

“என்ன மிஸ் நீங்களா அவமானத்தைப் பற்றி பேச வந்துவிட்டீர்கள். உங்களை அல்லது உங்கள் பிள்ளையை, இப்படிச் செய்திருந்தால் இப்படித்தான் வக்காலத்து வாங்குவீர்களா? தயவுசெய்து இந்த இடத்தைவிட்டுப் போய்விடுங்கள்” என்று விரட்டாத குறையாக அனுப்பி விட்டனர்.

மாணவர் கூட்டம் கட்டுப்பாடற்று கூடியது. அடக்க முடியவில்லை.

பொலிஸார் வந்துவிட்டனர். எப்படி எல்லாம் கேட்டும் மாணவர்கள் விடவில்லை. அதிபரையும், கல்வி அதிகாரியையும் விடுவிக்க மறுத்துவிட்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில் அங்கு வந்த அரசியல்வாதி ஒருவர் ஆசிரியர்களுக்கு ஆதரவாக வந்து பேசினார்.

மாணவர்களின் ஆத்திரம் அதிகமானது. மடை திரண்ட வெள்ளம் போல் அரசியல் வாதிமீது பாய்ந்தனர்.

அப்போது அந்த அரசியல்வாதியோ அந்த நாய்களை சுட்டுத்தள்ளுங்கள் என்றார். அரசியல் வாதியின் மெய்ப்பாதுகாவலர்கள் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

மூன்று மாணவர்கள் அதே இடத்தில் சுருண்டு விழுந்தனர்.

ஒரு அப்பாவி மாணவியின் கற்பை சூறையாடியவர்களைப் பாதுகாக்க வருகின்ற அரசியல் வாதிகள், அந்தமாணவிக்காக குரல் கொடுத்த மாணவர்களை சுட்டுத் தள்ளுகின்றனர். இது நியாயமா எனக் கேட்டுக்கொண்டே முன்வந்த ஒரு பெற்றோரின் மீதும் விழுந்தது ஒரு சூடு. ஐயோ அம்மா என்று அலறிக்கொண்டே விழுந்தார்.

இந்த அதிர்ச்சியான சத்தத்தைக் கேட்டு திடுக்கிட்டு எழுந்தாள் திலகா. உடம்பெல்லாம் ஒரே வியர்வை. ஒரு முறை தன்னைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டாள். அப்போது தான் தான் கண்டது எல்லாம் கனவு என்பதை உணர்ந்தாள்.

சுடர்ஒளி வாரமலரில் வந்த சூரியக் கண்ணனின் கட்டுரையை வாசித்துக் கொண்டே அன்று உறங்கிப் போனாள்.

அப்பொழுது ஏற்பட்ட கனவுதான் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓராண்டு சென்றும் எம் நெஞ்சைவிட்டு அகலாத நினைவலைகள்

தாயின் மடியில் 12.07.1949 — இறைவன் அடியில் 14-11-2003

திருமதி **செல்வராஜா பேர்ணதேத்** (செல்வமணி)

அன்னைக்குச் சமர்ப்பணம்

அன்பின் அம்மா! தாயே நீங்கள் கருவறையைத் தற்கொடையாக தீனீர்கள்!

தரணியில் எம்மைத் தலைநிமிர வைத்தீர்கள்!

காப்பரணாக நின்ற உங்களை எம்மிடம்

இருந்து பிரித்து காலன் கண் கலங்கவைத்தானோ எங்களை?

— அன்புக் கணவர், சகோதரர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## திருகோணமலையில்... சுடர் ஒளி — உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

## EXPOAIR எக்ஸ்போ எயார்

*your friend in the skies...* வானில் உங்கள் நண்பன்...







யாழ் பயணத்தின் போது
றோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 0112372952/3 Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

## உங்களின் இக்காலத் தெரிவுக்கேற்ப மீண்டும் புதுப்பொலிவுடன் வன்னியில்...

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை உள்ளடக்கிய திருமண மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுர சாறிகள், பட்டுச்சாறிகள், பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண், சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள், சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்.







# குமரகுரு

**KUMARAKURU TEXTILE & FANCY HOUSE**
Yarl Road, Kilinochchi.
Tel: 021 228 5971

**புடைவை அழகுப்பொருள் வாணிபம்**
யாழ் சாலை, கிளிநொச்சி

# கோடன்

## தானியங்கி பொறியியல் நிறுமம்

யாழ். சாலை, பரந்தன் சந்தி, கிளிநொச்சி.





வன்னி, யாழ் ஊர்தி உரிமையாளர்களின் நீண்டகால கனவை நனவாக்க உங்கள் காலடியில் ஊர்திகளின் அனைத்துப் பணிகளையும் கணனி மயப்படுத்தப்பட்டு பொறியியல் வல்லுநர்களின் பணி உறுதிப்படுத்தலுடன் ஒரே கூரையின் கீழ் செய்துகொள்ள பரந்தன் சந்தியில் புதுப்பொலிவுடன் உதயமாகியுள்ள

## கோடன் தானியங்கி பொறியியல் நிறுமம்

எம்பணியில் என்றும் நீங்கள் மனம் மகிழ்ந்திட நாம் வழங்கும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைகள்

- எவ்வகை ஊர்திகளையும் மிகச் சிறந்த முறையில் தூய்மிப்பி செய்யலாம்.
- ஊர்திப்பொறியியல்
- உமஷாக்கி, ரீ.வி.எஸ். பிறீசேவிஸ்
- ஊர்தி வர்ணப்பூச்சு
- இன்ஜெக்ரர் பம் சேவீஸ்
- அனைத்து வகையான போறிங் வேலைகளும்
- கிராங் வெட்டுதல்
- கடைச்சல்
- மின்னிணைப்பு
- வில்லுத்தகடு பொருத்துதல்
- றேடியேற்றர்
- ரிங்கர்
- சீற் தையல் வேலை

**கணனிமயப்படுத்தப்பட்ட பணிகள்**

- வீல் எலமன்
- வீல் வலன்ஸ்
- குளிரூட்டி பொருத்துதல்
- சொக்கச் சோபர் ரெஸ்ரல்
- ஸ்கானிங் மெசின்
- ஏ.ரி.எவ். சேஞ்சர்
- கெற்லைற் செற்றிங்
- டிஜிட்டல் முறையில் காற்று சீர்செய்தல்
- ரயர் மாற்றுதல்

அனைத்து ஊர்தி உதிரிப்பாகங்களை மிக விரைவில் பெற்றுக்கொள்ள

**Mitsubishi, Toyota, Isuzu, Mazda, Nissan, Leyland, tata, Tafe, Mahendra, MF240**

இரும்பிலான அனைத்துக் கூரைவேலைகளும், கிறில், கதவுவேலைகள் கட்டடம் நிர்மாணிக்கப்படும் பகுதியில் வந்து பொருத்திக் கொடுக்கப்படும்.

''உங்களது தேவையே எங்களது சேவை''

**KODAN**
**Auto Mobile Engineering Company**
**Jaffna Road, Paranthan Junction, Kilinochchi.**



இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், ... என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 நவ. 21 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org